Ri 4/5.79

மொழியியல்

தொகுதி 2 டிசம்பர் – பிப்ரவரி எண் 3

பதிப்பாசிரியர் குழு

ச. அகத்தியலிங்கம்

சுப. திண்ணப்பன்

கி. அரங்கன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1979

T13375
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்	டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (மதுரை)
துணைத் தலைவர்	டாக்டர் முத்துச்சண்முகன் (மதுரை)
செயலாளர்	டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)
பொருளாளர்	டாக்டர் ந. குமாரசாமி ராஜா (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்	டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்)
	டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் (சென்னை)
	டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோயில்)
	டாக்டர் கோ. விஜயவேணுகோபால் (மதுரை)
	திரு தா. எட்வர்ட்வில்லியம்ஸ் (அண்ணாமலைநகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 200-00	US $ 50-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்கட்கு)	ரூ 300-00	US $ 75-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 20-00	US $ 5-00
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்கட்கு)	ரூ 30-00	US $ 7-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்க்கு)	ரூ 10-00	

மொழியியல் 2.3 (1978)

சங்க இலக்கியத்தில் வேற்றுமை உருபுகள் — ஓர் ஆய்வு

V. S. அருள்ராஜ்,
அண்ணாமலைநகர்.

1.0 முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் வேற்றுமை விளக்கம் பற்றி ஒன்றும் கூறிற்றிலது. வேற்றுமை பற்றி நன்னூலும், இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும்

'பொருள் வேற்றுமை செய்வன...... வேற்றுமை'
[நன் – 291; இ.வி. – 193]

என்றும்

''வேற்றுமைப் படுத்தலின் வேற்றுமையாம்''
[தொ. வி. – 55]

என்றும் வேற்றுமைக்கு விளக்கம் கூறுகின்றன.

டாக்டர் அகத்தியலிங்கம் அவர்கள் வேற்றுமை என்றால் என்ன என்பதற்கு இரண்டு வகையான விடைகளைக் கொடுப்பதைக் காணலாம்.

1. பெயர்க்குத் தொடரிலுள்ள நிலைகளை வேறுபடுத்துவது அல்லது மாற்றுவது வேற்றுமை.

இதனையே விளக்கமாகக் கூறினால்

கிருஷ்ணன் அடித்தான்

என்ற தொடரிலுள்ள கிருஷ்ணன் என்ற பெயர் எழுவாய் நிலையில் உள்ளது. இந்த பெயரோடு 'ஐ' உருபைச் சேர்த்தவுடன்

கிருஷ்ணனை அடித்தான்

என அமையும் தொடரில் **கிருஷ்ணன்** என்ற பெயர் செயப்படு பொருள் நிலைக்கு மாறுகிறது. அதாவது —'ஐ' உருபு கிருஷ்ணன் என்ற பெயரை எழுவாய் நிலையிலிருந்து செயப்படு பொருள் நிலைக்கு மாற்றுகிறது.

2. தொடர்களில் பெயருக்கும் வினைக்கும் உள்ள இலக்கண உறவுகளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை என்றும் கூறிச் செல்வதைக் காணலாம்.

டாக்டர் அகத்தியலிங்கம் அவர்கள் வேற்றுமை பற்றிக் கூறும் போது எளிய ஒரு வாக்கியத்தில் பல்வேறு பெயர்ச் சொற்களையும் பயனிலையாக ஒரு வினைச் சொல்லையும் காணலாம் என்றும் அந்த பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொல்லுக்கும் இடையே ஒருவிதமான பொருள் தொடர்பு இருப்பதனைக் காணலாமென்றும் அந்த பொருள் தொடர்பே வேற்றுமை என்று அழைக்கப்படு கின்றது என்றும் கூறிச் செல்கின்றார்.

1.1. இதுவரை நாம் வேற்றுமை என்றால் என்னவென்று பார்த்தோம். இனி வேற்றுமை உருபுகள் என்றால் என்ன; எவை எவை வேற்றுமை உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன என் பதைக் காண்போம். பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொல்லுக்கு மிடையே உள்ள பொருள் தொடர்பைச் சில உருபுகள் காட்டி நிற்கின்றன. அந்த உருபுகளையே வேற்றுமை உருபுகள் என்று அழைக்கின்றோம். சில மொழிகளில் ஒட்டுக்களும், சில மொழிகளில் சொல்லுருபுகளும் [Post-positions] சில மொழிகளில் ஒட்டுக்களும்,

சொல்லுருபுகளும் வேற்றுமையைக் காட்டி நிற்பதைக் காணலாம். இத்தகைய உருபுகள் இணைந்த பெயர்ச் சொற்களையே வேற்றுமைச் சொற்கள் என அழைக்கின்றோம். ஒட்டுக்களையும், சொல்லுருபுகளையும், வேற்றுமை உருபுகள் என்று கூறுகின்றோம். வேற்றுமை உருபுகள் மூன்று வகைப்படும் என்று இலக்கணக் கொத்து ஆசிரியர் கூறுகின்றார்.

"உருபுவேறு உருபு சொல்உருபு என்ன
வேற்றுமை உருபு மூன்றுஎன விளம்புவர்".

[இ.கொ. - 16]

எ.டு. வாளால் வெட்டினான் — உருபு
வாளின் வெட்டினான் — வேறு உருபு
வாள்கொண்டு வெட்டினான் — சொல்லுருபு.

வாளால் வெட்டினான் என்பதில் மூன்றன் உருபாகிய -ஆல் தனக்குரிய கருவிப் பொருளில் வந்துள்ளது வாளின் வெட்டினான் என்பதில் ஐந்தன் உருபாகிய -இன் தனக்கு உரிய ஏதுப் பொருளால் மூன்றாவதன் கருவிப்பொருளைச் சுட்டி நிற்கிறது. இனி வாள் கொண்டு வெட்டினான் என்பதில், கொண்டு என்னும் சொல் -ஆல் என்ற உருபின் பொருளில் வந்துள்ளது. இவை முறையே உருபு - வேறுஉருபு - சொல்லுருபு என்பனவற்றிற்கு எடுத்துக் காட்டாயின.

1.2. தமிழ் நூற்களில் வேற்றுமைகள் ஏழு என்றும், எட்டு என்றும், ஆறு என்றும் கூறப்பட்டுள்ளன. பொருள் அடிப்படையிலே வேற்றுமைகள் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு வேற்றுமைக்கும் அதனதன் உருபுகள் வழங்கப் பட்டிருக்க வேண்டும் என்பதும் நாம் இலக்கண நூற்களைப் பயிலும்போது கண்டு கொள்கின்றோம். தொல்காப்பியம் சூத்திரம் 590-ல்

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்

என்று கூறிச் செல்வதைக் காணலாம். தொல்காப்பியத்தை நோக்கும்போது தொல்காப்பியர் ஒரு வேற்றுமைக்கு ஓர் உருபு

என்ற நெறியில்தான் இலக்கணம் கூறிச் செல்கின்றார். தொல் காப்பியர் சூத்திரம் 113–ல்

"ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே".

என்று ஆறு வேற்றுமைகளுக்கும் ஒவ்வொரு உருபைக் கூறிச் செல்கின்றார். இலக்கணக் கொத்து ஆசிரியரும் தம்முடைய சூத்திரம் 22 – ல்

"ஒருவேற் றுமைக்குஓர் உருபே வருதலும்
ஒருவேற் றுமைக்கு பலஉருபு வருதலும்
எனஇரு கூறாய் வரும்உரு புகளே;
ஐ – கு ஒன்றே; அல்லன பலவே".

என்று தெரிவிக்கின்றார்.

இரண்டாம் வேற்றுமை 'ஐ' என்ற ஒரே உருபினையும் நான்காம் வேற்றுமை 'கு' என்ற ஒரே உருபினையும் பெற்றுவரும் என்றும் ஏனையவேற்றுமைகள் ஒன்றற்கு மேற்பட்ட உருபுகளைப் பெற்றுவரும் என்பது அவரது கருத்தாகும். முதல் வேற்றுமைக்கு ஆயவன், ஆனவன், ஆவான், ஆகின்றவன் முதலியன உருபு என்றும், மூன்றாம் வேற்றுமைக்கு –ஆல், –ஆன், –ஓடு, ஒடு என்பனவும். ஐந்தாவதற்கு –இல்,-இன் என்பனவும், ஆறாவதற்கு –அது, ஆது, –அ என்பனவும், ஏழாம் வேற்றுமைக்கு கண், கால், கடை, இடை, முதலிய பலவும் உருபுகளாம் என்கின்றார். மூன்றாம் வேற்றுமைக்கு உடன், கொண்டு முதலியனவும், நான் காவதற்கு ஆக, பொருட்டு, நிமித்தம், முதலியனவும், ஐந்தா வதற்கு நின்று, இருந்து, விட்டு, முதலியனவும் ஆறாவதற்கு உடைய என்பதும் சொல்லுருபுகளாம் என்று கூறுகின்றார். இரண் டாவது வேற்றுமைக்கு –'ஐ' என்கிற ஒன்றைத் தவிர வேறு உருபோ சொல்லுருபோ இல்லை என்கின்றார். ஒவ்வொரு வேற்றுமை உருபுக்கும் பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. சங்க காலப் பாடல்களைக் காண்போமேயானால் ஒரு வேற்றுமைக்கு பல உருபுகள் வந்துள்ளதைக் காணலாம்.

1.3 இக்கட்டுரையில் நாம் சங்க இலக்கியத்தில் எந்த எந்த உருபுகள் எந்த எந்த வேற்றுமைப் பொருளுக்கு பயன்படுத்தப் பட்டு வந்தன என்று பார்ப்போம். எழுவாய் வேற்றுமைக்கு சங்க இலக்கியத்தில் உருபுகள்கொடுக்கப்படவில்லை. உதாரணமாக

யான் யாய் அஞ்சுவல் [நற் : 72-6]

என்னும் வாக்கியத்தில் **யான்** என்பது **அஞ்சுவல்** என்னும் வினைக்கு எழுவாய். பெயரே எழுவாயாக உபயோகப் படுத்தப் பட்டுள்ளது. ''எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே'' ஆதலின், அதனை விடுத்துப் பெயர்பொருளை வேறுபடுக்கும் ஏனைய ஏழுமே வேற்றுமை என்பர் ஒருசாரார். எழுவாய் வேற்று மையும், விளி வேற்றுமையும் பெயரும் பெயரது விகாரமும் ஆதலின், அவை தம் முடிக்குஞ் சொல்லோடு முடியும்வழி அவ்வழித் தொட ராதலின், அவற்றை விடுத்து ஏனைய ஆறுமே வேற்றுமை என்பர் இன்னொரு சாரார். சங்க இலக்கியத்திலும் எழுவாய் வேற்றுமை யும் விளி வேற்றுமையும் முறையே பெயரும், பெயரது விகாரமும் கொண்டு வருவதாலும் அவற்றிற்கு உருபுகள் இன்மையாலும் இவை இரண்டையும் பற்றி இக்கட்டுரையில் அதிகம் ஆராயப்பட வில்லை. விளி வேற்றுமையைப் பார்க்கும்போது அங்கு பெயரில் நீட்சியோ குறைவோ ஏற்பட்டு விளி வேற்றுமையைக் காட்டி நிற் கின்றது. அங்கு உருபுகள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக

நம்பி என்பது நம்பீ என்று பெயரில் நீட்சி ஏற்பட்டு விளி வேற்றுமையை உணர்த்தி நிற்கின்றது

1.4. சங்க இலக்கியத்தில் மற்ற வேற்றுமைகளின் உருபு களைப் பற்றி ஈண்டுக் காண்போம். இரண்டாம் வேற்றுமைக்கு சங்க இலக்கியத்தில் -ஐ, -இன், -கு, வயின், -ϕ ஆகிய உருபு கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எடுத்துக்காட்டுகள் வருமாறு

[-ஐ] பூக்கஞு லூரனை யுள்ளிப் [ஐங் : 16-3]

'மலர் நிரம்பியதுமாகிய ஊரையுடைய

நந்தலைவனை நினைந்து'

[-இன்] வாங்கிய நுசுப்பின் [திருமுருகு : 14]

'வளைந்து நுடங்கிய இடையினையும்'

[–கு] உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
[சிலம்பு : பதிகம் 56]

"புகழமைந்த கற்புடை மகளை இவ்வுலகத்து மக்களேயன்றி அமரர் முதலிய உயர்ந்தோரும் சென்று வழிபாடு செய்வர் என்பதூஉம்"

[வயின்] ...... நம் வயின்
மறந்தாண் டமைதல் .. [குறுந் : 218–6,7]

'நம்மை மறந்துவிட்டு அவ்விடத்திலே தங்குதல்'

[–ϕ] வென்வே லண்ணற் காணா ஹுங்கே [புறம் – 141–7]

'வென்றி வேலையுடைய தலைவனைக் காண்பதன் முன்'

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளை உணர்த்தும் வேற்றுமையாகக் காணப்படுகின்றது.

1.5. மூன்றும் வேற்றுமை

மூன்றும் வேற்றுமை என்றதும் 1. கருவி வேற்றுமை 2. உடனிகழ்ச்சி வேற்றுமை என்ற இரண்டு வேற்றுமைகள் நினைவிற்கு வருகின்றன. ஆயினும் –ஓடு என்ற ஒரே உருபையே இந்த இரண்டு வேற்றுமைகளுக்கும் காப்பியர் கூறிச் செல்கின்றார் சங்க இலக்கியத்திலும் நாம் இந்த இரண்டு வேற்றுமைகளையும் காணலாம். அதோடு ஒவ்வொன்றிற்கும் பல வேற்றுமை உருபுகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையையும் காணலாம்

1.5.1. கருவி வேற்றுமை

கருவி வேற்றுமை என்பது கருவிப் பொருளையும், காரணிப் பொருளையும் கொடுப்பதைக் காணலாம். கருவி வேற்றுமைக்கு சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உருபுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

–ஓடு, –ஆன், –ஆல், –கு, –இன், –இல், கொண்டு, –ϕ எடுத்துக்காட்டுகள்:-

[-ஒடு] எனைப்பல் யானையு மம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே
[புறம் : 63 – 1,2]

''எத்துணையும் பலவாகிய யானையும் அம்பால் கலங்கி இனி மேலுண்டாக்கும் போரின்றிப் படையிடத்துப் பட்டன''

[-ஆன்] வேந்து தந்த பணி திறையாற்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்.. ... [புறம் : 22–26, 27]

''மாற்றரசர் பணிந்து தந்த திறையால் தம்மை அடைந்த வருடைய சுற்றத்தை நிறைக்கும்''

[-ஆல்] வில்லினான் எய்தலோ இலர்...... [கலி : 137–11]

''வில்லினால் எய்தற் றொழிலைச் செய்தலோ உடையரல்லர்''

[-கு] நினைஇய நினக்கோ அறியுநள் நெஞ்சே ....
[நற் : 44–5]

''நெஞ்சே! கருதிவந்த நின்னாலோ அவள் அறியத்தக்காள்?''

[-இன்] ... கண்ணின் நோக்கி
முனியா தாடப் பெறினிவள்...... [நற் 53–9, 10]

''கண்ணால் நோக்கி நீராட்டத்து வெறுப்பின்றி ஆடப் பெற்றால்''

[-இல்] தோல் துவைத்தம்பிற் றுளை தோன்றுவ [புறம்:4–5]

''பரிசைகள் ஒலித்துத் தைத்த அம்புகளால் துளை தோன்றுவன்''.

[கொண்டு] சிறுகோல் கொண்டு வியலறை
மாரிமொக்குள் புடைக்கு நாட [ஐங் 275–2,3]

''சூரலினது சிறிய கோலினால் அகன்ற கற்பாறையின் மிசை மழை பொழிதலானே தோன்றா நின்ற குமிழிகளைப் புடைத்துடைக்கின்ற நாட்டையுடைய பெருமானே''.

[-ϕ] கல் உயர் நேரிப் பொருநன் [பதி. 67-22]

"கற்களால் உயர்ந்த நேரி மலைக்குரிய பொருநனும்."

1.5.2. உடனிகழ்ச்சி வேற்றுமை:

– ஒடு, - ஓடு, –ஆல், கண், உடன், வயின், -ϕ ஆகிய உருபுகள் உடனிகழ்ச்சி வேற்றுமைக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

[-ஒடு] திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி [புறம் 2:19]

"வேறுபாடு இல்லாத சூழ்ச்சியையுடைய மந்திரிச் சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கி"

[-ஓடு] பலரோடு உண்டல் மரீஇயோனே [புறம் 234-6]

"பலரோடுங் கூடி யுண்டலை மருவியோன்"

[-ஆல்] துளங்கியலாற் பணையெருத்திற் [புறம் 15-7]

"அசைந்த தன்மையோடு பெரிய கழுத்தினையும்"

[கண்] விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை [புறம் 326-10]

"விழுக்காகிய தசையைப் பெய்து சமைக்கப்பட்ட தயிரோடு கூடிய கூழையும்"

[உடன்] அரசுடன் பொருத வண்ண னெடுவரை [புறம் 158-2]

"வேந்தருடனே பொருத தலைமையையுடைய நெடிய மலைக் கண்"

[வயின்] ...நீ கடுத்தோள் வயின் அனையேன் [அகம் 166-8]

"நின்னர்ல் ஐயுறப் பெற்ருளுடன் புனலாடி"

[ϕ] கன்று புணர் பிடிய [பதி : 12 – 13]

"கன்றோடு கூடிய பிடிகளையுடைய"

1.6. நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு சங்க இலக்கியத்தில் –கு, -இன், –ஒடு, –அய், மாட்டு, திறத்து, வயின், –ϕ ஆகிய உருபுகள் உபயோகப் படுத்தப்பட்டு வந்துள்ளன.

[–கு] பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி [புறம் : 6–16]

"பரிசிலர்க்கு வரிசையின் வழங்கி"

[–இல்] ... ... விழவில்
செல்வாம் ... ... [குறுந் : 223–1, 2]

"விழாவிற்குச் செல்வோம்".

[–ஒடு] முடமுதிர் பலவி னத்த நும்மொடு
கெடுதுணை யாகிய தவரோ... [நற் : 26–6]

"நீயிர் தமியராய்ச் சென்று வருந்தாது நுமக்குத் துணையாக வந்த தவற்றினாலோதானோ?"

[–அய்] ... சாற்றுது நும்மை [புறம் : 104–1]

"நுமக்கு நாங்கள் அறிவிப்போம்"

[மாட்டு] மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே
[குறுந் : 218–7]

"மறந்துவிட்டு அவ்விடத்திலேயே தங்குதல் வன்மையுடைய தலைவர்க்கு"

[திறத்து] நந்திறத் திரங்குமிவ் வழுங்கல் ஊரே [குறுந்:289–8]

"கலக்கத்தை யுடைய இவ்வூரினர் நம்பொருட்டு இரங்கா நின்றனர்".

[வயின்] பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
[குறுந் : 20–2]

"நிலையில்லாத பொருளைக் கருதி அதன் பொருட்டுப் பிரியக் கருதுவோர் அறிவுடையரே ஆனால்"

[–ф] கடவுள் அஞ்சி [பதி : 31-18]

"தேவர்கட்கு அஞ்சி"

1.7. அய்ந்தாம் வேற்றுமை

அய்ந்தாம் வேற்றுமையின் உருபுகளாக –இல், –இன், –ஒடு, -ஆன், –கு, உள், வயின், உளி, தலை, –ф ஆகியன சங்க இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டுக்களைக் கீழே காண்போம்.

[–இல்] முதுமரப் பொந்திற் கதுமென வியம்பும் [புறம் 364–11]

'முதுமரத்தின் பொந்துகளிலிருந்து கதுமெனக் கூவும்'

[–இன்] அதனினும் கொடியள் தானே... [நற் 97–5]

"அவ் யாற்றினுங்காட்டில் மிகக் கொடியளாயிரா நின்றாள்".

[–ஒடு] ... கொண்கன் தந்த
காதல் நம்மொடுநீங்கா மாறே [நற் 231–8,9]

"கொண்கன் கொடுத்த காதலானது நம்மைவிட்டு நீங்காமையினாலே".

[–ஆன்] போதல் ஒல்லாளென் நெஞ்சத் தானே [நற் 201–12]

"என் நெஞ்சினின்றும் நீங்கி ஒழிபவள் அல்லளாயிரா நின்றாள்".

[–கு] இதற்கிது மாண்டது [குறுந் 184-3]

"இப்பொருளுக்கு இப்பொருள் தக்க மாட்சிமையுடையது".

[உள்] கள்ளுடைக் கலத்த ருள்ளூர்க் கூறிய [புறம் 178–8]

"வீரபானத்தையுடைய கலத்தினராய் அதனையுடைய செருக்கான் ஊருக்குள்ளே யிருந்து சொல்லிய வீரம் மேம்பட்ட வார்த்தையை".

[வயின்] இவள் வயிற்
பிரிந்தனிர் அகறல் சூழின் ... [அகம் 319-10,11]

[உளி] மந்திர வதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும் [திருமுரு 95,96]

"மந்திரத்தினாலே மெய்ந்நூலுரைத்த முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி நினையா நிற்கும்".

[தலை] ... இனன் தலைப் பிரிந்த
புன்கண் மடமான் ... [குறுந் 272-3,4]

"தனது கூட்டத்தினின்றும் பிரிந்த துன்பத்தையுடைய மடப்பம் பொருந்திய பெண்மான்".

[–ϕ] முல்லை வீகழல் தாஅய் வல்லோன் [அகம் 134-5]

"முல்லையினின்றும் உதிர்ந்த நன்ருகிய பல பூக்களும் பரந்து கிடத்தலால்".

ஒருவே மாகிய புன்மை நாம் உயற்கே [குறுந்: 57-6]

"பிரிவினாலே ஒருவராகித் தனித்துறையும் சிறுமையினின்றும் யாம் தப்புதற் பொருட்டு"

நின்று, இருந்து, விட்டு ஆகிய வினையெச்சங்களும் சங்க இலக்கியங்களில் ஐந்தாவது வேற்றுமைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

[நின்று] குணதிசை நின்று குடமுதற் செலினும் [புறம்: 386-20]

"கீழ்த்திசையினின்று மேற்றிசைக்கு சென்றாலும்"

[இருந்து] .. .. நாரை
காலை யிருந்து மாலைச் சேக்கும் [அய்ங் : 157-2,3]

"நாரையானது காலைப் பொழுதிலிருந்தே இரவினும் அங்கே உறைதற்குக் காரணமான"

[விட்டு] எம்விட்டகன்ற சின்னாட் சிறிதும் [அகம் : 78-13]

"எம்மைவிட்டு அகன்றிருந்த சில நாட்களுள்ளே".

1.8. ஆறாவது வேற்றுமை

ஆறாவது வேற்றுமைக்கு -அது, -அ, -இன், -இல், உடை, -ϕ ஆகிய உருபுகள் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன.

[-அது] அளிதோ தானே பாரியது பறம்பே [புறம் : 109-1]

"இறங்கத்தக்கது பாரியுடைய பறம்பு".

[-அ] நின்ன கண்ணியு மார் மிடைந்தன்றே... [புறம் : 45-3]

"நின்னுடைய கண்ணியும் ஆத்தியால் செறியக் கட்டப் பட்டது.

[-இன்] செம்பொறிச் சிலம்பி னிளையோ டந்தை [புறம்:341-3]

செவ்விய பொறிகள் பொறிக்கப்பட்ட சிலம்பினையுமுடைய இளையவட்குத் தந்தையாயினான்".

[-இல்] நாடு கெழு திருவிற் பசும்பூட் செழியன் [புறம் : 76-9]

"நாடு பொருந்திய செல்வத்தினையுடைய பசும் பொன்னாற் செய்த பூணையணிந்த நெடுஞ்செழியனது".

[உடை] வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே [குறுந் : 11-8]

"அவரைக் காணும் பொருட்டு ஆறு செல்லுதலை யான் ஆராய்ந்து துணிந்துள்ளேன் அவருடைய நாட்டிடத்தே"

[-ϕ] தெவ்வர் இருந்தலை [பதி : 41-20]

"பகையரசருடைய பெருந்தலைகளை".

19. ஏழாவது வேற்றுமை

ஏழாவது வேற்றுமைக்கு சொல்லுருபுகளே அதிகமாகப் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளன. சங்க இலக்கியங்களில் ஏழாவாது வேற்றுமைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள உருபுகளைக் கீழே காண்போம்.

–இல்	–இன்	–ஒடு	–ஆன்
–கு	கண்	கால்	புறம்
அகம்	உள்	உழை	கீழ்
மேல்	பின்	சார்	அயல்
புடை	முன்	தலை	இடை
கடை	வலம்	இடம்	வயின்
வழி	முதல்	பால்	மாட்டு
வாய்	உடன்	மருங்கு	திறம்
மிசை	வரை	உம்பர்	மீமிசை
ϕ			

[-இல்] வாள்போழ் விசும்பில் வாள்உறை சிதறி [திருமுரு. 8]

''ஞாயிறும் திங்களும் இருளை நீக்கும் வானிடத்தே பெருமை யுடைய துளியை முற்படச் சிதறி''.

[–இன்] மறுகி னூர்க்கவும் படுப [குறுந் : 17–3]

''இவற்றோடமையாது தெருவிடத்தே நின்று பலரானும் தூற்றி ஆரவாரிக்கவும் படுவர்.

[–ஒடு] வானம் பொழுதொடு சுரப்ப... [பதி : 89–1]

''மழை உரிய காலத்திலே தப்பாது பொழிய''.

[–ஆன்] முல்லை வேலி நல்லூரானே [புறம் : 144–14]

''முல்லை வேலியையுடைய நல்லூரின்கண்''

[–கு] வடபுல வாடைக்குப் பிரிவோர் [நற் : 366–11]

"வடதிசைக்குரிய வாடைக்காற்று வீசுங் கூதிர்ப் பருவத்திலே பிரிவர்.

[கண்] சமங் கண் கூடித் தாம்வேட் பவ்வே [புறம் : 270–4]

"போர்க்களத்தின் கண் ஒன்று கூடி அவன் பால் வருந்தா நின்றார்."

[கால்] ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்...... [கலி 56-1]

"ஊரிடத்தே வளர்ந்த இளமரக்காவினுள்"

[புறம்] இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற [மலைபடு:46]

"விளங்குகின்ற வளையினையும் உடைய விறல் படப் பாடி யாடும் மகளிர்களும் நின்னைப் புறத்தே சூழ"

[அகம்] தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்திக் [பதி : 81 – 21]

"மூங்கிற் குழாயிடத்தே பெய்து முதிர்வித்த இனிய கள்ளை யருந்தி".

[உள்] வெண்டிங்களுள் வெயில் வேண்டினும் [புறம் 38-8]

"வெளிய திங்களின் கண்ணே வெயிலுண்டாக வேண்டினும்"

[உழை] தன்னுழைக் குறுகல் வேண்டி யென்னரை [புறம் 390-13]

"யான் தன்பால் அணுகுவது குறித்து"

[கீழ்] ... மன்னவன் கீழ்க் குடிபோலக் கலங்குபு [கலி 34-14]

"அரசன் கீழ் இருந்து குடிமக்களைப் போல கலங்கா நின்று"

[மேல்] தன்னமர் காதலை புன்மேல் வைத்த [புறம் 234–3]

"தன்னை மேவப்பட்ட காதலி புல்மேல் வைக்கப்பட்ட இனிய சிறிய பிண்டத்தை".

[பின்] மானினங் கலித்த மலைபின் னொழிய [புறம் 138-2]

''மான் திரள் மிக்க மலை பின் கழிய''.

[சார்] காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை [கலி 117-11]

''கட்டிடத்தே பறித்த சிறுமுல்லை யென்றாள்''

[அயல்] கதுப்பயல் விளங்கும் சிறு நுதல் [குறுந் 129-5]

''ஒரு மகளின் கூந்தலின் பக்கத்தே விளங்கா நின்ற சிறிய நெற்றியானது''.

[புடை] மைந்துடை யாரெயில் புடைபட வளைஇ [பதி 62-4]

''வலியினையுடைய கடத்தற்கரிய பகைவரது மதிற் பக்கத்தே நெருங்க வளைத்து''.

[முன்] முன்சமத் தெழுதரும் வன்க ணாடவர் [பதி 52-7]

''போரின் முன்னணியில் நின்று பொருதலை விரும்பிச் செல்லும் வன்கண்மையினையுடைய போர் வீரரது''.

[தலை] ... ... விண்தலைச் செறீஇயர் [நற் 89-1]

''ஆகாயத்திற் செறிவுற்று''.

[இடை] ... ஊர்கரும் கடத்திடை
வெஞ்சுரம் இறந்தனர் ... ... [அகம் 231-8.9]

''யாரும் செல்லத்துணியாத காட்டிடையே உள்ள கொடிய சுரத்தைக் கடந்தனர்''.

[கடை] இளநலம் இற்கடை ஒழிய [நற் 295-8]

''இளமையும் அழகும் இல்லின் கண்ணே வைகிக் கெடும்படியாக''.

[வலம்] மதலை மாக்கோல் கைவலன் தமினென் [புறம் 152-18]

''கரிய கோலைக் கையின் கண்ணே தாருங்கோள் என்று சொல்லி அணுகி''.

[இடம்] இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல் [நற்68–2]

"இளமங்கையர் வீட்டில் இற் செறிக்கப்பட்டிருத்தலான".

[வயின்] நம் வயின் படர்ந்த உள்ளம் பழுதன்றாக [அகம் 68-13]

"நம்மிடத்து மேவிய தமது உள்ளம் குற்றமற்றதாக".

நின்வயிற் கிளக்குவ மாயிற் . ... [புறம் 126-6]

"நின்னிடத்துப் புகழைச் சொல்லுவேமாயின்".

[வழி] ... ... தெவ்வழி விளங்க [பதி 52–8]

"பகைவர் படையிடையே விளங்கித்தோன்றப் பொருத லால்',.

[முதல்] சுரன்முதல் வருந்திய வருத்தம் . ... [நற் 41–3]

"சுரத்தின் கண் வந்து வருந்திய வருத்தமெல்லாம்".

[பால்] கற்பால் அருவியின் ஒலிக்கும் நற்றேர் [அகம் 184–17]

மலையின்பால் வீழும் அருவியைப்போல ஒலிக்கும் நல்ல தேரிலுள்ள".

[மாட்டு] பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே [புறம் 121–6]

"அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒருதரமாகப் பார்த் தலைத் தவிர்வாயாக".

[வாய்] மதில்வாய்த் தோன்ற லீயாது தம்பழி யூக்குநர் [பதி 71–11]

"மதிற்குள்ளே யிருந்து வெளித்தோன்றாமல் தம் குற்றத்தால் பழி செய்துகொள்ளும் பகைவருடைய".

[உடன்] ... ... காந்தள்
சிலம்புடன் கமழும் சாரல் [நற் 294–7,8]

"காந்தள் சிலம்பிடம் எல்லாம் மணங்கமழும் சாரலையுடைய இலங்குகின்ற மலைநடானது".

[மருங்கு] செய்துவிட் டன்ன செந்நில மருங்கிற் [அகம் 304–6]

"செவ்வண்ணம் தீட்டி வைத்தாற்போன்ற சிவந்த நிலத் திடத்தே".

[திறம்] நின்றிறத் தவலம் வீட இன்றிவன் [அகம் 340–12]

"நின்னிடத்துக் கொள்ளும் துன்பம் ஒழிய".

[மிசை] றென்கழிமிசை சுடர்ப் பூவின் [புறம் 17-12]

"தெளிந்த கழியிடத்துத் தீப்போலும் பூவினையுமுடைய".

[வரை] நிலவரை நிவந்த பலவுறு திருமணி [நற் 399–5]

"நிலத்திலே கிடந்து வெளியிற்போந்து விளங்கிய பலவாய மிக்க அழகிய மணிகளின்".

[உம்பர்] பல்வேற் கட்டி நன்னாட் டும்பர் [குறுந் 11–6]

"பலவாகிய வேற்படையையுடைய கட்டி என்பானுடைய நல்ல நாட்டிற்கு அப்பால்".

[மீமிசை] அணிநிற வீரும் பொறை மீமிசை [அய்ங் 431–2]

"அழகிய நிறமமைந்த பெரிய மலைகளின் உச்சியிலே".

[φ] வேந்தரும் பொருது களத் தொழிந்தன ரினியே [புறம் 63–10]

"அரசரும் பொருது அக்களத்தின் கண்ணே மடிந்தனர்".

எண்	வேற்றுமைகள்	வேற்றுமை உருபுகள்
1.	இரண்டாம் வேற்றுமை	–அய், – இன், – கு, வயின், ϕ
2.	மூன்றாம் வேற்றுமை அ. கருவி வேற்றுமை	–ஒடு, – ஆன், –ஆல், – கு –இன், – இல், கொண்டு, ϕ
	ஆ. உடனிகழ்ச்சி வேற்றுமை	–ஒடு, – ஓடு, – ஆல், கண், உடன், வயின், ϕ
3.	நான்காம் வேற்றுமை	–கு, இல் – ஒடு – அய் மாட்டு திறத்து வயின் ϕ
4.	ஐந்தாம் வேற்றுமை	–இல் – இன் – ஒடு - ஆன் -கு உள் வயின் உளி தலை ϕ நின்று இருந்து விட்டு
5.	ஆறாம் வேற்றுமை	–அது –அ –இன் –இல் உடை ϕ
6.	ஏழாம் வேற்றுமை	–இல் –இன் –ஒடு –ஆன் -கு கண் கால் புறம் அகம் உள் உழை கீழ் மேல் பின் சார் அயல் புடை முன் தலை இடை கடை வலம் இடம் வயின் வழி முதல் பால் மாட்டு வாய் உடன் மருங்கு திறம் மிசை வரை உம்பர் மீமிசை ϕ

1.10. மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து நாம் எந்த வேற்றுமைக்கு எந்த எந்த உருபுகள் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளன என்று கண்டுகொண்டோம். இனி ஒவ்வொரு வேற்றுமைக்கும் கொடுக்கப்பட்டுள்ள வேற்றுமை உருபுகள் அத னதன் வேற்றுமை உருபுகளா என்று காண்போம். 'அய்' என்னும் உருபை எடுத்துக்கொண்டால், அது இரண்டாம் வேற்றுமைப்

பொருளுக்கும் நான்காம் வேற்றுமைப் பொருளுக்கும் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது. இதுபோலவே பல உருபுகள் பலவேற்று மைப் பொருளைக் கொடுப்பதைக் காணலாம்.

[–இன்] இரண்டாம் வேற்றுமைக்கும், மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஆறாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

[–கு] இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், நான்காம் வேற்றுமைக்கும், அய்ந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[–ஒடு] மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், உடனி கழ்ச்சி வேற்றுமைக்கும், நான்காம் வேற்றுமைக்கும், அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[–ஆன்] மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், அய்ந் தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

[- ஆல்] மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், உடனி கழ்ச்சி வேற்றுமைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

–[இல்] மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கும், நான்காம் வேற்றுமைக்கும், அய்ந்தாம் வேற்றுமைக்கும் ஆறாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

[வயின்] இரண்டாம் வேற்றுமைக்கும், மூன்றாம் வேற்றுமையில் உடனிகழ்ச்சி வேற்றுமைக்கும், நான்காம் வேற்றுமைக் கும், அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[மாட்டு] நான்காம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[கண்] மூன்றாம் வேற்றுமையில் உடனிகழ்ச்சி வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[உடன்] மூன்றாம் வேற்றுமையில் உடனிகழ்ச்சி வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்,

[திறத்து] நான்காம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[உள்] அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[உளி] அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[தலை] அய்ந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும்.

[கொண்டு] மூன்றாம் வேற்றுமையில் கருவிவேற்றுமைக்கும்.

[ஓடு] மூன்றாம் வேற்றுமையில் உடனிகழ்ச்சி வேற்றுமைக்கும்.

[நின்று, இருந்து] அய்ந்தாம் வேற்றுமைக்கும்.

[–அது, –அ, உடை] ஆறாம் வேற்றுமைக்கும்.

[கால், புறம், அகம், உழை, கீழ், மேல், பின், சார், அயல். புடை, முன், இடை, கடை, வலம், இடம், வழி, முதல், பால், வாய், மருங்கு, திறம், மிசை, வரை, உம்பர், மீமிசை] ஏழாம் வேற்றுமைக்கும்.

[ϕ] எல்லா வேற்றுமைக்கும்.

1.11. நாம் மேலே நோக்கியவற்றிலிருந்து ஒரு வேற்றுமை உருபு பல வேற்றுமைப் பொருள்களில் உபயோகப்படுத்தப் பட்டுள்ளதைப் பார்க்கிறோம். இவ்வாறு ஒரு உருபு பல வேற்றுமைப் பொருளில் வருவதால் அந்த உருபை அந்த அந்த வேற்றுமைகளின் உருபு என்று கொள்வதா அல்லது அந்த உருபு ஒரு வேற்றுமையின் உருபாக இருந்து மற்ற வேற்றுமைப் பொருளில் மயங்கி வத்திருக்கலாம் என்று கூறுவதா என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம். தொல்காப்பியர் சூத்திரம் 590-ல்

"யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்"

என்று கூறிச் செல்கிறாரே தவிர அந்த உருபுகள் உண்மையாகவே எதனுடைய உருபாகக் கொள்ளவேண்டும் என்று கூறிற்றிலர். இங்கு நாம் ஒரு உருபு ஒரு குறிப்பிட்ட வேற்றுமைக்கே சொந்தம் என்று கொண்டு அந்த உருபு வேறு பல வேற்றுமைப் பொருளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கொள்வதே சாலச்சிறந்தது. எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்தில் –அய் –இன் –கு வயின் ϕ ஆகிய உருபுகள் இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளதைக் கண்டுகொள்ளலாம். உண்மையாகவே இந்த அய்ந்து உருபுகளும் இரண்டாம் வேற்றுமையின் உருபுகளா அல்லது ஒரு குறிப்பிட்ட உருபுகளே இரண்டாம் வேற்றுமையின் உருபுகளாகக்கொண்டு மற்ற உருபுகள் மயக்கத்தினால் வந்துள்ளன என்று கொள்வதா என்பது சிந்தித்தற்குரியது. –'அய்' என்ற ஒரு உருபை எடுத்துக்கொண்டால் அது இரண்டாம் வேற்றுமைப் பொருளிலும் நான்காம் வேற்றுமைப் பொருளிலும் வந்துள்ளதை நாம் காணலாம். இவ்வாறு வருவதால் –'அய் என்ற ஒரு உருபை இரண்டாம் வேற்றுமையின் உருபாகவும் நான்காம் வேற்றுமையின் உருபாகவும் கொள்வதால் இலக்கண உலகில் பெரிய துன்பம் நேரும். நாம் –அய் என்ற உருபின் அதிர்வு எண்ணை [Frequency] பார்ப்போமென்றால் இரண்டாம் வேற்றுமைக்கே –அய் உருபு அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை அறியலாம். இவ்வாறு அதிர்வு எண் மூலம் ஒரு உருபு பல வேற்றுமைப் பொருளில் வந்து அதனதன் உருபுகளாகக் காணப்படும் குழப்பத்தைத் தவிர்க்கலாம். அதிர்வு எண் மூலம் சங்க இலக்கியத்தில் உருபுகளை நோக்கினால் இரண்டாம் வேற்றுமைக்கு –அய் உருபும்; மூன்றாம் வேற்றுமையில் கருவி வேற்றுமைக்கு –ஆல், -ஆன், கொண்டு ஆகிய உருபுகளும்; உடனிகழ்ச்சி வேற்றுமைக்கு –ஒடு, ஓடு, உடன் ஆகிய உருபுகளும்; நான்காம் வேற்றுமைக்கு –கு உருபும்; அய்ந்தாம் வேற்றுமைக்கு –இன், நின்று, இருந்து, விட்டு ஆகிய உருபுகளும்; ஆறாவது வேற்றுமைக்கு –அது, –அ, உடை ஆகிய உருபுகளும்; ஏழாவது வேற்றுமைக்கு –இல், கண், கால், புறம், அகம், உள், உழை,

கீழ், மேல், பின், சார், அயல், புடை, முன், தலை, இடை, வலம், இடம், வயின், வழி, முதல், பால், மாட்டு, வாய், மருங்கு, திறம், மிசை, வரை, உம்பர், மீமிசை ஆகிய உருபுகளும் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையால் அவைகளை அதனதன் உருபுகளாகக் கொள்ளலாம். மற்ற உருபுகள் எல்லாம் வேற்றுமை மயக்கங்கள் மூலம் சங்க இலக்கியங்களில் வந்திருக்கலாம் என்பதே என் கருத்து.

சுருக்கக் குறியீடு:

அகம்.	—	அகநானூறு,
இ.வி.	—	இலக்கண விளக்கம்,
இ.கொ.	—	இலக்கணக் கொத்து,
அய்.	—	அய்ங்குறுநூறு,
கலி.	—	கலித்தொகை,
குறுந்.	—	குறுந்தொகை,
சிலம்பு.	—	சிலப்பதிகாரம்.
திருமுருக்கு.	—	திருமுருகாற்றுபடை
நற்.	—	நற்றிணை,
நன்.	—	நன்னூல்,
பதி.	—	பதிற்றுப் பத்து,
புறம்.	—	புறநானூறு,
மலைபடு.	—	மலைபடுகடாம்,

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1977. "வேற்றுமை" ஆய்வுக்கோவை - 9-2, பக். 1-6.

அருள்ராஜ், வே. சா. 1978 "வேற்றுமையுருபா-வேற்றுருபா?" ஆய்வுக்கோவை 10-2 பக். 19-24

சாமிநாத தேசிகர். 1978 இலக்கணக் கொத்து- சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை.

சுப்பிரமணியன், ச. வே. 1971. இலக்கணத்தொகை-சொல். நாகர்கோவில்: ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்

பொற்கோ. 1973. இலக்கண உலகில் புதிய பார்வை. சென்னை: தமிழ் நூலகம்.

Balasubramaian, K. 1973 "Post positions reconsidered" *AIUTTA* 5. p. 573-578

Israel, M. 1973. *The treatment of Morphology on Tolkāppiyam.* Madurai: Madurai University.

Meenakshi, K. 1976 "Post-positions in Tamil" *Dravidian Linguistics Conference*-III p. 13-23. Karnataka University Dharwar.

Natarajan, T. 1977. *The Language of Sangam Literature and Tolkāppiyam.* Madurai: Madurai Publishing House

Shanmugam, S. V. 1971 *Dravidian nouns* Department of Linguistics publication No: 25 Annamalai University, Annamalainagar.

Subramanyam P.S. 1976 "Ka:rakas and case markers" *Dravidian case system* Department of Linguistics Publication No: 39. Annamalai University, Annamalainagar, p. 201–223.

குறிப்பு : இவ்வாய்வில் வேற்றுமை உருபுகள் விளக்க முறையிலும், அமைப்பு முறையிலும் ஆராயப்பட்டுள்ளன. வேற்றுமை உருபுகளைப் பற்றிய ஆய்வு இவ்வளவுதான் என்று இக்கட்டுரையாசிரியன் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. பின்வரும் மொழியியல், தமிழ் ஆய்வாளர்களுக்கு இவ்வாய்வு பல விதங்களில் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

மொழியியல் 2.3 (1978)

தமிழில் வினாச் சொற்கள்

உ. ஜான்ஸி பியூலா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

0. முன்னுரை:

மரபிலக்கண ஆசிரியர்கள் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, இடை, உரியென நான்கு வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். அவற்றுள் பெயர்ச் சொற்கள், காலம் காட்டாது வேற்றுமை உருபேற்று தொடர் நிலையில் பயனிலையாகவோ எழுவாயாகவோ வருவனவாகும். வினாச்சொற்கள் பெயர்ச்சொற்களுக்குள் அடங்கும். இவ்வினாச் சொற்கள் தமிழில் அமைப்பு முறையிலும் (Structural order), காலவளர்ச்சி நிலையிலும் (Historic system) எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளன எனவும், எந்தெந்த மாற்றங்களுக்கு உள்ளாகின்றன எனவும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

1.0 வினாச் சொற்கள்:

வினாச் சொற்கள், அறியப்படாத மனிதரையோ, உயிரினங்களையோ, பொருளையோ, பெயரையோ அல்லது அறியப்படாத

ஏதேனுமொன்றையோ அறியும் வகையில் வினவப் பயன்படும் பெயர்ச் சொற்களாகும். ஒரு வினாச்சொல் அதற்குரிய விடையை எதிர்நோக்கி நிற்கும். விடை பகர்வோரிடத்து நேரிடையாக வினவப்படும், வினா நேரிடை வினா, (Direct interrogative) எனவும், நேரிடையாகவன்றி, பிறர் வாயிலாகவோ, எழுத்து வாயிலாகவோ வினவப்பட்டு விடைகாண நிற்கும் வினா 'மறை முக வினா' (Indirect interrogative) எனவும் கருதப்படும்.

1.1. வினா இடைச் சொற்கள் (Interrogative clitics):

தமிழில் எ-, எவ்-, ஏ-, யா-, ஆ-என்னும் வினாவடிகள் வினா இடைச் சொற்களாகக் கருதப்படுகின்றன.

எ-டு. எ — து → எது

எவ் — அர் → எவர்

ஏ — வ் — அன் → ஏவன்

ஆ — ர் → ஆர்

1.2. வினாவடிகள் (Interrogative stems):

தற்காலத் தமிழில் பெரும்பான்மை எ - வினாவடியாகவும், யார் என்னும் வினாப்பெயரில் யா - வினாவடியாகவும், யார், ஆரென மருவியவிடத்து ஆ - வினாவடியாகவும் வருகின்றன. எனவே எவன், எவள், எவர், எங்கு, எப்பொழுது, எப்படி, என்ன முதலான எ - யை அடியாகக்கொண்ட வினாப் பெயர்களே தற்காலத் தமிழில் மிகுந்து வருதலைக் காணலாம்.

1.3. வினா விகுதிகள் (Interrogative suffixes):

என்ன, எந்த, எப்படி, எங்கு, எத்தனை முதலான வினாச் சொற்களின் விகுதிகளாகிய -ன்ன, -ந்த, -ப்படி, -ங்கு, -த்தனை போன்றவை தனித்து நின்றுப் பொருள்தரும் ஆற்றலற்றவை. ஆயினும் தொடர்நிலையில் (Syntactically) என்ன செய்தான், எந்த ஆள், எப்படி வந்தான், எங்குச் சென்றான், எத்தனை மாந்தர்கள் எனப் பெயர்ச் சொற்களோ, வினைச் சொற்களோ ஏற்று, வினா வாக்கியங்களாக நின்று, வினாப் பொருளை உணர்த்தி வரும்.

1.4. வினா உருபன்கள் (Interrogative markers):

வினா உருபன்கள் தனித்து வருகையில் பெயர்களை விகுதிகளாகப் பெற்று வரும்.

எ-டு. எ — அளவு → எவ்வளவு
எ — முறை → எம்முறை
எ — ஆறு → எவ்வாறு

1.5. வினாச் சொற்களும், தெளிவிலா (Indefinite) மாற்றுச் சொற்களும்.

வினாச் சொற்களைத் தொடர்ந்தோ, அவை ஏற்கும் வேற்றுமை உருபினைத் தொடர்ந்தோ - உம், ஓ, - ஆவது என்ற உருபன்கள் வரும்போது தெளிவிலா மாற்றுச் சொற்கள் தோன்றுகின்றன. வினாச் சொற்கள் தாங்கள் ஏற்கும் அவ்வுருபன்களின் தன்மைக்கேற்ப உண்மைப் பொருளையோ (Positive meaning), எதிர்மறைப் பொருளையோ (Negative meaning) தந்து, இறந்த காலத்தையோ எதிர்காலத்தையோ உணர்த்தி நிற்கின்றன.

எ-டு.

எவரும் வரமாட்டார்கள்—எதிர்மறைப் பொருள், எதிர் காலம்.
எவரோ வந்தார்கள் —உண்மைப் பொருள், இறந்த காலம்.
எவராவது வருவார்கள்—உண்மைப் பொருள், எதிர் காலம்.

1.6. வினாச் சொற்களும், பொதுஇடச் (Universal) சொற்களும்:

யாவர், யாவை, எங்கே, எப்பொழுது முதலான பல வினாச் சொற்கள் - உம் விகுதிப்பெற்று வருகையில் பொதுஇடச் சொற்களாகவும் வருகின்றன. பொது இடச் சொற்களாகி நிற்கையில் இவ்வினாச் சொற்கள் முழுமையை உணர்த்துகின்றன.

எ-டு. யாவரும் வருவார்கள்
யாவையும் நல்லவை
எங்கேயும் போகலாம்
எப்பொழுதும் படியுங்கள்

2.0. வினாச் சொற்களின் பாகுபாடு:

வினா உருபன்களை வீகுதிகளாக ஆழ் அமைப்பில் (Deep level) கொள்வதால் அல்லது வினாச்சொற்களை ஆழ் மட்டத்தில் ஏற்று வருதலால் தமிழ் வாக்கியங்கள் வினாவாகி வருகின்றன. அவைகளை நான்கு வகைகளாகப் பாகுபாடு செய்யலாம்.

1. வினாச் சுட்டு வகை
2. யார் வகை
3. ஏன் வகை
4. ஆம் –இல்லை வகை

2.0.1.0. வினாச் சுட்டு வகை:

சுட்டுப் பெயர்களிலுள்ள அ, இ, உ, முதலான சுட்டுக்கள், வினாவடி 'எ' யினால் இடவேறுபாடுச் செய்யப் பெறுகையில் ஏற்படும் மாற்றம் இவ்வகையுள் அடங்கும்.

எ-டு.	அக்காலம்,	இக்காலம்,	எக்காலம்
	அங்கு,	இங்கு,	எங்கு
	அவன்,	இவன்,	எவன்

தமிழில் சுட்டுப் பெயர்களும், வினாப்பெயர்களும் தங்களுடைய நடப்பு முறையில் பெரும்பாலும் ஒன்று போலவே செயற்படுகின்றன. இதனையே டாக்டர் கால்டுவெல், சுட்டுப் பெயர்களுக்கும், வினாப் பெயர்களுக்கும், சுட்டையும், வினாவையும் குறிக்க வெவ்வேறடிகள் திராவிட மொழிகளில் இருப்பினும் சுட்டுப்பெயர்கள் எந்தெந்த இலக்கண நெறிகளுக்கேற்ப பயின்று வருகின்றதோ, அந்தந்த நெறிகளுக்கு வினாப் பெயர்களும் இணங்கி வருகின்றதெனக் கூறுகின்றார்.[1] தமிழ் இலக்கண நூலாகிய நன்னூலின்

1 "The bases are different, but they are built up on those bases in precisely the same manner, and obey one and the same law, so that what is said about the one class may be regarded as said about the other also" (Robert Caldwell (1913 : 420)

ஆசிரியரும் எகாரப் பகுதி, அ, இ, உ என்றச் சுட்டுக்களைப் போன்ற அமைப்புக்களில் வினாவாக அமைதலை 'எகர வினா முச் சுட்டின் முன்னர்'[2] என்ற அடிகளால் தெளிவுப் படுத்துகின்றார்.

இவண் நாம் தமிழில் சுட்டு-வினா ஒற்றுமைகளுள் சிலவற்றைக் காண்போம்,

2.0.1.1. பெயரடைகள் (adjectives):

அந்த, இந்த, உந்த என்ற சுட்டுப் பெயரடைகளையும், எந்த என்ற வினாப் பெயரடையையும் காணலாம். இப்பெயரடைகள் தனி உருபனாகவோ, சார் உருபனாகவோ சுட்டிலும் வினாவிலும் வரலாம். சார் உருபன்களாக அ, இ, உ, எ என்ற உருபன்கள் வரும்.

எ-டு. அந்தக் குதிரை , எந்தக் குதிரை
அக்குதிரை , எக்குதிரை

2.0.1.2. பெயர் - பெயரடைகள் (noun - adjectives)

சுட்டு-வினாச் சொற்களுள் ஒருவகை சிலவேளைகளில் பெயர்களாகவும், வேறு சிலவேளைகளில் பெயரடைகளாகவும் வரும். இவைகள் பெயர்-பெயரடைகள் எனப்படும்.

எ-டு. அத்தனை , எத்தனை
அவ்வளவு , எவ்வளவு

எத்தனை எண்ணுப் பெயராகவும், எவ்வளவு திரள் பெயராகவும் வருகின்றன.

2 0.1.3. வினையடைகள் (adverbs):

காலம், இடம், முறை, காரணம் எனும் நான்கினையொட்டி வினையடைகள் நான்காகத் தமிழில் வருகின்றன.

2 நன்னூல், 163.

எ-டு.	காலம்	:	அன்று ,	என்று
	இடம்	:	அங்கு ,	எங்கு
	முறை	:	அப்படி ,	எப்படி
	காரணம்	:	அதற்கு ,	எதற்கு

2.0.1.4 அடுக்குத் தொடர்கள் (repetitives)

சுட்டு-வினாப் பெயர்கள், பெயர் + பெயர், பெயரடை + பெயரடை, வினையடை + வினையடை என்ற மூன்றுப் பிரிவுகளின் கீழும் அடுக்குத் தொடர்களாக வருகின்றன.

எ-டு.	அவனவன்	,	எவனெவன்
	அந்தந்த	,	எந்தெந்த
	அங்கங்கு	,	எங்கெங்கு

2.0 2 யார் வகை

எழுவாயையோ, செயப்படுபொருளையோ அறியும் பொருட்டு வினவப்படும் வினாச் சொற்களாக, இவ்வகையில் அடங்கும் வினாச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. தமிழில் உயர்திணையின் கண் யார் அல்லது ஆர் வருதலையும், அஃறிணையின் கண் எது, என்ன அல்லது எவன் வருதலையும் காணலாம்.

தொல்காப்பியர் தன் இலக்கண நூலில்,

"யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே"[3]

என்னும் நூற்பாவாலும்

"அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே"[4]

என்னும் நூற்பாவாலும் பழந்தமிழில் யாஅர், எவன் என்னும் வினாச்சொற்கள் எடுத்தாளப்படும் முறையினைச் செவ்வனே விளக்கிச் செல்கின்றார். நன்னூலாரும்,

3 தொல்காப்பியம் — சொல் 200
4 தொல்காப்பியம் — சொல் 219

'யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்'[5] எனவும்
'எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்'[6]

எனவும் கூறியுள்ளமையைக் காண்லாம்.

தொல்காப்பியர், உயர்திணை பலர்பாற் பெயர் யாவரின் வகரம் கெட்டு யார் என மாறுதலடைந்ததாகக் கூறுகின்ற ர்.[7] சங்ககால, இடைக்கால, தற்காலத் தமிழில் 'யார்' ஒரு உயர் திணைப் பெயரால் தொடரப்பட்டோ, ஒரு உயர்திணைப் பெயரைத் தொடர்ந்தோ வருதலையும், அறியாதவரை அறியும் பொருட்டும், அறிந்தும் சந்தேகமானவரை அறிந்துத் தெளிந்துகொள்ளும் பொருட்டும் பயன்படும் வினாப்பெயராக வருதலையும் காணலாம். அஃதேபோன்று அஃறிணையின்கண் எது, என்ன, எவன் முதலானவை செயற்படுகின்றன.

எ-டு. யார் அவன்
இவன் யார்
யார் மகள் கொல் இவள்
அது என்ன
இவ்வூர் அம்பல் எவனோ

'யார்' உயர்திணைப் பெயர்களுக்காக வரினும், உயர்திணை வினாச் சொற்களாகிய எவன், எவள், எவர், இவற்றினின்று மாறுபட்டு நிற்கின்றது. தன்னால் வினவப்படுபவன் ஓர் ஆண்மக னென வினவுபவர் தெளிந்தபின்பே 'எவன்' என வினவுவார். அதுபோன்று பெண் எனத் தெளிந்தப் பின்பு 'எவள்' என்றும், மதிப்பிற்கேற்றவரோ அல்லது பலராகவோ இருப்பின் 'எவர்' அல்லது 'எவர்கள்' என்றும் வினவுவார். ஆயின் தன்னால் வினவப்படுபவர் உயர்திணையின் பாற்பட்டவர் என அறிந்த விடத்தே 'யார்' என்னும் வினாச்சொல்லால் வினவுவார்.

5 நன்னூல் — 349
6 நன்னூல் — 350
7 'யாவர்' என்னும் பெயரிடை வகரம் கெடுதலும்'
(தொல்காப்பியம், எழுத்து 172)

எ—டு. யார் வந்தது
வந்தது யார்

இதனைப் போன்று 'எவன்' அஃறிணை பொருளுக்குப் பொதுவாக வரினும், அஃறிணை வினாப் பெயர்களான எது, எவை இவற்றினின்று மாறுபட்டு நிற்கின்றது. அஃறிணைக்கண் ஒருமை எனத் தெளிந்தவிடத்து எதுவும், பன்மை எனத் தெளிந்தவிடத்து எவையும் வர, அஃறிணையென அறிந்தவிடத்து 'எவன்' பயன்படுத்தப்படுதலைக் காணலாம்.

தற்காலத் தமிழில் 'என்ன' எவனின் இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்பால் ஒருமை வினாச் சொல்லாகிய யாவன், சொல் முதல் யாகாரம் எகரமாகி எவனெனத் திரிந்தவிடத்து, அவ்வினாச்சொல் அஃறிணைக்குப் பொது வினாச் சொல்லாகிய எவனுடன் மயங்கியிருக்கலாம். இதனைத் தவிர்க்க 'எவன்' 'என்' என மருவி,பின் 'என்ன' என மாறுதலடைந்திருக்கலாம் எனக் கொள்ளலாம். தற்காலத்தமிழில் அஃறிணை ஒருமை வினாச்சொல் 'எது'பன்மைக்கும் ஆகி, அஃறிணைப் பொது வினாச் சொல்லாகி வருதலும் உண்டு.

2.0.3. ஏன் வகை:

ஒரு செயல் நிகழ்ந்த, நிகழ்கின்ற அல்லது நிகழும் காரணத்தை அறிய 'ஏன்' என்னும் சொல் வினாச்சொல்லாக வருகின்றது. தற்காலத்தமிழில் நான்காம் வேற்றுமை உருபான '–கு' வினாப் பெயராகிய 'எது'வுடன் சேர்ந்து எதற்கு, எதுக்கு என்னும் வடிவங்களேற்று ஏன் என்ற பொருளை உணர்த்தி வருதலைக் காணலாம். பழங்கால, இடைக்கால இலக்கியங்களில் எவன், என், என்னை முதலானப் பல்வேறுச் சொற்கள் 'ஏன்' என்னும் பொருளைத் தந்து நிற்கின்றன.

2.0.4. ஆம் — இல்லை வகை:

ஒருவாக்கியத்தின் கண் உள்ள எழுவாயுடனோ, பயனிலையுடனோ, செயப்படு பொருளுடனோ ஏதேனுமொன்றுடன் –ஆ என்னும் உருபு விகுதியாகி வருமாயின் அவ்வாக்கியம் வினாப்

பொருளை உணர்த்தும். இவ்வினாவிற்கான விடை 'ஆம்' அல்லது 'இல்லை' என்று வருதல் குறிப்பிடத்தக்கது.

எ–டு. அவன் வந்தானா?
அவனா வந்தான்?

தொல்காப்பியனார் 'ஆ, ஏ. ஓ' அம்மூன்றும் வினா[8] என்னும் நூற்பாவில் ஆ, எ, ஓ என்று கூறப்பட்ட அம்மூன்றும் வினா என்னுங் குறியினையுடையனவென்று பழந்தமிழிற்கான விதியைக் கூறுகின்றார். இவற்றுள் ஏ, ஓ என்பன இடைச் சொற்களென்றும் கூறுகின்றார்[9] இதனையே நன்னூலாரும்,

'எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியிலும் வினாவா கும்மே'[10]

என்னும் நூற்பா மூலம் விளக்கிச் சொல்கின்றார்.

எ–டு. யாவன், எவன், ஏவன்
வந்தானா, வந்தானே, வந்தானோ

மேற்கூறிய ஆ, ஓ, ஏ என்னும் மூன்று விகுதிகளுள் -ஏ சந்தேகப் பொருளில் வருதலையும், –ஓ சந்தேகப் பொருளிலோ, எள்ளல் பொருளிலோ வருதலையும், – ஆ எல்லாப் பொருளையும் குறித்து நிற்றலையும் காணலாம்.

2.1. வினாச் சொற்களின் மற்றுமொரு பாகுபாடு:

வினாச் சொற்களை இரண்டு வகையாகக் கொள்வாருமுளர். யா-, எ–, எவ்-, ஆ–முதலான வினாவடிகளைப் பெற்றுவரும் யாவர்,

---

8. தொல்காப்பியம், எழுத்து–32.
9. "பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே" (தொல்காப்பியம், சொல்-251)

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே" (தொல்காப்பியம், சொல்–252)
10. நன்னூல், 67.

யாவன் முதலான் வினாச் சொற்கள் ஒருவகையினுள்ளும், – ஆ விகுதியாக வரும் மேற்கூறப்பட்ட ஆம் – இல்லை வகை இரண் டாம் வகையினுள்ளும் அடங்கும்.

2.2. தொடரழுத்தம் (Intonation) வினாவாகுதல்:

தொடரழுத்தம் வினாச்சொல்லின் உருபனாகத் தமிழில் வரும். தொடரழுத்தம் பெரும்பாலும் உண்மைத் தொடர்களில் வருதலை யும், வினாக்குறியுடன் வினாவாக்கியங்கள் வருமிடத்து விருப் பேற்று (Optional) வருதலையும் காணலாம்.

3.0. வினாப் பெயர்கள் (Interrogative pronouns):

பெயர்களின் பதிலிகளாகப் பெயர்களைப் போன்று செய லாற்றி, இடவேறுபாடு உணர்த்தி, விளி ஏலாது நிற்கும் பெயர்ச் சொற்கள் மாற்றுப் பெயர்கள் (Pronouns) எனப்படும் மாற்றுப் பெயர்களுள் மூவிடப் பெயர்கள் (Personal pronouns), சுட்டுப் பெயர்கள் (Demonstrative pronouns), வினாப் பெயர்கள் (Interrogative pronouns), பண்பு இடப் பெயர்கள் (Adjective pronouns)முதலியன அடங்கும். இப்பிரிவுகளுள் ஒன்றான வினாப் பெயர்கள், வினாச் சொற்களுக்குள் அடங்கும். அவைகள் ஏனைய மாற்றுப் பெயர்களைப் போன்று விளி ஏற்காதவை. சுட்டுப்பெயர் களைப் போன்று எண் வேறுபாடுமட்டுமன்றி, பால் வேறுபாடும் காட்டுவன. உயர்திணைக்கும், அஃறிணைக்கும் உரிமையாகி வருவன. உதாரணமாக யாவன், யாவள், யாவர் என்பன உயர் திணையிலும். யாது, யாவை என்பன அஃறிணையிலும் வருவ தைக் காணலாம். வினாப்பெயர்கள் பெயரடைகளைக்கொண்ட பெயர்ச் சொற்களின் முன் வந்து வினாவாகி நிற்றலும் உண்டு. பெரும்பாலும் தமிழில், நல்ல, பல, கெட்ட, சில, பெரிய முதலானப் பெயரடைகள் பேச்சு வழக்கில் நிறைந்து வருகின்றன.

எ–டு.	யார்	நல்ல மனிதர்
	எவள்	நல்லவள்
	எவன்	பெரிய மனிதன்

3.1.0. தமிழ் இலக்கண, இலக்கியங்களில் வினாப் பெயர்கள்.

இவண் தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் போன்ற இலக்கண நூற்கள் கூறும் வினாப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல் களினின்றும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங் களினின்றும் பழந்தமிழுக்கான சான்றுகள் தரப்பட்டுள்ளன. அப்பர் தேவாரம், வில்லி பாரதம், கம்ப இராமாயணம், பெருங்கதை, பெரிய புராணம், நாலாயிரத் திவ்வியபிரபந்தம், முதலான நூல் களினின்று இடைக்கால தமிழிற்கான சான்றுகள் காட்டப் பட்டுள்ளன.

3.1.1. தமிழ் இலக்கண நூல்களில் வினாப்பெயர்கள்

பின்வரும் அட்டவணையில் தமிழ் இலக்கண நூல்களாகிய தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், முத்துவீரியம், நேமி நாதம் ஆகியவற்றில் கூறப்படும் வினாப்பெயர்கள் தரப் பட்டுள்ளன.[11]

தமிழ் இலக்கண ஆசிரியர்கள் ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை, பலர்பால் பன்மை வினாப்பெயர்களை உயர்திணையின் கண்ணும், ஒன்றன்பால் ஒருமை, பலவின்பால் பன்மை வினாப் பெயர்களை அஃறிணையின் கண்ணும் அடக்குகின்றனர்.[12]

---

11 இவ்வட்டவணையில் காணப்படும் வினாப்பெயர்களின் தொகுப்பு திருமதி இராசலட்சுமி, 1978 அவர்களால் அவர் களது ஆராய்ச்சிக் கட்டுரைக்காகத் தொகுக்கப்பட்டவை.

12. 1. தொல்காப்பியம், சொல் 159, 164.

2. நன்னூல், 276, 277, 278, 279, 280.

குறிப்பு: பழங்கால, இடைக்கால வினாப் பெயர்களுக் கான சான்றுகள், கிட்டாதவிடத்து, -உம் விகுதியுடன் சேர்ந்து முழுமையை உணர்த்தி நிற்கும் வினாப் பெயர்கள் இக்கட்டுரையின் கண்சான்றுகளாகத் தரப் பட்டுள்ளன.

நூற்கள்	மொத்த வினாப் பெயர்கள்	ஆண்பால் ஒருமை வினாப் பெயர்	பெண்பால் ஒருமை வினாப் பெயர்	பலர்பால் பன்மை வினாப் பெயர்	ஒன்றன் பால் ஒருமை வினாப் பெயர்	பலவின் பால் பன்மை வினாப் பெயர்	உயர் திணை வினாப் பெயர்	அஃறிணை வினாப் பெயர்	தொடர் நிலை வினாக் குறியீடுகள்
தொல்காப்பியம்	10	யாவன்	யாவள்	யாவர் யார்	யாது யாவது	யா யாவை	யாஅர்	எவன்	ஆ, ஓ, ஏ —ஈற்றில்
நன்னூல்	7	யாவன் ஏவன் எவன்	யாவள் ஏவள் எவள்	யாவர் ஏவர் எவர்	யாது ஏது எது	யாவை ஏவை எவை	யார்	எவன்	எ, யா— முதல் ஆ, ஓ— ஈறு ஏ-முதல் ஈறு
வீரசோழியம்	14	யாவன் எவன்	யாவள் எவள்	யாவர் எவர் யாவர்கள் எவர்கள்	யாது எது எஃது	யாவை எவை	யார்	—	—
முத்துவீரியம்	8	யாவன் எவன்	யாவள் எவள்	யாவர் எவர்	யாது	யாவை	—	—	—
நேமிநாதம்	11	யாவன் எவன்	யாவள் எவள்	யாவர் எவர்	யாது எது	யாவை எவை	யார்	—	—

312.0. பழங்கால, இடைக்கால இலக்கியங்களில் வினாப்பெயர்கள்:

3.1.2.0. ஆண்பால் ஒருமை வினாப் பெயர்:

இலக்கண ஆசிரியர்களால் கூறப்படும் **யாவன், ஏவன், எவன்** என்னும் மூன்று ஆண்பால் ஒருமை வினாப் பெயர்களும் பழங்கால இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் இடைக்கால இலக்கியங்களில் அம்மூன்றும் காணப்படுகின்றன.

எ–டு. **யாவன்** கொல் இவன் என்றவற் கெதிர் மொழி
யாவதுங் கொடாஅள் — பெரு. 2. 17. 154.

ஏவனோ வில் விறைவர் மூவர்க ளெனு மீட்டான்
— கம். 5. 225. 4.

எவனா கிலும் மாகவென் றங்கை கவித்து
— கம். 5. 227-1.

3.1.2.2. பெண்பால் ஒருமை வினாப் பெயர்.

யாவள், எவள் என்னும் இரண்டு பெண்பால் ஒருமை வினாப் பெயர்களும் பழங்கால, இடைக்கால நூல்களிலும் காணப்படுகின்றன. நன்னூலாரால் குறிப்பிடப்பட்டுள்ள **ஏவள்** என்னும் வினாப் பெயர் பழங்கால, இடைக்கால இலக்கியங்களில் இடம் பெறவில்லை.

எ–டு.

1. பழந்தமிழ்:

நீ நயந்துறையப் பட்டோள் **யாவளோ**
— ஐங். 370–4.

கோதையின் உள் அழுத்தியாள் **எவளோ**
— பரி. 6–91.

2. இடைக் காலத் தமிழ்:

யாவளிந் நங்கை யாதிவண் மெய்ப்பெயர்
— பெரு. 3. 6. 161.

நாமவனிவனுவன் அவளிவ ளுவளெவள்
— நா. தி. 2085–1.

3.0.2.3. பலர்பால் பன்மை வினாப் பெயர்:

பழந்தமிழ் நூல்களில் யாவர் என்னும் வினாச்சொல் பலர்பால் பன்மை வினாப்பெயராக வருகின்றது. முன்னிலைப் பன்மையில் யாரீர் வினாப் பெயராகி நிற்கின்றது. இடைக்கால இலக்கியங் களில் யாவர், ஏவர், எவ்வெவர், எவர், எவ்வர், ஆர்கள் முதலான வினாப்பெயர்கள் காணப்படுகின்றன.

எ-டு.

1. பழந்தமிழ்:

இவர் யாவர் ஏமுற்றார் — கலி. 147-12.

ஊரீர் போல சுரத்திடை யிருந்தினிர் யாரீரோ
— புற. 141-5.

2. இடைக்காலத் தமிழ்:

பணிகள் தாஞ்செய வல்லவர் யாவர்
— அ. தே. 2079-3.

சரண மாம்படி யார்பிற ரியாவரோ
— அ. தே 2042-1.

இறைவர்க்கு ஏவல் செய்கிலார் ஏவரே
—கம். 5. 107. 2

எவ்வெவர் தேவர்இ ருடிகள் மன்னர்
—மு. இ. இ. 7. 67. 8. 1

யயாதியென்று கொண்டிவனையே யெவரினுஞ் சிறக்க
—வி. பா. 1. 1. 17. 1

எவரமர ரெவ்வவுண ரெவ்வருளர் — கம். 5. 167. 1

சீர்கொள் நாமஞ் சிவனென்றரற்றுவார் ஆர்களாகிலும்
—அ. தே. 1975-3

3.1.2.4. அஃறிணை ஒருமை வினாப்பெயர் :

பழந்தமிழ் இலக்கியங்களில் **யாவது, யாது** என்னும் இரண்டு வினாப்பெயர்களும் அஃறிணை ஒருமையைக் குறிக்க, இடைக்கால இலக்கியங்களில் **யாவது, யாது, ஏவது எது, ஏது, எத்து** என்னும் ஆறு வினாப்பெயர்களும் அஃறிணை ஒருமையைக் குறிக்கின்றன.

எ—டு.

1. பழந்தமிழ் :

துறந்தவர் ஆண்டாண்டுறைகுவர் கொல்லோ **யாவது**
— கலி. 36—21

யாது நீ வேண்டியது — கலி. 61—14

2 இடைக்காலத் தமிழ் :

யாவதாயினும் யான் கொளநுணிந்தனென்
— பெரு. 4.3 97

அஞ்சுவது **யாதொ**ன்றுமில்லை — அ. தே. 11–5

ஏவதா மினி மேற்செயு மாள்வினை — கம். 5. 1103.4

எம்பிரான்! யான் செயும் பணி **எது** — பெரி. 374–1

இருந்த இடமும் பரந்தெரி தோன்ற அவட்**கேது** கொல்
— பெரு. 2. 18. 56.

எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே — மு.இ.இ. 7.49.1.4.

3.1.2.5. அஃறிணைப் பன்மை வினாப்பெயர்:

பழந்தமிழ் இலக்கியங்களிலும், இடைக்கால இலக்கியங்களிலும் யா, யாவை இரண்டுமே அஃறிணைப்பன்மை வினாப்பெயர்களாக வருகின்றன. இடைக்கால இலக்கியங்களில் ஏவை, எவை எவற்று என்னும் வினாப்பெயர்களும் இப்பொருளை உணர்த்தி நிற்கின்றன.

ஏ-டு.

1. பழந்தமிழ்:

அவற்றுள் யாவோ வாயின மாஅன் மகனே
— கலி. 21-9

நிறவாக்கி னீரெக்கி யாவையும் — பரி. 10 12

2. இடைக்கால தமிழ்:

வாவி யாவும் பொன்னணிந்து வானம்பூத்த தொத்தவே
— சீ.சி. 67-4.

எவைகொல் அணுகப் பெறுநாள் — நா. தி. 3043-1

தும்பி யென்றுலுகினுள்ள யாவை யவை யேவை
— கம். 2031-1

மண்ணின் மேலெவற்றினும் மாளான் — கம். 6.146-2

4.9 பழங்கால, இடைக்கால இலக்கியங்களில் காணப்படும் பிற வினாச் சொற்கள்

மேற்கூறப்பட்ட வினாப்பெயர்கள் ஒழிந்த வேறு பல வினாச் சொற்களும் பழங்கால, இடைக்கால நூல்களில் விரவி வரப்பெற்றுள்ளன. தற்காலத் தமிழில் வினாச்செற்சுளாக வரும் **யார், என்ன, எங்கு, எப்படி, ஏன், எத்தனை** முதலானவற்றிற்கு இணையான வினாச்சொற்கள் பழங்கால இடைக்கால நூல்களில் எவை யெவையென ஈண்டு நாம் காண்போம்.

4.1. யார்

உயர்திணையின் பாற்பட்ட அறியாத ஒருவரை அறியும் பொருட்டும், அறிந்தும் அய்யத்திற்கிடமானவரைத் தெரிந்து தெளிந்துகொள்ளும் பொருட்டும் 'யார்' என்னும் வினாச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. பழந்தமிழ் நூல்களில் **யார், யாரை, ஆர், யாஅர்** என்பனவும், இடைக்கால நூல்களில் **யார், ஆர், யாரை** என்பனவும் 'யார்' என்னும் பொருளை உணர்த்தி நிற்கின்றன.

எ–டு.

1. பழந்தமிழ்:

அவணது அறியுநர் யார் — புற. 102-4

நீ எமக்கி யாரையோ வென — பதிற். 52-24

ஆர் இக்கொடுமை செய்தார் என்று — சில. 7.38.4

வாராதோர் நமக்கி யாஅரென்னாது — அக. 50-8

2, இடைக்காலத் தமிழ்:

யார் இவனென்று சொல்லி — அ.தே. 337-1

உற்ரு ராருளரோ — அ.தே. 91-1

யாரை நீ — கம். 6. 4010-1

4.2. என்ன

அறியாப் பொருளையோ, பொருட்களையோ, செய்தியையோ அல்லது அறிந்தும் சந்தேகத்திற்கிடமான ஏதானுமொன்றை அறிந்து தெளிந்துகொள்ள 'என்ன' என்னும் வினாச்சொல் அஃறிணையின்கண் வருகின்றது. பழந்தமிழ் நூல்களில் எவன், யாங்கு, என், என்ன, எனை, யாது, என்னோ, என்னை, யா, என்னையோ, என்னாம் என்னும் வினாச்சொற்களும், இடைக்கால இலக்கியங்களில் என், என்ன, என்னது, ஏதோ, என்னதோ, யாது என்னும் வினாச்சொற்களும் 'என்ன' என்னும் பொருளில் வருகின்றன.

எ–டு.

பழந்தமிழ்:

யான் எவன் செய்கோ — குறு. 25-2

பூங்குழை யாங்கு ஆகுவள் — குறு. 159-2

என் மலைந்தனன் கொல் - குறு. 161-5

கற்றதனால் ஆய பயன் என் கொல் — திரு. 2

என்ன மரங்கொல் அவர் சாரலவ்வே — ஐங். 201–4

என்னாகுவை கொல் நன்னுதல் நீயே — குறு. 94–4

எனைப் பயஞ் செய்யுமோ — ஐங். 305–4

யாதனின் தவிர்க்குவங் காதலர் செலவே — நற்.79-10

நனி உருவத்துவள கண்டீ என்னோ — பரி 6–64

எனக்கு என்னை வருவது என்று இனையர் — பரி.7-68

என்னை கொல் ஏதிலார் மாட்டு — திரு. 188

பெண்ணின் பெருந்தக்க யா உள — திரு. 54

ஈங்கு இதன் காரணம் என்னையோ — மணி. 6–33

எனைத்துணைய ராயினும் ஏன்னாம் — திரு. 144

2. இடைக்காலத் தமிழ் :

கொன்றவன் என் செய்தாய் — வி.பா. 1. 1.54–4

எந்தாய் வர நீயடியேன் என்ன தவத்தேன்
— வி. பா. 1. 3. 35–4

என்னது ஆகும் உனதரசியல் — வி. பா. 5. 4. 117–4

நும் நிலைமை ஏதோ — அ. தே. 2434–3

என்னதோ இங்கதிகாரம் — மு. இ இ. 8.1.33.8.6

4.3. எங்கு :

இடமறியப் பயன்படும் வினைச்சொல் 'எங்கு' ஆகும். யாண்டு யாவண், யாவது, யாங்கண், யாங்கு, எங்கு, எங்ஙண் என்பன பழந்தமிழிலும், எவ்விடம், எங்கு, எங்கே, எவண் என்பன இடைக் கால நூல்களிலும் 'எங்கு' என்ற பொருளில் வருகின்றன. இடைக் கால நூல்களில் பெரும்பாலானவற்றில் 'எங்கு' வருதல் குறிப்பிடத் தக்கது.

எ-டு.

1. பழந்தமிழ் :

நின் மகன் யாண்டுளனோ — புற. 86–2

இருள் யாவணதோ நின்னிழல் வாழ்வோர்க்கே
— புற. 102–8

சென்றமர் கடத்தல் யாவது — புற. 93–2

யாங்கணும் யார்க்கும் எளிது — திரு. 864

யாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ — ஐங். 237-4

எங்குந் தெரிந்தது கொள்வேன் அவனுள் வழி
— கலி. 144–16

கிராம மெங்கணுங் கடிஞையிற் கல்லிட
— மணி. 13–103

இடைக்காலத் தமிழ் :

இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
— அ. தே. 2194–1

எங்கருள் தல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்னா
— அ. தே. 30–2

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக் கொண்டு
— அ. தே. 1569–1

எவணெத் தன்மைத் தேகின நாகத்தினம்
— கம். 6. 3809–1

4.4. எப்படி:

ஒரு செயலைச் செய்யும் முறையினை அறியப் பயன்படும் வினாப்பெயர் ‘எப்படி’ ஆகும். தொல்காப்பியர் புணர்ச்சி விதிகளைக் குறிப்பிடும்போது ‘யாங்கு’ என்னும் வினாச் சொல்லைக் கூறியுள்ளார்.[13] இது ‘எப்படி’ என்னும் பொருளைத் தருகின்றது.

13. தொல்காப்பியம், எழுத்து, 428.

பழந்தமிழ் இலக்கியங்களில் இப்பொருளில் **யாங்கனம், யாங்கு, யாங்ஙனம், யாவது, எவன், யாவண், எங்ஙனம், எவ்வணம்** என்னும் வினாச் சொற்களும் இடைக்கால இலக்கியங்களில் **எவ்வாறு, எவ்வாற்றால், எங்ஙனே, எங்ஙனம், எங்ஙனமோ** எனும் வினாச் சொற்களும் 'எப்படி' என்னும் பொருளைத் தருகின்றன.

1. பழந்தமிழ் :

யாங்கனம் ஒத்தியோ வீங்கு செயல் மண்டிலம்
— புற. 8-6

எம்வயின் ஊடல் **யாங்கு** வந்தன்று — அக. 39-20

யாங்ஙனம் பாடுவர் புலவர் — புற. 30-10

தேர்தரு விருந்திற் றவர்குதல் **யாவது** — ஐங். 451-2

வாழ்தல் மற்று **எவனோ** — நற். 3?5-10

சிறுகிளி கடிதல் பிறக்கி**யாவண**தோ — நற். 306-2

எங்ஙனம் ஆளும் அருள் — திரு. 251

அவ்வுயிர் **எவ்வணம்** போய்ப் புகும் — மணி. 16-94

2. இடைக்காலத் தமிழ் :

வெள்ளத் தேனுக் **கெவ்வாறு** விளைந்ததே
— அ.தே. 1972-4

எவ்வாற்றால், எவ்வகையால் காண மாட்டார்
— அ. தே. 2539-2

எங்ஙனங் காண்பார் கலியுன்னை — அ. தே. 1059-1

பிரியுமோ **றெங்ஙனே** பிழைத்தேயும் — அ. தே. 204-1

உள்ள**மெங்ஙனங்** கூடுமாறே — அ.தே. 731-1

நின் றோமினி **யெங்ஙனமோ** வந்திறைஞ்சுவதே.
— அ. தே. 965-4

4.5. ஏன் :

ஒருசெயல் நிகழ்ந்த, நிகழ்கின்ற அல்லது நிகழும் காரணத்தை அறியப்பயன்படும் வினாச்சொல் 'ஏன்' ஆகும். என், என்னை எற்றிற்கு என்பவை பழந்தமிழிலும், என், யாது, ஏன், என்னோ, என்னுக்கோ என்பவை இடைக்காலத் தமிழிலும் 'ஏன்' என்றப் பொருளைத் தருகின்றன.

எ-டு.

1. பழந்தமிழ் :

யாம் நயந்து நல்கினம் விட்டது என் — நற். 176-2

ஈங்கிதன் காரணம் என்னை — மணி. 3-73

எற்றிற்கு உரியர் கயவர் திரு. 1080

2. இடைக்காலத் தமிழ்:

ஆக்கையாற் பயனென் — அ. தே. 89-1

யாதனிற் சிதைந்த திவ் வடற்பெருங் களிறு
— பெ. 1. 32. 28

போவதங்கு இனி ஏன் — பெரி. 917-4

எரிதரு செஞ்சடை யேகம்ப வென்னோ திருக் குறிப்பே
— அ.தே. 962-4

என்னுக்கோ உடன் வைத்திட்டிருப்பதே
— அ.தே. 1527-4

பழந்தமிழ், இடைக்காலத் தமிழ் இரண்டிலும் 'என்ன', 'ஏன்' இரண்டிற்கும் பொருள் அடிப்படையிலும், பயின்றுவரும் முறையிலும் வேறுபாடுகளில்லை. 'என்ன','ஏன்' என்ற வினாச் சொற்களுக்கான சான்றுகளை நோக்கின் இக்கூற்று செவ்வனே விளங்கும்.

பழந்தமிழ் நூல்களிலும், இடைக்கால நூல்களிலும் மிகுந்து காணப்படும் 'என்' என்னும் வினாச்சொல் தற்காலத் தமிழில் மறைந்து 'ஏன்' என்னும் வினாச்சொல் வந்துள்ளமையைக் காணலாம். இதற்கான காரணத்தை ஆராயின், 'தன்மை ஒருமை மாற்றுப்பெயராகிய 'என்', வினாச் சொல் 'என்'னுடன் மயங்க, இவ்வினாச்சொல் 'ஏன்' ஆக மாற்றுருவெடுத்து இரண்டு 'என்' களுக்குமுள்ள மயக்கத்தைத் தெளிவித்திருக்கலாம்.

4.6. எத்தனை – எவ்வளவு

பொருள்களின் எண்ணிக்கையை எண்ணலளவிலறிய 'எத்தனை'யும் முகத்தலளவிலறிய 'எவ்வளவு'ம் வினாப் பெயர் களாகி வருகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் எனை, எனைத்து இவ்விரண்டு விஞச்சொற்களும், இடைக்கால இலக்கியங்களில் எத்தனை, எவ்வளவு என்பனவும் காணப்படுகின்றன.

எ–டு.

பழந்தமிழ்:

எனை நாள் நும் போர் தங்கும் — புற. 301–7

எனைத்தென் றெண்ணுகோ — குறு. 237–7

இடைக்காலத் தமிழ்:

நோக்காதே எவ்வளவும் நோக்கினானை
— அ.தே. 2196–1

உயிர் நோய் வந்தெத்தனையு முற்றாலென்னே
— அ.தே. 2556–2

5.0. பிற வினாச்சொற்கள்

5.1 யா– வினாவடியாகவுடைய பழந்தமிழ், இடைக்காலத்தமிழ் இவைகளில் காணப்படும் வினாச்சொற்கள்

பழந்தமிழ்:

யாவிர்–புற. 88–1; யாண்டையன்–புற. 379–1; யாரேம்–கலி. 82–18; யார் மாட்டு–திரு. 7; யார் யார் – திரு. 423; யாருழை–திரு. 1242. யாவணது–பதிற். 75–14; யாவது–பதிற். 53–13.

2. இடைக்காலத் தமிழ்:

இடைக்கால இலக்கியங்களிலும் மேல்கூறப்பட்ட வினாச் சொற்களை விடுத்து வேறு வினாச்சொற்கள் காணப்படவில்லை.

5.2. எ-வினாயடியாகவுடைய பழந்தமிழ், இடைக்காலத் தமிழில் காணப்படும் வினாச் சொற்கள்

1. பழந்தமிழ்

எனையது–புற. 228–13; என்னன்–குறு. 33–2; எனையதூஉ–பதிற். 54–9; எப்பால்–திரு. 533; எஞ்ஞான்று–திரு. 317; எற்று–திரு. 275; என்னையோ–மணி. 6–33.

2. இடைக்காலத் தமிழ்:

எஞ்ஞான்று–அ.தே. 2306–4; எப்பொழுது–அ.தே. 414–2; எப்பால்–அ.தே. 2707–3; எத்தினால் அ.தே. 229–2; எனையோர்–பெரி. 3051–3; எம்மை-மு.இ.இ. 11. 10. 12. 1.

6 வினாச் சொற்களும் சாரியை ஏற்றலும்

தொல்காப்பியர் 'யாது' என்னும் வினாச்சொல் அன் சாரியையும், 'யா', 'யாவை' என்னும் வினாச்சொற்கள் வற்றுச் சாரியையும் பெற்று வரும் எனக் குறிப்பிட்டுள்ளார். யாவையின் இறுதி 'வை', 'வற்று' ஏற்று வருங்கால் மறைந்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[14] பழந்தமிழில் 'யாது' அன், ஆன் என்னும் சாரியைகளைப் பெற்று வருவதைக் காணலாம். வற்றுச் சாரியை பெற்ற 'யாவற்றை' என்னும் சொல் பழந்தமிழில் காணப்படவில்லை. இடைக்கால இலக்கியங்களில், ரகரத்தை இறுதியாகவுடைய யார், ஆர், எவர், என்னும் வினாச் சொற்கள் ஏன் சாரியை பெற்றும், யாது, எது, என்னுமிரண்டும் ஆன் சாரியை பெற்றும்; எ வற்றுச் சாரியை பெற்றும் எத்து இன் சாரியை பெற்றும் வருதலைக்காணலாம். சாரியை பெற்றுவராத ஏது, எவர் முதலானவை இடைக் காலத் தமிழில் வருதலையும் காணலாம்.

14 தொல்காப்பியம், எழுத்து, 200
தொல்காப்பியம், எழுத்து, 175, 178.

ஏன் ரகரத்தை இறுதியாகவுடைய யார், ஆர், எவர் என்ப வற்றுடன் சாரியையாக நின்று யாரேனும் ஆரேனும் எவரேனும் என வருமாற்போல் தோன்றினாலும்,யாராக இருந்தாலும்→ யார் + ஆக இருந்தால் + உம்' உடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆக இருந்தால் என்னும் பொருளைத்தந்து நிற்றலைக் காணலாம். இவ் வாறு, 'யாரும்' என்பதனை 'யார் + ϕ + உம்' எனவும்;'யாதானும்' என்பதனை 'யாது + ஆன் + உம் எனவும்; 'யாதனும்' என்பதனை 'யாது + அன் + உம்' எனவும் கொள்ளலாம். இவற்றை ஒப்பீடுகை யில் அன்,ஆன்,ஏன், ϕ, ஆக இருந்தால் என்பவை ஒரே பொருளில் வருவதைக் காணலாம்.

எ-டு.

1. பழந்தமிழ்

'யாதனின்-திரு. 341; யாதனை-நற்.66; யாதானும்-திரு 39 7

2. இடைக்காலத் தமிழ் :

யாரேனும் — அ.தே. 2093-2;
ஆரேனும் — அ. தே. 2382-3;
எவரேனும் — அ. தே. 2698-1;
யாதானும் — அ. தே. 3011-4;
ஏதானும் — அ. தே. 1288-2;
எவற்று — பெரி. 1956-2;
எத்தினால் — அ. தே. 229-2;
ஏதும் — அ. தே. 68—3;
எவரும் — அ. தே. 2259-1.

7. முடிவுரை

முன்பு யா-வினாச் சொற்களின் அடியாகவும், அவற்றின் வேற் றுமைத் திரிபின் அடியாகவும் இருக்க, எ-வேற்றுமைத் திரிபின் அடியாக இருந்திருக்கலாம். தற்போது எ-என்ற வினாவடி யா வென்ற வினாவடியினிடத்தைப் பெற்றுவிட்டது. பெரும்பாலான

எல்லா வினாச் சொற்களுமே எகரத்தை அடியாகப்பெற்று வருத லைக் காணலாம். பழந்தமிழில் யா-என்ற வினாவடி மிகுந்திருக்க, பின் காப்பியங்களில் அதன் எண்ணிக்கைக் குறைந்து, இடைக் காலத் தமிழில் எ-என்ற வினாவடி எண்ணிக்கையில் மிகுந்துவர, தற்காலத் தமிழில் யா-மறைந்து எ-நிலைத்துள்ளதைக் காணலாம், யா-வை வினாவடியாகக் கொண்ட யார் என்னும் ஒரே வினாச் சொல் தற்காலத் தமிழில் காணப்படுகின்றது.

பழந்தமிழிலும், இடைக்காலத் தமிழிலும் உள்ள இலக்கியங் களில் இயாவன், இயாவள், இயாவர், இயார் முதலான வினாச் சொற்கள் காணப்படுகின்றன. ஆனால் இவ்வகை இயாவை அடி யாகக் கொண்ட வினாச் சொற்களின் இகரம் குற்றியலிகரமாகப் புணர்ச்சியின் கண் வருவதாகக் கருதப்படுதலால் அவை அனைத் தும் யா-வை அடியாகக் கொண்ட வினாச் சொற்களாகவே இவண் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் எல். வி. இராமசுவாமி அய்யர், டாக்டர் பர்ரோ முதலானோர் 'இஅ' என்பது இணையுயிர் எனவும், இவ்வுயிர்களிடையில் 'ய'உடன்படு மெய்யாகத்தோன்றி இயாஅ என வந்ததென்றும் அவ்வடியையுடைய இயாஅவர் போன்றச் சொற்கள் பழந்தமிழிலும் இடைக்காலத் தமிழிலும் காணக் கிடைக்கின்றனவென்றும் கருதுகின்றனர்.[15]

இக்கட்டுரையில் காணும் குறியீடுகளின் விளக்கம்

அக. — அகநானூறு
அ.தே.— அப்பர் தேவாரம்
அய்ங் — அய்ங்குறுநூறு
கம் — கம்பராமாயணம்
கலி. — கலித்தொகை
குறு. — குறுந்தொகை
சில. — சிலப்பதிகாரம்

15 L.V. Ramaswamy Aiyar, Guntur, 1933: 60.
Prof. T. Burrow, 1968 : 119.

சீ.சி. — சீவக சிந்தாமணி

திரு. — திருக்குறள்

நற். — நற்றிணை

நா.தி. — நாலாயிர திவ்வியபிரபந்தம்

பதிற். — பதிற்றுப்பத்து

புற. — புறநானூறு

பெரி. — பெரியபுராணம்

பெரு. — பெருங்கதை

மணி. — மணிமேகலை

மு.இ.இ— முன் இடைக்கால இலக்கியம்

வி.ப. — வில்லிபாரதம்

BIBLIOGRAPHY

1 Agesthialingom, S. 1962 *Description of the Language of Patirruppattu with Transliteration, Translation and Index*, Ph.D. unpublished dessertation, Department of Tamil, University of Kerala, Trivandrum.

2 Agesthialingom, S. 1972. 'Verbal Constraints on the use of the Indefinite Pronouns in Tamil', *Journal of Tamil Studies*, International Institute of Tamil Studies, Tamil Nadu.

3 *Ainkurunu:ru*, 1966. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

4 Amirtham, A. 1977 'Comparison of Interrogative Sentences in Tamil and Malayalam', *Section II Language, First World Conference on Malayalam*, Kerala Culture and Development, Kerala.

5 Ananthakrishna Pillai, 1966 *Descriptive Grammar of Early Middle Tamil*, Ph.D. unpublished dissertation, Post Graduate and Research Institute, Deccan College, Poona.

6 Andiappa Pillai, D. 1976. *Descriptive Grammar of Kalittokai* Ph.D. unpublished dissertation, Department of Tamil, University of Kerala, Trivandrum.

7 Andronov, M. 1969. *A Standard Grammar of Modern and Classical Tamil*, Madras.

8 Arden, A. H. 1954. *A Progressive Grammar of Common Tamil*, Madras.

9 Arunabharathi, N. 1976. *Glossary of Linguistics English-Tamil*, Tamil Nu:lakam, Madras.

10 Caldwell, Robert, 1856. *A Comparative grammar of the Dravidian or South-Indian family of Languages*, New Delhi, Orient Reprint Corporation.

11 *Cilappatika:ram*, 1972. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpatippukkalakam, Madras.

12 Elayaperumal, M. 1975. *Grammar of aiṅkuṟunu:ṟu with Index*, Department of Tamil, University of Kerala, Trivandrum.

13 George, K. M. 1971. *Malayalam Grammar and Reader*, st. Joseph's press, Trivandrum.

14 George, O. Curme. 1935. *A Grammar of the English Language*.

15 Govindan Kutty, A. 1968. *Index of kampara:ma:yaṉam* Ph. D. unpublished dissertation, department of linguistics, University of Kerala, Trivandrum.

16 Ilakkuvanar, 1946. *The making of Tamil Grammar.*

17 Ilavarasu, R. 1973, *Descriptive Grammar of peruṅkatai,* Ph. D. unpublished dissertation, department of linguistics, University of kerala, Trivandrum.

18 Israel, M. 1973. *The Treatment of Morphology in Tolka:ppiyam*, Madurai University, Madurai.

19 Israel, M. 1976. *Ilakkaṇa a:yvu-Peyarccol,* Sankam printers, Madurai.

20 Jerrold J. katz and paul M. Postal, 1964. *An Integrated Theory of Linguistic Descriptions.*

21 *Kalittokai*, 1969. Tirunelveli South India Saiva sitta:nta Nu:ṟpatippukkaḻakam, Madras.

22 Kamatchi, A. 1964. *Grammatical study of naṟṟiṇai with Translation, Transliteration and Index*, Ph. D. unpublished dissertation, department of Tamil, University of Kerala, Trivandrum.

23 *Kampara:ma:yaṉam*, 1971. V. M. Gopalakrishnamacha riyar Company, Triplicane, Madras-5.

24 Kandaswami, S.N. 1962, *Paripa:ṭal - A Linguistic study, Part III - Dictionary*, M.Litt unpublished dissertation, Annamalai University, Annamalainagar.

25 *Kuruntokai*, 1972. Tirunelveli, South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

26 Krishnambal, S. R. 1974. *Grammar of kuruntokai with Index*, department of Tamil, University of kerala, Trivandrum.

27 *Manime:kalai*, 1971 Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

28 Meenakshisundaran, T. P. 1965. *A History of Tamil Language*, Post Graduate Research Institute, Deccan College, Poona.

29 *Nannu:l Ka:ntikaiyurai*, 1972. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

30 Natarajan, T. 1977. *The Language of Sangam Literature and Tolka:ppiyam*, Madurai Publishing House, Madurai.

31 Otto Jesperson, 1933. *Essentials of English Grammar*.

32 Parameswari, A. 1967. *Language of Thirukkural*, M.Litt. unpublished dissertation, Annamalai University, Annamalainagar.

33 Parimala, S. 1966. *Language of Ka:raikkal Ammaiya:r Pura:nam*, M.A. unpublished thesis, Department of Tamil, Annamalai University.

34 *Paripa:tal*, 1969. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

35 *Patirruppattu*, 1968. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

36 *Pattuppa:ttu*, 1971. Tirunelveli Sonth India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

37 *Peruṅkatai*, 1978. U. V. Ca:mina:taiyar nu:l nilaiyam, Madras-41

38 Rodney D. Huddleston, 1971. *The sentence in English*, Cambridge Studies in Linguistics.

39 Shanmugam, S.V. 1971. *Dravidian Nouns (a comparative study)*, Annamalai University.

40 Shanmugam Pillai, M. 1977. *Interrogatives in Modern Tamil*, Annamalai University.

41 Singaravelu, C. 1967. *A Grammatical Study of Appar Te:va:ram (Hymns)*, Ph.D. unpublished dissertation, Department of Linguistics, Annamalai University.

42 Sreeveeramanikandan Pillai, R. and Kothandaraman, P 'Demonstratives and Interrogatives in Tamil and Malayalam', *Third Seminar on Dravidian Linguistics*, Annamalai University.

43 Subramanian, S. V. 1965. *Grammar of Cilappatika:ram*, Department of Tamil, University of Kerala, Trivandrum.

44 Subramanian, S. V 1972. *Grammar of Akana:nu:ru with Index*, Department of Linguistics, University of Kerala, Trivandrum.

45 Subramanium, V. I. 1962. *Index of Puṟana:nu:ṟu*, Department of Tamil, University of Kerala, Trivandrum.

46 Subrahmanya Sastri, P. S. 1934. *History of Grammatical Theories in Tamil*, The Madras Law Journal Press, Madras.

47 Subrahmanya Sastri P.S. 1945. *Tolka:ppiyam Collatika:ram with an English Commentary*, Annamalai University.

48 Sundharam, R. M. 1964. *Grammatical study of Pattup-pa:ṭṭu with Index. Text and Translation* Ph.D. unpublished dissertation, Department of Tamil, University of Kerala, Trivandrum.

49 *Tolka:ppiyam, mu:lam*, 1967. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpatippukkaḷakam, Madras.

50 *Tolka:ppiyam,Commentary by Ce:ṉa:varaiyar [Collatika:ram]* 1970. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpattippukkaḷakam, Madras

51 *Tolka:ppiyam, Commentry by Teivaccilaiyar [collatika:ram]* 1963, Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpatippukkaḷakam, Madras.

52 *Tolka:ppiyam, Commentary by Iḷampuraṇar [collatika:ram]* 1963. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpatippukkaḷakam, Madras.

53 *Tolka:ppiyam, Commentry by kalla:ṭaṉa:r [Collatika:ram]* 1964, Tirunelveli South India Saiva Sitta:nta Nu:ṟpatippukkaḷam Madras.

53 *Tolka:ppiyam, Commentary by Naccinarkkiniyar [Collatika:ram]* 1962. Tirunelveli South India Saiva Sittanta Nu:rpa:ippukkalakam, Madras.

55 Vaityana:ta Te:cikar, 1971. *Ilakkaṇaviḷakkam [collatika:ram]*, Tanjore Saraswathi Mahal Publications, Tanjore.

56 Veerasami, V. 1966. *Grammatical Study of Periyapura:ṇam with Index* Ph.D. unpublished dissertation, Department of Tamil, University of Kerala, Trivandrum.

57 *Vi:ra Co:ḷiyam, Commentary by Perunte:vanar*, 1970. Tirunelveli South India Saiva Sitta:nta Nu:rpatippukkalakam, Madras.

மொழியியல் 2.3 (1978)

பேச்சும் எழுத்தும்

டாக்டர் செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. பேச்சும் எழுத்தும்:

மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என்று இரண்டாகப் பிரித்து மொழியியலார் பேசுவார்கள். இந்த வேறுபாடு நமது இலக்கணங்களில் காணப்பட்டாலும் அவை தனித்தனியே விளக்கப்படவில்லை. எழுத்துமொழியின் இலக்கணம் மிகக் குறைவாகவே எழுத்ததிகாரத்தில் பேசப்படுகிறது. சில எழுத்துகளின் வரிவடிவம் பற்றிய குறிப்புகள் எல்லா இலக்கணத்திலும் உண்டு. ஆயினும் சரியாக வேறுப்படுத்தாததால் உயிர்மெய்யைச் சார்பு எழுத்தாக பவணந்தி (நன். 60) கருதி விட்டார். பேச்சுமொழியையும், எழுத்துமொழியையும் வேறுபடுத்தும் குறிப்புகள் உரைகளிலும் பிற்கால நூல்களிலும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

'எழுத்து என்றது யாதனையெனின் கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்து' என்பார் நச்சினார்க்கினியர்

(எழுத்து பக். 8) இங்கு கட்புலனாகா உருவு என்றது ஒலி வடிவு; கட்புலனாகிய வடிவு என்றது வரிவடிவு.

'எழுத்து ஒலி வடிவு வரி வடிவையும் ஏற்கும்'

முத்து வீரியம் எழு. 2

இவற்றின் சிறப்புகள், தொடர்பு, நிலைமொழி அமையும் முறை ஆகியவற்றை முதலில் பார்த்துத் தமிழ் மொழி நிலைபற்றி இறுதியில் கொஞ்சம் விரிவாக விளக்க முயலுவோம்.

2. பேச்சு மொழியின் முதன்மை:

மனிதன் இந்த உலகத்தில் சுமார் 500,000–ஆண்டுகளாக வாழ்ந்திருக்கவேண்டும் என்று தொல் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனால் எப்பொழுதிலிருந்து பேச ஆரம்பித்தான் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் வெளி உலகத் தொடர்பு இல்லாமல் வாழும் பழங்குடி மக்கள் உலகில் பல பகுதிகளில் காணப்படுகின்றனர். அவர்கள் எல்லோரும் பேச்சுமொழி உடையவராகவே உள்ளனர். எனவே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே மனிதன் பேச்சு மொழியைக் கையாண்டு வந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க வேண்டியுள்ளது.

எழுத்து மொழியோ இன்றுவரை கிடைக்கின்ற சான்று அடிப் படையில் கணக்கிட்டால் சுமார் 500–ஆண்டு பழமையே உடை யது. மேலும் எழுத்து மொழி இல்லாத சமூகத்தினர் பலர் இன்று கூட இருப்பதும், எழுத்து மொழி உடைய சமூகத்திலும் அதைத் தரிந்து கொள்ளாத மக்கள் இருப்பதும் எழுத்து மொழி காலத்தால் பிற்படடது மட்டும் இன்றி, பேச்சு மொழிபோல இயல்பானது இல்லை என்பதும் புலனாகிறது.

தமிழக வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் எழுத்து மொழி மிகவும் பிற்பட்டது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடி கிறது. தமிழகத்தில் 200,000–ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தொல் பொருள் ஆராய்ச்சியாளர் முடிவு

(Sankaliya, 1966). ஆனால் தமிழ் மொழிக்கு இதுநாள் வரை கிடைத்த பழைய எழுத்துச் சான்று கி. மு. 3-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதாவது 2,300-ஆண்டுகளுக்கு முந்தியது.

3. பேச்சு மொழியின் சிறப்பு:

மேலே பேச்சுமொழி காலத்தால் பழமையானது என்று பார்த்தோம். அது இன்றும் பல சிறப்புகளைக் கொண்டுள்ளது. அவைகளுள் ஒன்று, பேசுவோரின் உணர்ச்சியையும் உள்ளக்கிடக்கையையும் குரலின் ஏற்ற இறக்கத்தால் எளிதில் காட்டமுடிவது. முருகன் வந்தான் என்ற வாக்கியத்தை ஒலி ஏற்ற இறக்கத்தால் வினாப் பொருளையும் (முருகனா வந்தான், முருகன் வந்தானா) வியப்புப் பொருளையும் குறிக்க கையாளலாம். பேச்சு மொழியை நேருக்கு நேர் நின்றே பயன்படுத்தமுடியும். எளிதில் பாதுகாக்க முடியாது. ஆனாலும் விஞ்ஞான வளர்ச்சியால் - தொலைபேசி, டேப்ரிகாடர் முதலிய சாதனங்கள் கண்டுபிடித்த பிறகு இவற்றில் மாற்றம் ஏற்பட்டாலும் அவை எல்லோரும் எளிதாகப் பயன்படுத்தும்படி அமையவில்லை. பேச்சுமொழியை ஒருமுறை பயன்படுத்தியதும் திரும்பப்பெறவோ திருத்தவோ முடியாது. எனவே, அது இயற்கையானது.

4. எழுத்து மொழியின் சிறப்பு:

எழுத்துமொழி காலம், இடம் ஆகிய இரண்டையும் கடந்து நிலைத்து நிற்கவல்லது. எழுத்து மொழியை மீண்டும் மீண்டும் திருத்தம் செய்துகொள்ளலாம். பேச்சு மொழியில் வேறுபடுத்தாத சொற்களைக்கூட எழுத்து மொழியில் வேறுபடுத்த முடியும் - எளிதாகப் பாதுகாக்கவும் முடியும். எழுத்து மொழி இருப்பதால் தான் நம்முடைய முன்னோர்களுடைய சிந்தனைகளையும் பண்பாடுகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. எனவேதான் எழுத்து மொழியே தனிச்சிறப்பு உடையதாகக் கருதப்படுகிறது.

5. இரண்டுக்கும் உள்ள உறவு:

பேச்சு மொழி காலத்தால் பழமையானதால் அதன் அடிப்படையில்தான் எழுத்து மொழி அமைந்திருக்க முடியும். இருந்

தாலும் எழுத்து மொழித் திருத்தமாக அமைக்கக்கூடியது. முன்னோர்களின் கருத்துகளையும் கலாசாரத்தையும் அறிந்துகொள்ள உதவியாக இருப்பது போன்ற காரணங்களால் எழுத்து மொழியே அடிப்படையானது, பழமையானது என்றும் பேச்சு மொழி கொச்சையானது என்றும் கருத்து தோன்றிவிட்டது. இக்கருத்து வரலாற்று மொழியியல் வளரும் வரையில் அதாவது 19-ஆம் நூற்றாண்டுவரை அறிஞர்களிடையேயும் நிலவிவந்தது. ஆனால் வரலாற்று ஆராய்ச்சியால் பேச்சு மொழியிலும் பல பழமைக்கூறுகள் இருக்கின்றன என்று கண்டுகொண்டனர். எனவே, எழுத்து மொழியை அடிப்படையாகக் கொண்டதுதான் பேச்சு மொழி என்பது தவறே ஆகும்.

பேச்சு மொழியும் எழுத்து மொழியும் சில்ச்சில சிறப்புப் பண்புகள் உடையதாக இருப்பதால் அவற்றைத் தனித்தனியே ஆராய வேண்டும் என்று வற்புறுத்துகிறவர்கள் மொழியியலாரிடையே காணப்படுகின்றனர். அவர்களுள் பிராக் (Prague) மொழியியல் அறிஞர்கள் எழுத்துமொழிக்குத் தனியிடம் கொடுத்து ஆராய்வார்கள். அவர்களுள் வாசெக் (Vachek) என்பார் குறிப்பிடத்தக்கவர். அவர்களைத்தனிநிலை வாதிகள் (Autonomists) என்று குறிப்பிடுவார்கள். பேச்சுமொழியும் எழுத்துமொழியும் தொடர்பு உடையன; ஆனால் அது மொழிக்கு மொழி மாறுபடும் என்று கருதுகிறவர்களை இணைநிலை வாதிகள் (Correlationists) என்று அழைக்கிறார்கள் (Hall, 1975).

எழுத்து மொழி எவ்வளவுதான் பேச்சுமொழியிலிருந்து வேறுபட்டிருந்தாலும் காலந்தோறும் எழுத்துமொழியும் மாறுபட்டு வருகிறது. சில சமயங்களில் பேச்சுமொழியை ஒட்டி எழுத்து மொழியும் எழுத்துமொழியை ஒட்டி பேச்சுமொழியும் திருத்திக் கொள்ளப்படுகின்றன. ஆகவே இணைநிலை வாதிகளின் கருத்தையே மொழியைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டோரும் வரலாற்று ஆராய்ச்சியாளரும் சமூக மொழியியலாரும் ஒத்துக்கொள்கின்றனர் (Berry, 1958 : 738).

நாம் இதுவரை பேச்சுமொழி, எழுத்துமொழி என்று பொதுவாகப் பேசிவந்தோம். ஆனால் இரண்டிலும் பலவகை வேறுபாடு

இருப்பதையும் அவைகளில் சிலவற்றை உயர்வாகக்கருதி பிறரும் பின்பற்றுவதையும் காணலாம். அப்படிப்பட்ட வகையே நிலை மொழி (standard language) என்று அழைக்கப்படும். எனவே அவற்றைப்பற்றி சிறிது அறிந்து கொள்வோம்.

6 பேச்சு நிலை மொழி

ஒருமொழி பரந்த நிலப்பகுதியில் நீண்ட காலமாகப் பேசப் பட்டால் பல கிளை மொழிகள் உடையதாக அமையும். ஒன்று இடவேறுபாடு வட்டாரக் கிளைமொழி. மொழிவழங்கும் நாட்டைப் பல வட்டாரங்களாகப் பிரித்து அங்கு வழங்கும் மொழி வேறுபாட் டிற்கு ஏற்ப வட்டாரக்கிளை மொழியின் எண்ணிக்கை அமையும். மற்றொன்று சாதி அல்லது சமய வேறுபாடு – சாதிக்கிளை மொழி. பொதுவாக இந்திய மொழிகளில் சாதிக் கிளைமொழிகள் உண்டு என்ற கருத்து மொழியியலாரிடையே காணப்பட்டது. ஆனால் இன்று அதில் பல அய்யங்களை எழுப்பியுள்ளார்கள். அதற்கு ஒவ்வொரு சாதியின் கிளை மொழியும் வேறுபடுகிறதா? ஒரு சாதி பல வட்டாரங்களில் வாழ்ந்தால் அவர்கள் எல்லோருடைய பேச்சும் ஒரு முறையில் அமைந்திருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு 'ஆமாம்' என்ற விடை கொடுக்க முடியாததே முக்கிய காரணம். ஆயினும் சமூகத்தில் உயர்வு தாழ்வு இருப்பது போலவே ஒரு வட்டாரத்தில் வாழும் பல சாதி மக்களிடையே மொழி வேறுபாடு காணப்படுவது உண்மை. அவற்றை விரிவாக ஆராய்ந்து மொழி வேறுபாட்டின் அடிப்படை என்னென்ன என்று ஆராய்தற்கு உரியது மேலும் வயது அடிப்படையிலும் பல் (ஆண்–பெண்) அடிப்படையிலும்கூட வேறுபாடு உள்ளது (ஏசுதாசன், 1976 : 240-260). இதனோடு பேசுவோரின் கல்வி, வாழும் இடம்(கிராமமா நகரமா) மனநிலை, சூழல் ஆகியவற்றாலும்கூட மொழி வேறு படுகின்றது. தமிழில் உள்ள வட்டாரக்கிளை மொழிகளையும் சில சாதிக்கிளைமொழிகளின் சிறப்புப் பண்புகளையும் (சீனுவாச வர்மா, 1977) விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

இந்தக் கிளைமொழி வேறுபாடுகள் பொதுவாக தங்கள் தங்கள் குடும்பத்தாரிடையேயும் உறவினரிடையேயும் வட்டார மக்களிடை யேயும் பேசும்போதுமட்டும் அமைவன. அவர்களே பிற சாதி

யினரிடையே, ஊராரிடையே, தங்களைவிட உயர்ந்தவர்களிடையே பேசும்போது அதே மொழியைப் பயன்படுத்துவதில்லை. அந்த வேறுபாட்டிற்குக்காரணம் சாதாரண அறிவுடையவரும் மொழிவேறுபாடுபற்றி ஓரளவு உணர்ந்திருப்பதுதான். ஒரு மொழி வழங்கும் பலவட்டாரங்களின் ஒரு பகுதி மக்கள் வணிகச் சிறப்பு, கலாச்சார சிறப்பு, அரசியல் சிறப்பு ஆகியவற்றால் வளர்ச்சியடைந்திருப்பதும் ஏனைய பகுதிமக்கள் அனைவரும் அந்தப்பகுதியை உயர்வாகக் கருதுவதும், அங்கு வாழும் உயர்நிலை மக்களின் மொழியை உயர்ந்ததாகப் போற்றுவதும் இயல்பானதுவே. எனவே ஒரு கிளைமொழி பிற கிளைமொழியினர் போற்றிப் பின்பற்றும் நிலை ஏற்படுமானால் அதுவே நிலை மொழியாகக் கருதப்படும். நிலைமொழி என்பது எல்லோருக்கும் ஓரளவு பொதுவானதாய் அமையும். ஒரு கிளைமொழியை ஒட்டி அமைந்தாலும் பிற கிளைமொழிகளின் கூறுகளையும் பெற்று எல்லோராலும் சிறப்பு உடையதாகவும் கருதப்பட்டு எல்லாக் கிளைமொழியினரையும் ஒன்று சேர்க்கும் சாதனமாகவும் அமையும்.

7. எழுத்து நிலை மொழி:

பேச்சு மொழியைப் போலவே எழுத்து மொழியிலும் பலவகை இருக்கும். கடுநடை அல்லது பழங்கால மொழிநடை, தூயநடை, எளியநடை, இயல்பான நடை என்றெல்லாம் எழுத்து மொழியைக் குறிப்பிடுவார்கள். இந்த வேறுபாட்டிற்கு மொழி அமைப்பே முக்கியகாரணம். பேச்சுமொழியில் கிளைமொழி வேறுபாடுபோல எழுத்துமொழியில் இருக்கும் நடைவேறுபாடு அறிந்துகொள்ளும் வகையில் நிறைய ஆராய்ச்சி வளரவில்லை. ஆயினும் பல நடைகளுக்கு இடையேயும் பொதுவான நிலை மொழி ஒன்று உண்டு என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள்.

எழுத்து நிலை மொழியில் இருவகை காணப்படுவதாக மொழியியலார் கூறுவார்கள். ஒன்று. பேச்சுநிலையை ஒட்டி அமைவது. ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய பல மொழிகளின் எழுத்து மொழி இந்த முறையில் அமைந்தவை. ஆங்கிலத்தைப் பொருத்தவரையில் அதனுடைய சொல்லெழுத்துமட்டுமே பழைய நிலையைக் காட்டும்

வகையில் அமைந்து, இலக்கணக் கூறுகளும் சொற்களஞ்சியமும் பேச்சுநிலை மொழியை ஒட்டியே அமைந்துள்ளன. அதுவும், லண்டன் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் படித்த நடுத்தர வகுப்பு மக்கள் பேசும் மொழியை ஒட்டியே அமைந்துள்ளது. (Sugathapala De Silva, 1975:44) மேலும், அந்தநிலை மொழியை எல்லா இடத்திலும் பயன்படுத்துவதால் பல கிளைமொழிகள் உடையதாக இருந்தும் இருநிலை மொழி உடையதாகக் கருதப் படுவதில்லை.

இரண்டு, அராபிக், கிரேக்கம், ஜெர்மனி போன்ற மொழிகளில் இன்றைய நிலை மொழி உச்சரிப்பு முறை, இலக்கணமுறை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் பழையகால மொழியோடு பெரிதும் ஒத்திருக்கும். அதற்குக் காரணம் பழையகால இலக்கண மொழியே, சமயம் போன்ற பிற காரணங்களால் உயர்வானதாகக் கருதப்படுவதே. அராபிக் மொழியில் முஸ்லீம்களின் வேதமான குரான், அந்தச் செம்மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. கிரேக்க மொழியில் பழங்கால மொழியே, பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ அறிஞர்களும் பிறதுறை அறிஞர்கள் பலரும் பயன்படுத்தியது. எனவே பெருமதிப்பிற்கு உரியதாகப் பழங்கால மொழியே கருதப்படுகிறது. ஆயினும், அந்த எழுத்து மொழியும் அந்தக் காலப் பேச்சுமொழியை ஒட்டி அமைந்ததுதான். காலந் தோறும் பேச்சுமொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை அதிகரித்து, இரண் டும் வெவ்வேறு மொழிகள் எனக் கருதத்தக்க நிலையில் அமைந்து விடுகின்றன. இத்தகைய மொழிகளை இருநிலை மொழிகள் (Diglossic languages) என்றும் இந்த பண்பை இருநிலை மொழி (Diglossia) என்றும் பெர்கூசன் (Ferguson, 1959) என்பார் முத லில் பெயரிட்டு அழைத்தார். இரண்டும் வெவ்வேறு பெயர்களை உடையதாகக்கூட அமைந்து இருப்பதும் அவர் கருத்துக்கு ஆதார மாக உள்ளது.

	பேச்சு மொழி	எழுத்து மொழி
கிரேக்கம்:	கதெரெவுஸா (Katherevusa)	திமொதிக்கி (Dhimotiki)
அராபிக்:	அல் ஆம் மிய்யா (al-a:mmiyyah)	ஆல்புஷா (al-fusha)

மேலும், இந்த இரண்டும் பயன்பாட்டிலும் வேறுபடுகிறது. கல்வி மொழியாகவும் பொதுமேடை நாடாளுமன்றம் ஆகிய இடங்களிலும் எழுத்து மொழியான உயர்நிலை மொழியே பயன்படுத்தப்படும் என்று அவர் காட்டியுள்ளார் (Ferguson, 1959).

எழுத்துமொழி	பேச்சுமொழி
சமய சொற்பொழிவு	
பணியாளர்களுக்கு ஆணையிடல்	
சொந்தக் கடிதம்	
நாடாளுமன்ற பேச்சு	
குடும்பத்தாருடனும், நண்பர்களுடனும் உரையாடல்	
வானொலியில் செய்தி	
வானொலியில் வர்த்தக ஒலிபரப்பு	

சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியில் இருநிலை மொழிகளாக இருப்பவற்றில் எழுத்துமொழி பேச்சுமொழியாக எங்கும் பயன் படாமல், எழுத மட்டும் உபயோகிக்கும் மொழிகளும் உண்டு என்று தெரியவந்துள்ளது. சிங்களம் (Sugathapala De Silva, 1975 : 45) அந்த வகையைச் சார்ந்தது.[1] கன்னடமும் கூட இதே முறையில் இருக்கலாமா என்று அவர் அய்யப்படுகிறார் (ஷை.ப.47)

இருநிலை மொழி, இலக்கணம் பற்றிய கருத்திலும் புதிய எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது. எழுத்துமொழி, இன்றைய பேச்சுமொழியை ஒட்டி அமையாது பழைய மொழியை ஒட்டி அமைந்திருப்பதால் மொழிக்கு இலக்கணம் புற நிலையாக அமை கிறது என்ற கருத்து உருவாகிறது. இதனால் அம் மொழியில் விதிமுறை இலக்கணமே வற்புறுத்தப்படும். இது சமூக ஒற்றுமை யையும் அகக் காரணங்களால் வற்புறுத்தப்படாது புறக்காரணங்க ளால் வற்புறுத்தப்படுவதை ஒக்கும் என்பார்கள் மானிட இயல் ஆய்வாளர்கள்.[2]

3. தமிழில் நிலைமொழி

தமிழ் ஒரு இருநிலை மொழி என்பது இன்று எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படும் உண்மை. இருநிலை மொழியை முதலில் விளக்கிய பெர்கூசனே தமிழின் இருமொழி நிலையை வியந்து எடுத்துப்பேசியுள்ளார்.[3] தமிழில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற பிற்கால இலக்கணங்களில் காணப்படுவது பொருள் சற்று வேறு பட்டதாயினும், வீரமாமுனிவர் கொடுந்தமிழ் என்பதனைக் கொச்சை மொழி என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார். அப் படியே இன்று செந்தமிழ் என்பது எழுத்துமொழி என்ற பொருளில் கையாளப்படுகிறது. கோதண்டராமன் (1974) செந்தமிழ் என்று குறிப்பிடுவதும் இன்றைய எழுத்து மொழியையே ஆகும். எனவே செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற வேறுபாடு இருநிலை மொழியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தமிழும் பிற இந்திய மொழிகளும் இருநிலை மொழிகளை உடையன என்பதை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கால்டுவெல் எழுத்துமொழி வேறு; பேச்சுமொழி வேறு என்ற நிலையில் கூறிச் சென்றது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்திய மொழிகள் அனைத் துமே முதலில் நிலையாக்கிய போதே பேச்சுமொழியிலிருந்து சொற்களஞ்சியம், இலக்கணக் கூறுகள் ஆகிய இரண்டுமே மாறு பட்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.[4] தமிழில் மிகப் பழங் காலத்தில் அதாவது இலக்கியம் எழுதப்பட்ட காலத்திலேயே, இன்றுள்ளது போலவே கொச்சை மொழிக்கும், இலக்கிய மொழிக் கும் நிறைய வேறுபாடு இருந்தது. நல்ல செம்மைச் செய்யப்பட்டு இனிமை உடையதாக அமைந்த இலக்கிய நடை மக்களின் அன் றாட பேச்சு மொழியாக எல்லா வகுப்பாராலும் பயன்படுத்தப் பட்டிருக்கும் என்று நம்ப முடியவில்லை. எல்லாக் கவிஞர்களும் அதாவது பழங்காலக் கவிஞர்களும் கூட தங்கள் தங்கள் காலத்தில் பழமையானதாகக் கருதப்பட்ட சொற்களையும், வழக்காறுகளை யுமே கவிதைக்கு ஏற்றதாகக் கருதும் பழக்கம் உடையவர்கள்.[5] இந்தக் கருத்துகள் முழுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. கால்டு வெல் காலத்தில் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களும் சமய இலக்கியங்களுமே கிடைத்திருக்க வேண்டும். சங்க இலக் கியம் படிக்க அவருக்கு வாய்ப்பு இல்லை என்றே கருதவேண்டி

யுள்ளது. அதனால் அவருடைய கருத்து பழையகால இலக்கிய மும் அக்காலப் பேச்சு மொழியிலிருந்து வேறுபட்டிருக்கவேண்டும் என்பது, சங்க இலக்கியத்திற்குப் பொருந்தாது. இதுவரை நடந்த வரலாற்று மொழி ஆராய்ச்சியில் தமிழின் பழைய இலக்கியமாகிய சங்க இலக்கிய மொழியை ஒப்பிலக்கண நிலையில் நோக்கும் போது, இலக்கிய மொழியிலிருந்து பேச்சுமொழி நிறைய மாறுபட் டிருக்க வேண்டும் என்று கருதமுடியவில்லை. சங்க இலக்கிய மொழி சில கூறுகளில் காலத்தால் பிற்பட்டிருக்கவேண்டும் என்றும் புலப்பட்டுள்ளது (சண்முகம், 1971, 1974). ஆயினும் பழைய கால மொழியை விரிவாக ஆராய வேண்டியுள்ளதால் பின்னரே, அக் காலப் பேச்சுமொழி-எழுத்து மொழி உறவு பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியும். எனவே இன்றைய நிலையைப் பற்றி மட்டும் இனிகாண்போம்.

தமிழில் பல கிளை மொழிகள் இருக்கின்றன என்று முன்னரே குறிப்பிட்டோம். இவைகளுக்கு இடையே நிலைமொழி ஒன்று உண்டா என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஆயினும் பேச்சு மொழியில் சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றத் தைப் பலரும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். நாடு விடுதலை அடை வதற்கு முன்னால் பிராமணர் அல்லாதவர்களும் பிராமணர்களின் பேச்சு மொழியை உயர்வாகக் கருதிப் பின்பற்றி வந்துள்ளார்கள். ஆனால் வயதுவந்தவர்கள் அனைவரும் வாக்குரிமை பெற்றதாலும் திராவிடக்கழகம், பின்னால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய வற்றின் செல்வாக்காலும் இப்பொழுது பிராமணர்கள், பிராமணர் அல்லாதாருடைய பேச்சுமொழியைப் பின்பற்றும் நிலை ஏற்பட்டுள் ளது. இது எழுத்து மொழிக்கும் பொருந்தும் என்பதை ஞானசுந் தரமும் பெரியாழ்வாரும் (1975:3) விளக்கியுள்ளார்கள். ஆயினும், பிராமணர் அல்லர்தார் பேச்சு என்பது 1) எந்தச் சாதியார் அல்லது பிரிவினர், 2) எந்த வட்டாரத்தில் வாழ்வோர் பேசும் மொழியைக் குறிக்கின்றது என்பதுதான் தெளிவாகவில்லை. ஸ்வலபெல் என் பார் அவர்கள் என்ற சொல் எப்படிப் பல கிளை மொழிகளில் பேசப்படுகின்றது என்பதை ஒட்டிப் பாண்டி நாட்டில் அவுஹ என்றும், கொங்கு நாட்டில் அவர்கொ(ள்) என்றும், பிராமணர்கள் அவா என்றும் பேசுவதையும். படித்த நடுத்தர மக்களில்(Middle

class) பலரும் (சோழ நாட்டில்) அவுங்க என்பதையே உபயோகப் படுத்துவதால் அந்தச் சோழநாட்டு வழக்கே நிலை மொழியாகக் கருதவேண்டும் என்று ஒரு கட்டுரையில் (zvelebil, 1964:259) குறிப்பிட்டுள்ளார். அது பற்றி மேலும் மொழியியல் அறிஞர்கள் ஆராய்ந்து விளக்கவில்லை. எனவே தமிழ்ப் பேச்சுமொழியில் நிலைமொழி உருவாவது ஆரம்ப நிலையில் இருப்பதால் அதுபற்றிய மொழியியல் ஆராய்ச்சி சுவை உடையதாக அமையும்.

எப்படியாயினும் இன்றைய பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை இப்போது பார்ப்போம். சேதுப்பிள்ளை (Sethu Pillai, 1939) இந்தத் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். மொழியியல் சிறப்பாக வளர்ந்த பிறகு சண்முகம் பிள்ளை எழுதிய கட்டுரைகளே வெளிநாட்டு மொழி அறிஞர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. (Shanmugam Pillai, 1960, 1965, 1966) பெர்கூசனின் கூற்றுகூட சண்முகம் பிள்ளை எழுதிய கட்டுரையை ஒட்டியே அமைந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

8.1. ஒலிநிலை

பேச்சு மொழியில் இல்லாத சில ஒலிகள் எழுத்து மொழியில் மட்டும்–எழுத்தைப் படிக்கும்போதும், மேடையில் பேசும்போதும்– உள்ளன. காற்று, போற்று என்ற சொற்களில் வரும் நுனிநா நுனி அண்ண வல்லொலியும் வருடொலியும் (*tr*); ஒன்று, மூன்று என்ற சொற்களில் வரும் நுனிநா, நுனிமெல்லொலியும் வருடொலியும் (*nr*) ஆகியவை முறையே, த்த் என்றும் ண்ண்/ன், அல்லது ன்ன்/ன் என்றும் பேச்சு மொழியில் மாறிவிட்டன.

பல சொற்களின் உச்சரிப்பில் இரண்டு மொழிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சொல்லின் இறுதியில் வரும் –அம் என்ற எழுத்து ஒ(ம்) என்று பேச்சு மொழியிலும் (அம்) என்று எழுத்து மொழியிலும் உச்சரிக்கிறோம்.

படம் — படொ/ம்/
மரம் — மரொ/ம்/

சொல்லின் இறுதியில் வரும் ள, ல போன்ற ஒலிகள் பேச்சு மொழியில் மட்டுமே மறைந்து விடுகின்றன.

வந்தாள் — வந்தா

அவள் — அவ

வந்தால் — வந்தா

பந்தல் — பந்த

இரண்டும் அதற்கு மேற்பட்ட அசையையும் உடைய சொற்களில் முதல் அசையில் இகரமோ உகரமோ வந்தால் அவை முறையே எகரமாகவும் ஒகரமாகவும் பேச்சு மொழியில் மாறும்.

இறங்கு — எரங்கு

கிழக்கு — கெழக்கு

விளக்கு — வெளக்கு

குடம் — கொடொ(ம்)

உலகம் — ஒலகொ(ம்)

புடவை — பொடவெ

இப்படிப்பட்ட மாற்றங்கள் நிறைய சொற்களில் வருகின்றன. இப்படி இல்லாமல் தனிப்பட்ட சொற்களிலோ இரண்டு மூன்று சொற்களில் மட்டுமோ வரும் வேறுபாடுகள் அதிகமாக அமைந்துள்ளன.

இரண்டு — ரெண்டு

எழுந்திரு — எந்திரி

(பேசிக்)கொண்டிரு — கிட்டிரு

8.2. இலக்கணக் கூறுகள்

பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது இன் சாரியை பேச்சு மொழியில் பெறுவதில்லை. ஆனால் எழுத்துமொழியில் பெற்றும் பெறாமலும் வரும்.

மரத்தினால்	~ மரத்தால்	மரத்தாலெ
மரத்தினை	~ மரத்தை	மரத்தெ
மரத்திற்கு	~ மரத்துக்கு	மரத்துக்கு
மரத்தின்		மர
நாட்டின்		நாட்டு

ஆறாம் வேற்றுமை உருபுகள் **அது, உடைய** ஆகியனவும் ஏழாம் வேற்றுமை உருபாக வரும் **இடம்** (உயர்திணைப் பெயர்களிலும் மூவிடப் பெயர்களிலும்) எழுத்து மொழியில் மட்டுமே வருகின்றன. பேச்சு மொழியில் **ஓட** என்பது ஆறாம் வேற்றுமையும் **கிட்ட** என்பது ஏழாம் வேற்றுமையும் உணர்த்தும். மூன்றாம் வேற்றுமை ஏழாம் வேற்றுமை ஆகியவை எகர இடைநிலை பெற்று பொருள் இல்லாமல் வரும்.

கையால்	கையாலெ
கையில்	கையிலெ

வினைச் சொற்களில் எழுத்துமொழியில் மட்டுமே **வி, பி** என்ற ஈரேவல் வினை விகுதிகள் (செய்வி, படிப்பி) உள்ளன. பேச்சுமொழியில் **செய், பண்** என்ற சொற்களை செய் என்ற வாய்பாட்டு வினையெச்சத்தோடு சேர்த்து அப்பொருளை உணர்த்த வேண்டும். பேச்சுமொழியில் சில சொற்களில் **பி** என்ற விகுதி (காண்பி என்பது காமி என்று வழங்கும்) காணப்பட்டாலும் அவை அந்தப் பொருளில் (காமிக்கச்சொல்) வழங்குவதில்லை.

யகர மெய்யில் முடியும் வினைச்சொற்கள் (பெய், நெய், செய்) தகர மெய்யை எழுத்து மொழியிலும் **ஞ்ச்** என்பதைப் பேச்சு மொழியிலும் ஏற்கும்.

செய்து	செஞ்சு
பெய்து	பெஞ்சு

அப்படியே, அஃறிணை ஒருமை வினைமுற்றுச் சொற்களில் நிகழ் கால விகுதியாக **உகரம்** மட்டுமே பேச்சுமொழியில் வரும். பிராமணர் பேச்சில் **அர** என்பது வழங்குகிறது.

செய்கிறது	செய்யுது	செய்யரது
ஓடுகிறது	ஓடுது	ஓடரது
நடக்கிறது	நடக்குது	நடக்கரது

மகாகவி பாரதியார் பாயுது, பிறக்குது போன்றவற்றைப் பயன் படுத்தியுள்ளார் 'செந்தமிழ் நாடு எனும் போதினிலே' என்ற பாட்டில்.

எதிர்கால வினைமுற்றுகள் பேச்சுமொழியில் வழக்கமாக நடைபெறும் செயலையும் நிச்சயமற்ற தன்மையையும் உணர்த்தும். பேச்சுமொழியில் அஃறிணை வினைமுற்றில் ஒருமை—பன்மை வேறுபாடு இல்லை.

ஒரு மாடு வந்தது	ஒருமாடு வந்துது
பத்து மாடு வந்தன	பத்துமாடு வந்துது

இலக்கணக் கூறுகளில் இன்னும் எத்தனையோ வேறுபாடுகள் அமைந்துள்ளன.

8.3. சொற்களஞ்சியம்

பொதுவாக எழுத்து மொழியில் மொழித் தூய்மை அதிகம் காணப்படுகின்றது. பேச்சு மொழியில் பிற மொழிச் சொற்கள் நிறைய உள்ளன.

மாலை	சாயங்காலம் ~ சாயரட்சை
கணவன்	புருஷன் ~ வீட்டுக்காரன்
நண்பகல்	மத்தியானம் ~ மதியம்
ஆண்டு	வருஷம்
உண்	சாப்பிடு ~ தின்
பயன்	பிரயோஜனம் முதலியன.

வாக்கிய அமைப்பிலும் இரண்டுமே வேறுபடுகின்றன. குறை வாக்கியங்கள் எல்லா மொழியிலும், பேச்சுமொழியில் காணப்படும் வாக்கியங்கள் அளவில் சிறியவையாகவும் இருக்கும். எழுத்து

மொழியில் வாக்கிய அமைப்பில் அதிக ஒழுங்கு உண்டு; கூட்டு வாக்கியங்களும் துணை வாக்கியங்களும் நிறைய அமைந்திருக்கும்.

பேச்சுமொழியும் எழுத்துமொழியும் வேறுபட்டிருப்பதால் இரண்டையும் வேறுமொழியாகக் கருதவேண்டும் என்று எண்ணு கிறவர்களும் இருக்கிறார்கள். எழுத்துமொழியைப் பேச்சுமொழி யோடு தொடர்பு இல்லாதபடி, பழைய இலக்கண இலக்கியநெறிப் படி எழுதவேண்டும் என்று நினைப்பவர்களையும் காணலாம்.

உயிரோட்டமும் தெளிவுமுள்ள உரைநடை பேச்சுமொழி அடிப்படையிலேயே அமையவேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.[6]

9. பேச்சு மொழியின் பழமை

கொச்சை மொழி என்று கருதப்படுகிற இன்றைய பேச்சு மொழியிலும், எப்படிப் பழமைக் கூறுகள் அமைந்துள்ளன என்று பார்ப்போம். பொதுவாகச் சில வடிவங்களைப் பார்க்கும்போது எழுத்துமொழியே பழைய வடிவம் என்று எளிதில் தோன்றும் படொ(ம் , கெழக்கு போன்ற சொற்களில் படம் கிழக்கு என்ற எழுத்துமொழி வடிவமே காலத்தால் பழமையானது. ஆனால் விளக்கு — வெளக்கு என்ற வடிவத்தில் பேச்சு மொழி வடிவமே பழமையானது என்பது வெளிச்சம், வெள்ளை போன்று அதே அடிச்சொல்லிலிருந்து பிறந்த பிற சொற்களாலும் பிற திராவிட மொழிகளாலும் (கன்னடம், பெளகு; கோடா, வெள்க்; துளு, பெளகு DED. 4524) உறுதியாகிறது. சங்க காலத்திற்கு முன்னரே எகரம் அடுத்த அசையில் அகரம் இருக்கும்போது இகரமாகச் சில கிளை மொழிகளில் மாறியிருக்கவேண்டும். அதுவே நிலைமொழி யாக எழுத்து மொழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் இன்றும் அப்படியே எழுதி வருகிறோம். இன்று இலங்கை தவிர ஏனைய கிளை மொழிகளில் எகரம் பயன்படுகிறது.

சங்க இலக்கியம் முழுமையும் முன்னிலைப் பன்மை வடிவமாக நீயிர், நீர் என்ற வடிவங்களே காணப்படுகின்றன. ஆனால் தேவாரத்தில் நீங்கள் என்ற இரட்டைப் பன்மை வடிவமும் சீவக

சிந்தாமணியில் (1045) நீம் என்ற வடிவமும் காணப்படுகின்றன. பிறதிராவிட மொழிகளிலும், நீம் என்ற வடிவமோ அதன் திரிந்த வடிவங்களோ காணப்படுகின்றன. எனவே வரலாற்று நிலையில் நீம் என்பதே பழமை உடையது. ஆனால் அது சங்க காலத்தில் காணப்படவில்லை. ஆயினும் இன்னும் கன்னியாகுமரி மீனவர் தமிழிலே நீமெ என்ற வடிவம் வழங்கிவருகிறது (சண்முகம்பிள்ளை 1966). எனவே பேச்சு மொழியை வரலாற்று நிலையில் அலட்சியம் செய்யக்கூடாது. இங்கு அருணபாரதியின் கட்டுரை ஒன்று (1975) இந்தவகையில் சில உண்மைகளை எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது பலவேறு தொழில்கள் செய்யும் மக்களிடையே வழங்கும் சொற்களஞ்சியத்தில் இலக்கியத்தமிழில் ஏறாத, நுண்ணிய வேறுபாடு உடைய பல சொற்கள் இருப்பதைக் கிளைமொழி ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். காற்றின் வகையாக பதினைந்துக்கும் மேற்பட்ட சொற்களும், நீரின் பெயர்களாக இருபதுக்கு மேற்பட்ட சொற்களும் உள்ளன. அதுபோல் உப்பு தயாரிப்போர் பேச்சில் எட்டுவகையான உப்பைக் குறிக்கும் சொற்களும் உள்ளன. (சீனுவாசவர்மா, 1977:203-208) தமிழில் ஆயிரக்கணக்கான சொற்கள் தேவைப்படும் இக்காலத்தில் கிளை மொழி ஒரு நல்ல ஆதாரமாக இருக்கும் என்ற கருத்து மொழியியலாலர்களிடையே மட்டும் இன்றி பிறதுறை அறிஞர்களிடமும் (கணேசன், 1972: 39, இராமலிங்கனார், 1972) பரவி வருகிறது. இவையெல்லாம் பேச்சுமொழியைத் தாழ்வாகக் கருதி உதாசீனப்படுத்தக்கூடாது என்பதைக் காட்டுகின்றன. பேச்சுமொழியை மதிக்கக் கற்றுக்கொண்டால் எழுத்துமொழியில் ஏற்படும் மாற்றத்தை அனுதாபத்தோடு புரிந்துகொள்ள முடியும்.

10. மொழியின் இலக்கணம்

இருநிலை உடைய மொழிகளில் இலக்கணம் புறநிலையாக அமைகிறது என்ற கருத்து காணப்படுகின்றது என்று மேலே குறிப்பிட்டோம் அல்லவா; தமிழ் இருநிலை மொழி என்பதற்கு ஏற்ப அப்படிப்பட்ட கருத்தும் இருக்கிறதா என்று பார்ப்போம்.

தமிழ் இலக்கண நூல்கள், மொழியின் இலக்கணம் அகநிலையாக அமையும் என்றே கூறியிருக்கின்றன. தொல்காப்பியப் பாயிரம்,

> ''வழக்கும் செய்யுளின் ஆயிருமுதலுன்
> எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' (வரிகள், 4, 5)

என்று கூறுவது உலக வழக்கையும் செய்யுளையும் அடிப்படையாகக் கொண்டு எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றை ஆராய வேண்டும் என்று பொருள்படும்.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்று நன்னூலும் (14.11) கூறுகின்றது. எனவே மொழியில் வழங்கும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டது இலக்கணம் என்பது அகநிலையைக் காட்டுகிறது. ஆயினும் அவர்கள் எவ்வளவுதூரம் இலக்கிய வழக்கைத் தழுவி தங்களுடைய இலக்கணத்தை எழுதியிருக்கிறார்கள் என்பது விவாதத்திற்கு உரியது. இலக்கணங்கள் இலக்கிய மொழியைப் புறக்கணித்துவிட்டன என்பதற்கும் பல உதாரணங்கள் காட்டமுடியும். சான்றாக, **செய்தால்** என்னும் வாய்பாட்டு நியதிப்பொருள் தரும் வினையெச்சம் சங்க காலத்தில் சிறுபான்மையாகவும் இடைக்காலத்தில் பெரும்பான்மையாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தும் அதை இடைக்காலத்தில் எழுந்த வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய மூன்று இலக்கண நூல்களும் புறக்கணித்து விட்டன; இலக்கண விளக்கம் என்ற நூலே முதலில் கூறியுள்ளது (சண்முகம், 1969:78, சண்முகம் 1978). ஆயினும் கருத்தளவில் இலக்கணம் அகநிலையாக அமைகிறது என்பதே இலக்கண ஆசிரியர்களுக்கு உடன்பாடு. ஆனால் பேச்சுமொழியும் எழுத்துமொழியும் அதிக வேறுபாடு உடைய இந்தநாளில் இலக்கணம் புறநிலையாகவே அமைகிறது என்ற கருத்தே தமிழ் அறிஞர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் பேச்சுமொழி தாழ்வாகவும் எழுத்துமொழி உயர்வாகவும் மதிக்கப்படுவதே. அதனால் எழுத்துமொழி பண்டைய இலக்கண இலக்கிய நெறியைப் பின்பற்றவேண்டும் என்று எண்ணி இன்றைய எழுத்துமொழி வழக்குகள்கூடப் புறக்கணிக்கப்படுகின்றன.

'ஆற்றுக்குக் கரைபோலவும் வயலுக்கு வரப்புப்போலவும் விளையாட்டு இடத்திற்கு வரம்புக்கோடுபோலவும் மொழிக்கு அரணாய் நிற்பது அணிமிகு இலக்கணம்'.

(முத்துப்பிள்ளை, 1974:83)

'இலக்கணம் ஒரு மொழிக்கு முதுகெலும்பு போன்றது'

(பரந்தாமனார், 1972:49)

என்று பலர் கூறுகின்றனர். இதன் பலன், மொழியின் இலக்கணம் அறிய அந்த மொழி வழங்கும் காலத்தில் எழுந்த நூல்களை ஆராயாது ஒதுக்கித்தள்ளிவிட்டு வேறு எங்கேயோ போய் தேடிப் பிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய இரண்டில் தான் இன்றைய மொழிக்குரிய இலக்கணம் அமைந்துள்ளது என்று நினைப்பவர்களும் கம்பர் காலம் வரையில் உள்ள இலக்கியங்களை ஒத்துக்கொண்டு அவைகளில்தான் இலக்கணத்தைத் தேடவேண்டும் என்று கருதுகிறவர்களும் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

பிற மொழிச் சொற்களை எப்படித் தமிழாக்குவது என்பது எழுத்துச்சீர்திருத்தத்தோடு தொடர்புடைய பிரச்சனை. அதைப் பற்றி மகாதேவன் (1973:23) குறிப்பிடும்போது,

'தொல்காப்பியம் வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது வடமொழிச் சொற்களையும் ஏற்காது தமிழ் எழுத்துக்களாலேயே எழுதவேண்டும் என்பதனை,

"வடசொற்கிளவி வடவெழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்று கூறியருளினார். இந்த விதி சிலருக்கு இன்று வேப்பங் காயாகக் கசக்கின்றது. ஆனால் இளங்கோவும், கம்பரும், சேக்கிழாரும் இந்தப் பாதுகாப்புக் கவசத்தை அணிந்து கொண்டதால் தான் எழுத்துக் குழப்பத்திலிருந்து தப்பிக்கொள்ள முடிந்தது' என்று விளக்குகிறார். இங்கு தொல்காப்பியமும் அதன் விதியைப் பின்பற்றுகிற அளவு 13-ஆம் நூற்றாண்டுவரையுள்ள இலக்கியமும்

பாராட்டப்பட்டு இன்றும் நாம் அதே வழிதான் தழுவிக்கொள்ள வேண்டும் என்று சிபாரிசும் செய்கிறார். எனவே, இலக்கணம் புறநிலை என்பதே அவர் கருத்து என்பது நன்கு புலனாகிறது. அதனால்தான் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்த பல இலக்கியப் புலவர்கள் அருணகிரியார், தாயுமானவர், சுப்பிரமணிய பாரதியார், சுந்தரம் பிள்ளை ஆகியவர்களும் இன்றைய படைப்பு இலக்கிய ஆசிரியர்களும் பலதுறை அறிஞர்களும் கையாண்டுள்ள மொழி அவர் கண்ணில் படாமல் மறைந்து விட்டது (விளக்கத்துக்குச் சண்முகம், 1978; Sugathapala De Silva, 1975:48).

பரந்தாமனார் இன்றைய தமிழில் ஏற்பட்ட வளர்ச்சியை ஒத்துக் கொண்டு சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகளில் புதுமையைக் காட்டினாலும் சிலச்சில இடங்களில் இன்றைய வழக்குகளைத் தற்கால இலக்கியப் பயிற்சி நோக்காது கண்டிக்கிறார். பன்மைப் பெயர்கள் அமையும் விதம் பற்றி விளக்கும்போது நாள் என்ற சொல்லின் பன்மை வடிவத்தை

'நாட்கள் என்று எழுதாமல் நாள்கள் என்றே எழுதுக; நாட்கள் என்பது புதிய கள் என்று பொருள் தரும்' (பரந்தாமனார், 1972: 155) என்று கூறிச் சென்றுள்ளார். ஆனால் இன்று பலர் நாட்கள் என்றே எழுதுகின்றனர். மறைமலையடிகளும் (அம்பிகாபதி, ப. 23) வரதராசனும் (சிறுகதைத்திரட்டு, ப. 44) கூட நாட்கள் என்றே பயன்படுத்தியுள்ளனர். எனவே இங்கு இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிஞர்களின் வழக்குகூட அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்கெல்லாம் காரணம் தற்காலத்தமிழ் மொழிவரலாற்றில் ஒரு தனிக் காலக்கட்டத்தைச் சேர்ந்தது என்பதை அறிந்து அதற்குரிய இலக்கணத்தை அகநிலையாக இன்றைய எழுத்துமொழியையும் பேச்சுமொழியையும் ஒட்டி ஆராயும் முறை வளராதது; வளர்ந்தவற்றையும் புறக்கணிப்பதுதான்.

11. வரலாற்று நோக்கில் இன்றைய எழுத்துமொழி

மொழி வளர்ச்சியை விளக்கும் வரலாற்று மொழியியலார் மொழி வரலாற்றைப் பல காலகட்டங்களாகப் பிரித்தே பேசுவார்கள்.

அப்படிப் பிரிப்பதற்கும் மொழி அமைப்பில் உள்ள வேறுபாடே அடிப்படையாகக் கொள்வார்கள். மொழிவளர்ச்சியைப் பிரித்துக் காட்டும்போது பழங்காலம், இடைக்காலம், தற்காலம் என்று மூவகையாகப் பிரிக்கும் மரபு உண்டு. அந்த அடிப்படையில் இன்றைய தமிழைத் தற்காலத் தமிழ் என்று குறிப்பிடுவோம். இது 17 ஆம் நூற்றாண்டிலிருந்து துவங்கியிருக்க வேண்டும் என்ற கருத்து காணப்பட்டாலும் (சண்முகம் 1972) இருபதாம் நூற்றாண்டுத் தமிழைப் பல்வேறு காரணங்களால் தனித் தன்மை வாய்ந்ததாகவே கருதலாம். ஆயினும், முற்காலத்தின் மொழிக் கூறுகளும் ஆங்காங்கே காணப்படும்; அவைகளைச் சுட்டிக்காட்டி விட்டு தற்காலத் தமிழின் சிறப்புப் பண்புகளை விளக்குவோம்.

2, 4, 6 ஆகிய வேற்றுமை உருபுகள், இறந்தகால, எதிர்கால விகுதிகள் ஆகியவை சங்க காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றன. அப்படியே அன்று வழங்கிய பல சொற்களின் வடிவங்கள் இன்றும் பயன்பட்டு வருகின்றன. ஆண், பெண், ஒன்று, ஐந்து, ஆறு, காலை, மாலை, உழு, நெய், ஓடு, காண் போன்ற பல சொற்களில் எந்தவித மாற்றமும் இல்லை. இவையெல்லாம் இன்றைய தமிழில் காணப்படும் சங்கத்தமிழ்க் கூறுகள். ஆயினும் சங்க காலத்திற்குப்பிறகு மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் இடைக் காலத்தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் தற்காலத்தமிழின் பரம்பரைச் சொத்தாக உள்ளது.

1. சொல்லுக்கு முதலில் ஆகார உயிரோடு கூடிய யகரமெய் மட்டும் கெட்டு உயிர்முதல் சொல்லாக மாறியது.

யாறு	ஆறு
யாடு	ஆடு
யாமை	ஆமை
யாண்டு	ஆண்டு

2. நாநுனி நுனி அண்ண வல்லொலியாக (த) இருந்தது இடைநா இடை அண்ண வல்லொலியாக சிலசொற்களில் திரிந்தது.

ஆய்த்தி	ஆய்ச்சி
இடைத்தி	இடைச்சி

3. சொல்லுக்கு முதலில் ச, சை போன்ற எழுத்துகளும், ய, யோ, யெள போன்ற எழுத்துகளும் நிறைய வந்துள்ளமை.

4. எண்ணுப் பெயரோடு அன் சாரியைப் பயன்படுத் தாமல் இன் சாரியை கையாளுவது.

ஒன்றனை ஒன்றினை

மூன்றனை மூன்றினை

5. இரட்டைப் பன்மை வடிவங்களும் பெரும்பான்மை வழக்காக வரத்தலைப்பட்டமை.

நாங்கள், தாங்கள், எங்கள், உங்கள், வந்தார்கள், செய்திர்கள்

6. நிகழ்கால விகுதியாக கிறு, கின்று மிகுதியாக ஆனமை.

7. வல்வினைகள் (Strong verbs) எனப்படுபவை சங்க இலக்கியத்தில் செய என்ற வினையெச்சத்தின்போது பகரமெய் ஏற்று வருவது (நடப்ப, படிப்ப, பார்ப்ப) பெரும்பான்மை வழக்கு: இடைக்காலத்தில் ககர மெய் ஏற்பதே பெரும்பான்மை (நடக்க, படிக்க, பார்க்க). அதுவே இன்றைய தமிழ் வழக்கு.

8. சொற்களஞ்சியத்திலும் இடைக்காலத் தமிழின் செல் வாக்கு நிறைய உண்டு. சரக்கு, சட்டை, அப்பா, கிழக்கு, மேற்கு கிழமை (நாள்) மாதம் போன்று நூற்றுக்கணக்கான சொற்கள் இடைக்காலத்தில் நினைவாக இன்றும் உள்ளன.

பொதுவாக தற்காலத்தமிழ் இடைக்கால்த் தமிழோடுதான் நிறைய ஒற்றுமை உடையது என்றாலும் அதற்கெனத் தனிச் சிறப்புகளும் பல உண்டு.

19-ஆம் நூற்றாண்டு எழுந்த இலக்கண நூலான சுவாமி நாதம் என்ற அய்ந்திலக்கண நூலுக்கு எழுதப்பட்ட எழுத் ததிகார விருத்தி உரையில் ர, ல என்ற இரண்டு மெய்யும் எல்லா உயிர்களோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும் என்றும் ட

கரம் அ, ஆ, ஈ, ஏ ஆகிய உயிர் எழுத்துகளோடு சேர்ந்த சொல்லின் முதலில் வரும் என்றதும் (சண்முகம், 1976 ஆ. 52,53) தற்காலத் தமிழின் ஒரு சிறப்பியல்பாகக் கொள்ளலாம். இன்று புதிய மெய் மயக்கங்களும் பயிலப்படுகின்றன. இவையெல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் என்ற நூலில் (சண்முகம் 1978) விளக்கப் பட்டுள்ளது.

புதிய சந்திகளும் தோன்றியுள்ள. அந்தந்த (அந்த + அந்த) நாலா பக்கமும் (நாலு+பக்கமும்), பத்திரிகாசிரியர் (பத்திரிகை+ ஆசிரியர்), அமெரிக்கர் (அமெரிக்கா + அர்), ரஷ்யர் (ரஷ்யா + அர்) போன்று எத்தனையோ சொற்களில் மாற்று வடிவங்கள் வந்து புதிய புணர்ச்சி விதியை அமைக்கும்படி செய்துள்ளன.

அஃறிணைப் பன்மை வடிவங்களும் இரட்டைப்பன்மை வடிவமாக (அவைகள், இவைகள்) மாறிவிட்டன. இன்று பல புதிய உருபன்கள் அமைந்துள்ளன. பெயர்ச்சொல்லில் எதிர்மறை வடிவம் சேர்க்கப்படுதல் இன்று பரவலாக உள்ளது. நாகரிகம் – அநாகரிகம்; அவசியம் – அனாவசியம்; நம்பிக்கை – அவநம்பிக்கை; சொல் – அவச்சொல்; மானம் – அவமானம் என்று வரும்போது எதிர்மறை உருபனைக்காணலாம். சிந்தனை – சிந்தி; கோபம் – கோபி போன்ற சொற்களில் பதிலி உருபன் (Replacive morpheme) என்று புதுவகை உருபனை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தை கோதண்டராமன் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார் (கோதண்டராமன், 1974:145).

வாக்கிய அமைப்பில் பழைய கால மொழியிலிருந்து தற்காலத் தமிழ் வேறுபட்டிருப்பதையும் பேச்சுமொழியை ஒட்டி அமைக்கப் பட்டிருப்பதையும் வரதராசன் சுட்டிக்காட்டியுள்ளார்[7] எனவே, இருபதாம் நூற்றாண்டு மொழி அமைப்பில் எல்லா நிலையும் தனித்தன்மை வாய்ந்தது என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அதன் உண்மையான தன்மையை உணர்ந்து வழிகாட்டும் முறையில் இலக்கணம் எழுதவேண்டுமானால் இன்றைய எழுத்து மொழியில் காணப்படும் பயிற்சிகளை எடுத்து ஆராய்ந்து அவற்றில் பெரும்பான்மையான வழக்குகளின் அடிப்படையையே

கொள்ளவேண்டும்; அதுவே நல்லதமிழ் எழுத வழிகாட்டி யாக உதவும். அது போலவே பழைய இலக்கியங்களைப் படிக்க வும் மொழி வளர்ச்சியை அறியவும் வேண்டுமானால், அதற்காகத் தனி இலக்கணம் எழுதவேண்டும்; இரண்டுவகை இலக்கணத் தையும் குழப்பினால் யாருக்கும் பயன்படாது.

பேச்சு மொழியில் பல கிளைகள் இருப்பது போலவே எழுத்து மொழியிலும் பல வேறுபாடுகள் உண்டு. அவைகளை நடை அடிப் படையில் இலக்கிய ஆராய்ச்சியாளர் ஆராய்வார்கள். மொழி அமைப்பு அடிப்படையிலும் பலவகை இருப்பதை உணரலாம். அதுபற்றி விரிவான ஆராய்ச்சி நடைபெறாததால் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

பண்டிதர் நடை என்று சிவஞானம் (1960: 69) குறிப்பிடு கிறார். தமிழ் படித்தவர்கள் தங்களைப் போன்று பிறருக்கும் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கும் இலக்கியம், சமயம் குறித்து எழுதவே இந்த நடையைப் பயன்படுத்துவார்கள். மொழித் தூய்மையும் பழைய மொழியின் செல்வாக்கும் இதன் தனிச் சிறப்புக்கள். இதை இலக்கணத் தமிழ் என்று குறிப்பிடலாம்.

இன்னொரு வகைத் தமிழை இலக்கியத் தமிழ் என்று அழைக் கலாம். இது மொழியில் தனிப்புலமை இல்லாதவர்களை நோக்கி, படைப்பு இலக்கியமான நாவல் சிறுகதை, வரலாறு, சமூக சீர் திருத்தம் முதலிய பல பிற துறை பற்றியே பெரிதும் பயன் படுத்தப்படும். இதில் பேச்சு மொழியின் செல்வாக்கும் பிறமொழிச் செல்வாக்கும் காணலாம். இது பல உட்பிரிவு உடையது. அரசியல் வாதிகள் பயன்படுத்தும் மொழிக்கும் படைப்பு இலக்கியவாதிக்கும் சில வேறுபாடுகள் உண்டு.

சமயத்தமிழ் என்ற மற்றொரு வகையையும் அமைக்கலாம். சமயம் பற்றிப் பொதுமக்களுக்காகச் சமய நோக்கத்தோடு எழுதப் படுவது இது. இதில் வடமொழிச் செல்வாக்கு அதிகம் இருக்கும்.

கடைசியாக, பத்திரிகைத்தமிழ் என்ற ஒன்றும் உண்டு. இது பொது மக்களுக்காக உலக நடப்பு, நாட்டு நடப்பு விஷயங்களை எளிய முறையில் சொல்ல முயற்சிக்கும், உலகில் எல்லாப் பகுதியிலும் நடக்கும் முக்கிய அரசியல், கலாச்சார விஷயங்களே இதற்குரிய பொருள். இதற்கு ஆதாரம் பிற மொழியாயினும் ஆங்கிலமே நேரடியாகப் பயன்படும். எனவே ஆங்கிலமொழியின் மறைமுகச் செல்வாக்கை ஆங்காங்கே பார்க்க முடியும். புதிய புதிய தொகைகளும் தொடர்களும் உண்டாக்கப்படும், வார, மாதப் பத்திரிகைகளில் இலக்கியத் தமிழிலும் சமயத்தமிழிலும் அடங்குவனவாகக் கொண்டு செய்தித்தாள் தமிழே பத்திரிகைத் தமிழ் என்று கொள்ளவேண்டும். எனினும் எழுத்து அடிப்படையில் பார்க்கும்போது பொதுவாக பத்திரிகைகளே பல திருத்தங்களை முன்னோடியாக இருந்து செய்து வந்திருக்கின்றன; செய்தும் வருகின்றன. எனவே பத்திரிக்கைத் தமிழ் என்பது எல்லா தின, வார, மாத பத்திரிகைகளில் பயன்படும் தமிழைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பத்திரிக்கைத் தமிழ் பற்றி இப்பொழுது தங்கமணியன் (1978) தனி நூலே எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி எழுத்துத்தமிழ் பலவகைப்படுவதை விரிவாக ஆராய்ந்து தனித்தனி இலக்கணம் எழுதலாம்; எழுதவேண்டும். அப்போதுதான் தமிழ் எல்லாத் துறையிலும் சிறப்பாகப் பயன் படத்தக்க மொழியாய் விளங்கும்.

அடிக் குறிப்புகள்

1. In Singhalese, the High variety or the written variety is not used for speech at any time, and there are many features in the spoken usages that would not be permitted in the written language. This is clearly a case of diglossia for it shows mutually exclusive domains for the two varieties. Sugathapala, De Silva, 1975:45.

2. When group standards are thought of as something apart from the interacting of the group members, we tend

to think of them as somehow 'imposed' upon them. This gives rise to the notion that man is naturally unsocial and that law gives or moralists must come along and rescue him from his nasty brutish ways. This is non-sense. The generation of and acceptance of standards which regulate conduct and preclude randomness is a prerequisite of social intercourse. The having of standards springs out of social in the course, it is not imposed from outside upon it.

Sprott Human groups as quoted in *Linguistic divesity* p. 48.

3. As used by the millions of members of the Tamil speech community in India to-day, it fits the definition exactly. Tamil diglossia seems to go back many centuries.

Ferguson, 'Diglossia' p.

4. It is remarkable peculiarity of the Indian languages that, as soon as they begin to be cultivated, literary style evinces a tendency to become a literary dialect distinct from the dialect of common life, with a grammar and vocubulary of its own. This is equally characteristic of the speech of the Aryans of the North and that of the Dravidians of the South.

Caldwell, *Comparative Grammar* p. 78

5. Even at the time of the oldest extant High Tamil compositions were written, there was probably almost as wide as a difference between the language of the vulgar and that affected by the *literati* as there is at present. It is inconceivable that so elaborately refined and euphonised a style of language as that of the classical poems and grammars can ever have been the actual everyday speech of any class of people... Even the earliest have been accustomed to

regard expressions that were considered more or less archaic in their own time, as peculiarly suitable to poetical compositions.

Caldwell, p. 80

6. "The style of literary prose is alive and expressive chriefly in so far as it is rooted in that colloquial language"

7. "Great writers, Thiru Vi.ka, Subramania Bharathi and others rendered valuable service in moulding the modern literary Tamil on the syntax of the spoken Tamil through their writings in journals which served as the media of mass communication."

Varadarajan, 1962:84 £

துணை நூல்கள்

1 அருணபாரதி, ந. 1975 "பேச்சு மொழியில் பழமைக்கூறுகள்". புலமை, 1-4.

2 இராமலிங்கனார், 1972 ஆட்சித் தமிழ், சென்னை.

3 ஏசுதாசன், கி. 1976 "பால் வேற்றுமையில் மொழி வேறுபடும் தன்மை", புலமை-2, 240-66.

4. கணேசன், இரா. 1972 அறிவியல் தமிழாக்க முறைகள், சென்னை.

5 கோதண்டராமன், பொன். 1974 செந்தமிழ், சென்னை.

6 சண்முகம், செ. வை. 1971 "சங்க இலக்கிய மொழி அமைப்பு", ஆராய்ச்சி-2. 223-234.

7 1972 ''பழந்தமிழ் அய்கார அவ்காரங்கள்'' நான்காவது கருத்தரங்கு மலர், பக். 368-373. திருவனந்தபுரம்.

8 1974 ''பழந்தமிழ்க் கிளைமொழிகள்'', லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர், பக். 58–61, லண்டன்.

9 1976 ''மொழித்தூய்மை'', லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர் 1–10. லண்டன்.

10 1978 எழுத்துச் சீர்திருத்தம், அண்ணாமலை நகர்.

11 சிவஞானம், ம.பொ. 1960 தமிழும் கலப்படமும், சென்னை.

12 சீனிவாசவர்மா, கோ. 1977 கிளைமொழியியல், அண்ணாமலை நகர்.

13 ஞானசுந்தரம், பெரியாழ்வார். 1935 ''புதுமைத் தமிழ் இலக்கியத்தில் பேச்சு மொழி'', புலமை, 1.2, பக். 1–22.

14 தொல்காப்பியம், கழகப் பதிப்பு, சென்னை.

15 நன்னூல், உ. வே. சா. பதிப்பு, சென்னை.

16 பரந்தாமனார், அ. கி. 1972 நல்ல தமிழ் எழுதவேண்டுமா?, அய்ந்தாம் பதிப்பு, சென்னை.

17 மகாதேவன், 1973 'ஒலி பெயர்ப்பு', கலைக்கதிர், 26. 3, பக். 24–31.

18 மணியன், தங்க. 1978 பத்திரிக்கைத் தமிழ், பரணம்.

19 மறைமலை அடிகள், அம்பிகாவதி, சென்னை.

20 முத்துப்பிள்ளை, கோ. 1974 அரியணையில் அழகு தமிழ், சென்னை.

21 முத்துவீரியம், கழகப் பதிப்பு, சென்னை.

1 Berry, J. 1958 'The making of Alphabets', Proceedings of the Eigth International congress of Linguistics, Osla and in *Readings in the Sociology of Language*, (ed. Fishman, J. A. 1972).

2 Caldwell, R. 1856 *A comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages*, (Revd. Ed. 1956), Madras.

3 Burrow, T. & Emeneau, M. B. 1961 *A Dravidian Etymological Dictionary*, (D.E.D.) Oxford.

4 Ferguson, C. A. 1959 "Diglossia", *Word*, 15. 325-40& in *Language in Culture and Society*, (Ed. D. Hymes), pp 439.

5 Hall, R. A. J. 1975 'Review of written Language' General problems and problems of English, Joseph Vachek, *Language*, 51, 461-464.

6 Sankalia, H.D. 1971 'The Beginning of Civilization in South India', reprint II International Conference Seminar of Tamil Studies, Madras 1971.

7 Sethu Pillai, R.P. 1939 'Tamil Literary and colloquial' *Annals of Oriental Research* Vol. 3.1, 25-33, 3:2, 35-60.

8 Shanmugam, S. V. 1969 'A modern Evaluation of Viracōliam' *JAU*, 26, 65-78.

9 ——— 1971 'Dialects in the Inscriptional Tamil' *ORBIS*, XX-1, 90-98.

10 Shanmugam Pillai, M. 1960 'Tamil Literary and colloquial', *Linguistic Diversity of South Asia*, (Ed. Ferguson, C. A. & R. J. J. Greenberg IJAL, 26:3, 27-42

11 ——— 1965 'Merger of Literary and colloquial Tamil', *Anthropological Linguistics* 7:4, 98-103.

12 ——— 1965 'Caste Isoglosses kinship terms', *Anthropological Linguistics*, 7:3, 59-66.

13 ——— 1966 'Tamil Dialect Notes — Fishermen of Kanyakumari', *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies*, 2: 718-28. Kualalumpur.

14 Sugathapala Desilva 1975 '*Linguistic Diversty*', Annamalainagar.

15 Varadarajan, M. 1962 'The spoken and Literary language in modern Tamil', *Indian Literature*, New Delhi, 8:1, 82-89.

16 Zvelebil, K. V. 1964 '*Spoken Languages of Tamilnad*' Archiv orientalis, 32:2, 237-64.

விஞ்ஞானத் தமிழ்

இயல், இசை, நாடகம் என்று பிரித்தது போலவே, 'விஞ்ஞானத் தமிழ்' என்ற ஒரு புதுப் பிரிவை வகுத்து, மற்ற மூன்று பிரிவுகள் போல, இந்த நான்காவது பிரிவிலும், வளர்ச்சி, அல்லது வளர்வதற்கான அடிப்படை அமைப்பு இருக்கிறதா என்று பார்த்தால், பெரும்பாலும் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும். இது சற்றுத் துணிவான பதில் மட்டுமல்ல; இனியாவது நாம் அந்தத்துறையில் வளரத் துணை செய்யும் பதிலுமாகும். விஞ்ஞானத் தமிழ் இயற்றமிழில் அடங்கும். எனினும் அதன் இன்றைய தலைமை கருதியும், இயற்றமிழோடு இணைந்துவிட்ட சில அணுகு முறைகள், பாரம்பரியம் ஆகியவற்றை எண்ணியும், விஞ்ஞானத் தமிழ் என்ற பகுதியைத் தனித்தே காண்பது வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

இந்தக் கட்டத்திலேயே 'விஞ்ஞானத் தமிழ்' என்று நாம் கூறுவது எது, அதன் தன்மைகள் என்ன என்பதை விளக்குவது முறையாகும். இந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் வாழ்ந்து, மறைந்த பாரதி, தனது உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுத்த, நீங்காத, நிறைவெய்தாத, பல கனவுகளைப் பாடினான். அவற்றுள் ஒன்று கல்வி பற்றிய மகத்தான கனவு

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

என்று விரும்பினான்; வேண்டினான். அவன் விரும்பிய அந்தப் பல்கல்வி தருவதற்கான சொல் வளத்தை, குறியீட்டுத் தொகுப்பை நடை அமைப்பை, சுருக்கமாகக் கூறுவதானால், அதற்கான நூல்களைக் கொண்ட தமிழைத்தான் 'விஞ்ஞானத் தமிழ்' என்கிறோம்.

டாக்டர் வா.செ. குழந்தைசாமி எழுதிய
'விஞ்ஞானத் தமிழ்' (களஞ்சியம்) என்ற
கட்டுரையிலிருந்து.

மொழியியல் 2.3 (1978)

தன்மை, முன்னிலைப் 'பன்மை'கள்

ந. குமாரசாமி ராஜா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

"நான்", "நீ" என்ற தமிழ்ச்சொற்கள் முறையே பேசுவோர் ஒருவரையும், கேட்போர் ஒருவரையும் குறிப்பன. எனவே இவற்றை ஒருமைச் சொற்கள் என்றல் பொருந்தும். "நாம்" "நாங்கள்", "நீங்கள்" என்பன பன்மைச் சொற்கள் எனப்படுகின்றன. "கள்" விகுதி ஏற்றதாலும், மகரம் கொண்டு முடிவதாலும் வடிவளவில் இவை பன்மையே யாயினும், பொருளளவில் இவற்றைப் பன்மை எனல் பொருந்துமா என்பது ஆய்வுக்குரியது.

முதலில் "நீங்கள்" என்ற சொல்லைக் காண்போம். இந்தப் 'பன்மை' வடிவின் பொருள்கள் வருமாறு:

i) Ap 'கேட்போர் பலர்'

ii) A+O 'கேட்போர் ஒருவரும் வெளியார் ஒருவரும்'

iii) Ap+O 'கேட்போர் பலரும் வெளியார் ஒருவரும்'

iv) $A+O_p$ 'கேட்போர் ஒருவரும் வெளியார் பலரும்'

v) A_p+O_p 'கேட்போர் பலரும் வெளியார் பலரும்'

(ஈண்டு 'A' என்பது கேட்போரையும். 'O' என்பது வெளியாரையும் (=பேசப்படுபவரையும்) குறிக்கும். பெரிய எழுத்துக்களான 'A', 'O'க்களுக்கு அடியிலுள்ள சிறிய எழுத்து 'P' பன்மையைக் குறிக்கும், பேசுவோரைக் குறிக்க இனி 'S' என்ற பெரிய எழுத்து பயன்படுத்தப்படும்.)

"நீங்கள்" என்பதற்குக் குறைந்தது ஐந்து பொருள்கள் உள்ளன என்று மேலே கண்டோம். இவற்றுள் முதலாவது (A_p) கேட்போரின் பன்மையைக் குறிக்கும். பேச்சு நிகழும்போது கேட்போரே முன்னிலையாளர் ஆதலால் 'முன்னிலைப் பன்மை' என்பது முறைப்படி கேட்போரின் பன்மையைத்தான் குறிக்க வேண்டுமே தவிர, படர்க்கையாளர் ஒருவரையும் உளப்படுத்தலாகாது. எனவே "நீங்கள்" என்பது முதற் பொருளில் (A_p) தான் உண்மையான முன்னிலைப் பன்மையாகும். இச்சொல்லின் ஏனைய நான்கு பொருள்களும் ($A+O$; A_p+O; $A+O_p$; A_p+O_p) படர்க்கையாளர் ஒருவரையோ, பலரையோ உளப்படுத்துவன. எனவே இந்த நான்கு பொருள்களிலும் "நீங்கள்" என்ற சொல்லை முன்னிலைப் பன்மை என்று கூறுதல் பொருந்தாது எனலாம்.

"நீங்கள்" என்ற சொல்லின் இரண்டாம் பொருள் ($A+O$) கேட்போர் ஒருவரையும், வெளியார் ஒருவரையும் உளப்படுத்தியதாகும். இங்கே "நீங்கள்" என்பதை "நீயும் அவனும்" என்று விரிக்கலாம். (இதனை "நீயும் அவளும்" என்றும், "நீயும் அதுவும்" என்றும் விரிக்கலாம் எனினும், எளிமை கருதி 'O' என்பது 'அவன்' என்ற ஆண்பாற் கருத்தை மட்டும் குறிப்பதாகக் கொள்ளலாம்.) "நீங்கள்" என்ற சொல்லின் மூன்றாம் பொருள் (A_p+O) கேட்போர் பலரையும், வெளியார் ஒருவரையும் உளப்படுத்துவது. இங்கே இதனை "நீங்களும் அவனும்" என்று விரிக்கலாம். இதே சொல் நான்காம் பொருளில் ($A+O_p$) "நீயும் அவர்களும்" என்று விரிபடும். அய்ந்தாம் பொருளில் (A_p+O_p)

x) Sp+Op 'பேசுவோர் பலரும் வெளியார் பலரும்'

இவை அய்ந்தனுள் முதற்பொருளில் (Sp) வரும் "நாங்கள்" என்பதை 'புறப்பாட்டு நாங்கள்' என்று கருதலாம். மற்றப் பொருள்களில் வருவது 'உளப்பாட்டு நாங்கள்' ஆகும்.

உளப்பாட்டுப் பொருளில் வரும் "நாங்கள்" என்ற சொல்லைப் பின்வருமாறு விரிக்கலாம்:

vii) "நானும் அவனும்"

viii) "நாங்களும் அவனும்"

ix) "நானும் அவர்களும்"

x) "நாங்களும் அவர்களும்"

உண்மையான 'தன்மைப் பன்மை' என்பது முதற்பொருளில் (Sp) வரும் "நாங்கள்" என்பதே. ஈண்டு பேசுவோர் உளர்; வெளியார் யாரும் இலர். 'தன்மை' என்பது பேசுவோரையே குறிக்கும் என்றால், 'தன்மைப் பன்மை' என்பது, முறைப்படி, பேசுவோரின் பன்மையைத் தான் குறிக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பலர் சேர்ந்து ஒருங்கிணைந்த குரலில் ஒரு செய்தியைக் கூறுதல் இயற்கைக்கு முற்றிலும் புறம்பானது அன்று. "வாழ்க!", "ஒழிக!" என்ற வியங்கோள் தொடர்கள் பலர் சேர்ந்து ஒரு குரலில் ஆர்ப்பரிக்கும் கிளவிகள் அன்றோ! மனுச் செய்துகொள்ளும்போதோ, அறிவிப்புச் செய்யும்போதோ பலர் கூடிக் கையொப்பமிட்டுத் தமது ஒருமித்த கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுதல் மரபேயாகும்.

"நீங்கள்", "நாங்கள்" போன்றே உளப்படுத்தும் இயல்பு கொண்ட சொல் "நாம்" என்பது. தன்மையும் (=பேசுவோரும்), முன்னிலையும் (=கேட்போரும்) ஒருவர் அல்லது பலராக உளப்பட்ட சொல் இது. படர்க்கையாளர் ஒருவரோ, பலரோ இதனுள் உளப்படுத்தப்படினும் தகும். எனவே "நாம்" என்ற சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள்கள் உண்டு. அவையாவன:

xi) S+A 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் ஒருவரும்'

xii) Sp+A 'பேசுவோர் பலரும் கேட்போர் ஒருவரும்'

xiii) S+Ap 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் பலரும்'

xiv) Sp+Ap 'பேசுவோர் பலரும் கேட்போர் பலரும்'

xv) S+A+O 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் ஒருவரும் வெளியார் ஒருவரும்'

xvi) Sp+A+O 'பேசுவோர் பலரும் கேட்போர் ஒருவரும் வெளியார் ஒருவரும்'

xvii) S+Ap+O 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் பலரும் வெளியார் ஒருவரும்'

xviii) Sp+Ap+O 'பேசுவோர் பலரும் கேட்போர் பலரும் வெளியார் ஒருவரும்'

xix) S+A+Op 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் ஒருவரும் வெளியார் பலரும்'

xx) Sp+A+Op 'பேசுவோர் பலரும் கேட்போர் ஒருவரும் வெளியார் பலரும்'

xxi) S+Ap+Op 'பேசுவோர் ஒருவரும் கேட்போர் பலரும் வெளியார் பலரும்'

xxii) Sp+Ap+Op 'பேசுவோர் பலரும் கேட்போர் பலரும் வெளியார் பலரும்'

"நாம்" என்ற சொல்லை இப் பன்னிரண்டு பொருள்களில் பின்வருமாறு விரித்துரைக்கலாம்:

xi) "நானும் நீயும்"

xii) "நாங்களும் நீயும்"

xiii) "நானும் நீங்களும்"

xiv) "நாங்களும் நீங்களும்"

xv) "நானும் நீயும் அவனும்"

xvi) "நாங்களும் நீயும் அவனும்"

xvii) "நானும் நீங்களும் அவனும்"

xviii) "நாங்களும் நீங்களும் அவனும்"

xix) "நானும் நீயும் அவர்களும்"

xx) "நாங்களும் நீயும் அவர்களும்"

xxi) "நானும் நீங்களும் அவர்களும்"

xxii) "நாங்களும் நீங்களும் அவர்களும்"

"நாங்கள்", "நாம்" என்ற இரு தமிழ் இடப்பெயர்களுக்கு மொத்தம் பதினேழு பொருள்கள் உண்டு. முன்னது ஐந்து பொருள்களையும், பின்னது பன்னிரண்டு பொருள்களையும் கொண்டது. ஆங்கிலத்திலுள்ள "we" என்ற சொல்லை இவ்வாறு பதினேழு வகையாகப் பகுக்கலாம். (vi) முதல் (x) வரையுள்ள அய்ந்து பொருள்களைக்கொண்ட ஆங்கிலச் சொல்லான "we"க்கு இணையாக தமிழ் "நாங்கள்" என்பதைக் கூறலாம். தமிழ்ச் சொல்லான "நாம்" என்பது (xi) முதல் (xxii) வரையுள்ள பன்னிரண்டு பொருள்களைக்கொண்ட "we"க்கு இணையானது.

தன்மை, முன்னிலை இடங்களை உள்ளடக்கிய இடப்பெயர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைந்த விதத்தைப் பின்வரும் பட்டியல் காட்டும்:


நான்
S
I
Sp
S+O
நாங்கள்
Sp+O
S+Op
Sp+Op
S+A
Sp+A
S+Ap
Sp+Ap
we
S+A+O
Sp+A+O
நாம்
S+Ap+O
Sp+Ap+O
S+A+Op
Sp+A+Op
S+Ap+Op
Sp+Ap+Op
நீ
A
Ap
A+O
you
நீங்கள்
Ap+O
A+Op
Ap+Op

கேட்போரைப் புறப்படுத்துவதா, உளப்படுத்துவதா என்ற அடிப்படையில் ஆங்கிலத்திலுள்ள "we" என்ற சொல் தமிழில் "நாங்கள்" என்றும், "நாம்" என்றும் பிரிந்தியல்கின்றது. தமிழ் மொழியிலுள்ள "நீங்கள்", "நாங்கள்", "நாம்" என்ற சொற்கள் (படர்க்கையாளரை) உளப்படுத்தல், புறப்படுத்தல் என்ற அடிப் படையில் இரண்டிரண்டு வகையாகப் பிரியும் அன்றோ? இந்தப் பாகுபாட்டுக்கிணையான ஆறு தனிச் சொற்களையாவது இவ் வவனியில் வழங்கும் மொழிகளில் ஏதேனும் ஒன்றில் காணக்கூடும்.

சுருங்கக் கூறின், ஆங்கிலத்தில் 'தன்மை, முன்னிலைப் பன்மைகள்' என்று கூறப்படும் "we", "you" என்ற சொற்கள் பொருள் அடிப்படையில் "நான்", "நீ" என்பனவற்றின் பன்மை கள் அல்ல. அவ்வாறே தமிழிலுள்ள "நாம்", "நாங்கள்", 'நீங்கள்" என்பன தன்மை, முன்னிலை ஒருமைச் சொற்களின் பன்மைகள் அல்ல. தமிழ்ச் சொற்கள் மூன்றனுள்ளும் "நாம்" என்பது உண் மையான பன்மைச் சொல்லாக ஆகவே முடியாது. ஏனை இரண் டான "நாங்கள்", "நீங்கள்" என்பன ஒரோவழி பன்மைச் சொற் களாகலாம். Sp என்ற பொருளில் வரும் "நாங்கள்" என்பதும், Ap என்ற பொருளில் வரும் "நீங்கள்" என்பதுமே உண்மையான பன்மைச் சொற்கள். இவற்றின் மற்றப் பொருள்களும், "நாம்" என்ற சொல்லின் எல்லாப் பொருள்களுமே கலப்படமானவை.

மலேசியத் தமிழில் ஆண் பெண் பேச்சு வேறுபாடு

மலேசியாவில் 'லோயர் பேராக்' என்ற பகுதியில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் பேச்சு மொழியில் ஆண்–பெண் பேச்சு வேறுபாடு கீழ்க்கண்ட சொற்களில் காணப்படுகிறது.

1. தமிழ்மொழிச் சொற்கள்

ஆண்	பெண்
இரும்புச்சட்டி	சீனிச்சட்டி
ஒல்லி	எலும்பு
சமைக்கிறது	ஆக்றது
சீலை	பொடவெ
பாட்டி	அம்மாயி
பெரியவரு	கிழவன்
மச்சினன்	கொழுந்தனார்
மாறு	தொடப்பம்

2. வடமொழிச் சொற்கள்

அர்ச்சனை/ணை	பூசெ
கோடீஸ்வரன்	பணக்காரரு
சந்திரன்	நிலா/நிலவு/நெலவு
சூரியன்	பொழுது
பரிசம்/பரியம்	மொலைப்பால் கூலி/ மொலைக் கூலி

3. மலாய் மொழிச் சொற்கள்

பிரெஞ்சா	மேசை
வாங்கு	பெஞ்சு
வெறி	கீலா

—ஆதாரம்: இராம சுப்பையா அவர்களின்
A Lexical Study of Tamil Dialects in Lower Perak என்ற நூல்.

தமிழில் மொழித் திரிபு

கி. கருணாகரன்
கீ. மு. இருளப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

1. முன்னுரை

ஒரு மொழிநடையை (single style) மட்டுமே பேசுபவர் இவ்வுலகில் இல்லை என்பது சமுதாய மொழியியலாரின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். மொழிப்பயனில் சமுதாயச் சூழலுக்கேற்ப திரிபுகள் (variations) ஏற்படுகின்றன. மொழியைக் கற்கும் ஒருவர், அதைக் கற்றுக் கொள்ளும்பொழுது, அதன் பல்வேறு அமைப்புகளைக் கற்றுக்கொள்வதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. சமுதாயச் சூழலுக்கேற்ப மொழியின்பால் ஏற்படும் திரிபுகளையும் கற்றுக்கொள்கிறார். இதனால் குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் பயன்படுத்தப்படும் மொழிவழக்கில் — மொழிநடையில் சில மொழித் திரிபுகள் காணப்படுகின்றன. சமுதாய அமைப்பில் காணப்படும் மாறுபாட்டிற்கும் மொழியில் தோன்றிவரும் திரிபுகளுக்கும் குறிப்பிடத்தக்க தொடர்புகள் இருப்பதாக அண்மை சமுதாய மொழியியல் ஆய்வுகள் சில விளக்குகின்றன (Labov:

1966; Trudgill, 1975). இத் தொடர்புகள் சமுதாய மொழியியற் காரணிகளின் (Socio linguistic parameters) துணைகொண்டு விளக்கப்படுகின்றன.

2. மொழித் திரிபுகள்

மொழிப் பயனில் தோன்றிவரும் மொழி மாற்றங்களை மொழித் திரிபுகள் என்றும் (Linguistic variables) மொழித் திரிபான்கள் (Linguistic variants) என்றும் இருவகையாகக் கொள்வர் சமுதாய மொழியியலார்.

ஒரு நிலைபேறு வழக்கு ஒரு குறிப்பிட்ட மொழிநடை ஆகிய வற்றின் அமைப்பிலிருந்து வேறுபட்டு பல்வேறு சமுதாயப் பிரிவுகளின் மொழிப்பயனில் இடம்பெறும் மொழிக் கூறுகள் யாவும் மொழித் திரிபுகள் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக /எ/ என்னும் நிலை உயிரொலி வருமிடத்து /ஒ/ என்னும் வேறு உயிரொலியைப் பயன்படுத்தும் இயல்பு தமிழ் மொழியில் பொதுவாகக் காணப்படும் ஒலித்திரிபாகும் (Phonetic variation) அதாவது /பெட்டி/ என்ற சொல்லை /பொட்டி/ என்று பலரும் கூறுவர். எனினும் சமுதாயக் காரணிகளின் மூலம் விளக்கப்படும் மொழிக்கூறுகளையே சமுதாய மொழியியலார் சிறப்பாக எடுத்தாளுகின்றனர். விரிவான நிலையில் அமையும் மொழி வேறுபாடுகளே இங்கு மொழித் திரிபுகளாகக் கொள்ளப்படுகின்றன.

2.1. மொழித் திரிபான்கள்

'மொழித் திரிபான்' என்பது அதைவிடச் சிறிது நுண்ணிய நிலையில் காணப்படும் மொழித்திரிபாகும் (Sharp variation). மொழித் திரிபுகள் நிலை ஒலியன் (Phonomic norm) களுக்கிடையில் நடைபெறுதலைப் போன்று மொழித் திரிபான்கள் மாற்றொலி களுக்கிடையே ஏற்படுவதாகும். எடுத்துக்காட்டாக /எ/ என்னும் ஒலியனுக்குப் பல மாற்றொலிகள் (e, E, E^{y}, ε போன்று) உள்ளன. இவற்றில் [E] யும் [E^{y}] யும் பல இடங்களில் கட்டுப்பாடற்ற நிலையில் (without specific conditioning) வருபவைகளாகும்.

/எதை/ என்னும் சொல் பேச்சுத் தமிழில் /எதெ/ என்று வழக்கில் இடம்பெறுகிறது. இச்சொல்லின் கடைசியில் வரும் எகரம் சிலருடைய பேச்சு வழக்கில் [E] என்னும் மாற்றொலியாகவும் இன்னும் சிலருடைய வழக்கில் [Eʸ] / [ε] என்னும் மாற்றொலிகளாகவும் இடம்பெறுகிறது. இதுபோலவே/ஒ/என்னும் ஒலியனின் மாற்றொலிகளான [Ω]வும் [Ωʸ] / [ɔ] வும் பல இடங்களில் மாறுபட்டு வழக்கில் வருவதைக் காணலாம் (/*av*[Ω]/; /*av*[ɔ]/ 'she').

மொழித் திரிபான்கள் ஒரு ஒலியனின் மாற்றொலிகளைக் குறிப்பதோடு நின்றுவிடாமல் வெவ்வேறு ஒலியன்களின் மாற்றொலிகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளையும் குறித்து நிற்கும். அதாவது, மொழித் திரிபானது அருப நிலைகளுக்கிடையே (Abstract norm) ஏற்படும் வேறுபாடுகளைக் குறிக்கிறது. ஆயினும் இம் மொழியியல் வேறுபாடுகளின் உண்மையான உருவங்கள் அம்மொழி உறுப்புக்களின் மாற்று வடிவங்களில் (Allo-units) தான் பிரதிபலிக்கின்றன என்று சொல்லவேண்டும்.

2.2 மொழித் திரிபு வகைகள்

மொழித் திரிபுகள் 1. சமூகக் காட்டி (Social indicator) 2. சமூகநிலைக் காட்டி (Social marker) 3. சமூக நிலைப்பிழையெண்ணம் (Social stereotype) என மூன்று வகைப்படும். இவை சமூக வேறுபாட்டாலும் (Social difference) நடை வேறுபாட்டாலும் (Stylistic difference) பாகுபடுத்தப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை மொழித் திரிபுப் பிரிவுகளின் பண்புகளை விளக்கி அமைகிறது.

மொழித் திரிபுகள்	சமூக வேறுபாடு	நடைவேறுபாடு
சமூகக் காட்டி	+	—
சமூகநிலைக் காட்டி	+	+
சமூகநிலைப்பிழையெண்ணம்	—	+

2.2.1 சமூகக் காட்டி

எடுத்துக்காட்டாக / வந்துவிட்டது / என்று எழுத்து வழக்கில் வரும் சொற்றொடர் பேச்சு வழக்கில் / வந்துருச்சு/, / வந்துடுச்சு/

எனப் பரவலாக வழங்கப்படுகிறது. ஆனால் பிராமணப் பேச்சு வழக்கில் மட்டும் / வந்துடுத்து/ என்று நடை வேறுபாடின்றி பயன் படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்றே / வந்துகிட்டிருக்குது/ (வந்து கொண்டிருக்கிறது) என்பதை / வந்துண்டிருக்கு/ என்பர். இதுபோன்ற பண்புகளைப் பெற்ற மொழித் திரிப சமூகக் காட்டியாகும்.

2.2.2 சமூக நிலைக்காட்டி

சமூக நிலைக்காட்டியில் மொழித் திரிபானது சமூக வேறுபாடு களுக்கும் நடைவேறுபாடுகளுக்கும் ஏற்ப மாறும் தன்மையதாகும். பொதுவாக, பேச்சு நடையை 1. இயல்புப் பேச்சு நடை (Casual Speech Style) 2. சிறப்புப் பேச்சு நடை (Careful Speech Style) என்று இருவகையாகப் பிரிக்கலாம்*. பிராமணர்களுடைய பேச்சு வழக்கின் இயல்புப் பேச்சு நடையில் காணப்படும் பல சொற்கள் அவர்களின் சிறப்புப் பேச்சு நடையில் காணப்படாதது, சமூக நிலைக்காட்டி மொழித் திரிபுகளுக்கு உகந்த எடுத்துக்காட்டுகளாக அமையும். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இதனை விளக்குகிறது.

பிராமணர் பேச்சு மொழி

இயல்புப் பேச்சுநடை	சிறப்புப் பேச்சுநடை
/நேக்கு/	/எனக்கு/
/நோக்கு/	/உனக்கு/
/தூத்தம்/	/தண்ணி/

2.2.3 சமூக நிலைப் பிழையெண்ணம்

சமூக நிலைப் பிழையெண்ணங்கள் சமூக வேறுபாட்டிற் கேற்ப மாற்றம் அடையாமல், மொழிநடை வேறுபாட்டிற்கேற்ப மட்டும் மாறும் தன்மையது. இம்மாதிரியான மொழித் திரிபுகளுக்கு

---

* Labov, W. 1966. *Social Stratification of English in New York City*, Washington, D. C.

லெபாவ் என்ற அறிஞருக்கு முன் மொழிநடையைப் பற்றிப் பேசியவர்கள் எல்லாம் formal vs informal என்ற பாகு பாட்டினையே பெரும்பாலும் கொண்டிருந்தனர்.

எவ்விதக் காரணமும் இல்லை என்று ஒருசில சமுதாய மொழியியலார் கூறுவர். இவற்றை ஒரு சாரார் வரம்பிலா மாறிகள் Free Variations) எனவும் கூறுவர். எடுத்துக்காட்டாக, கீழ்க் கண்ட வரம்பிலா மாறிகள் தமிழ்ப் பேச்சு வழக்கில் மிகவும் பரவலாகக் காணப்படுகின்றன.

சமூக நிலைப் பிழையெண்ணம்	மொழிநடை	
	சிறப்புப் பேச்சுநடை	இயல்புப் பேச்சுநடை
1. க ~ வ	மகன்	மவன்
2. ய ~ வ	வயிறு	வவுறு
3. ய ~ச	மயிரு	மசிரு
4. எ ~ ஒ	பெட்டி	பொட்டி
5. ர ~ ந	ரத்தம்	நத்தம்

3. மொழியியல் வேறுபாட்டுக்கான காரணங்கள்

இதுவரை மொழியில் காணப்படும் வேறுபாடுகளைப் பார்த்தோம். இப்பகுதியில் அவ்வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராய்வோம். மொழியியல் வேறுபாடுகளுக்கான காரணங்கள் 1. அகக் காரணங்கள் (Internal Reasons) 2. புறக் காரணங்கள் (External Reasons) என இருவகைப்படும். அகக் காரணங்களால் மொழியில் ஏற்படும் மாற்றங்களை அம் மொழியின் அக அமைப்பினால் (Internal Structure) மட்டுமே விளக்க முடியும். ஆனால் புறக் காரணங்களால் ஏற்படும் மாற்றங்களை அம் மொழி பயன்படுத்தப்படும் சமுதாயச் சூழல் (Social Context) மொழி பேசுவோரின் சமுதாய அமைப்பு(Social Structure)போன்ற சில புறச் சூழல்களாலேயே விளக்க முடியும்.

3.1 அகக் காரணங்கள்

தமிழிலுள்ள /க/ என்னும் ஒலியனுக்கு 1. [x] பின்னண்ண குரலறு உரசொலி (Velar voiceless fricative) 2. [g] பின்னண்ண குரல் நிறை தடையொலி (Velar voiced stop) மற்றும்

3. [k] பின்னண்ண குரலறு தடையொலி (Velar voiceless stop) ஆகிய மூன்று மாற்றொலிகள் உள்ளன. பின்னண்ண உரசொலி சொல்லின் இரு உயிரொலிகளுக்கிடையே காணப்படுகிறது. உயிரொலிகள் அனைத்தும் தொடரொலிகளாகும் (Continuants). தொடரொலியின் இயல்பினால் தடை யொலியின் இயல்பானது தொடரொலியாக மாற்றப்படுகிறது. இது போன்றே பின்னண்ண குரல் நிறை தடையொலியானது மூக்கொலி (Nasal sound) க்குப் பின் வருகிறது. மூக்கொலிகள் அனைத்தும் குரல்நிறை ஒலிகளாகும். மூக்கொலியின் இக் குரல்நிறை இயல்பானது அடுத்துவரும் ஒலி, குரலறு தன்மையுடையதாக இருந்தால் அதைக் குரல் நிறைத் தன்மையதாக மாற்றவல்லது. எனவே /க/ என்னும் ஒலியனின் [g] என்னும் மாற்றொலியானது மூக்கொலிக்குப் பின்பாகவே எப்பொழுதும் வருகிறது. ஏனைய இடங்களில் பின்னண்ண குரல் நிறை தடையொலிகளே காணப்படுகின்றன. இதுபோன்று மொழியில் காணப்படும் வேறுபாடுகளை அம்மொழியின் அக அமைப்பின் மூலம் விளக்க முடிந்தால், அவ் விளக்கங்கள் அகக் காரணங்கள் எனப்படும்.

3.2 புறக் காரணங்கள்

மொழியியல் மாற்றங்கள் அகக்காரணங்களால் ஏற்படுவதைப் போன்றே புறக் காரணங்களாலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. புறக் காரணங்கள் 1) பேசுபவர் இடைப்படு வேறுபாடு (Interpersonal variation) 2. பேசுபவர் உட்படு வேறுபாடு (Intrapersonal variation) மற்றும் 3. இயல்பு வேறுபாடு (Inherent variation) என மூவகைப்படும்.

பொதுவாக, பங்கு பெறுவோரின் சமுதாய வேறுபாடுகளுக்கேற்ப மொழி வழக்கில் தோன்றும் வேறுபாட்டினை இடைப்படு வேறுபாடு என்பர். இது மதம், ஜாதி, கல்வித் தகுதி, வயது, பால், பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து மாறும். மொழி வேறுபாடானது, வேறுபட்ட சமுதாயச் சூழலுக்கும், வேறுபட்ட பொருட்களுக்குமேற்ப மாறுபடுமேயானால் அது பேசுநர் உட்படு வேறுபாடு எனப்படுகிறது. இயல்பு வேறுபாடுகளே உண்மையான வரம்பிலா மாறிகளாகும். எடுத்துக்காட்டாக,

/தாராளம்/, /தகராறு/ என்னும் சொற்கள் /தாளாரம்/, /தகராலு/ எனத்திரிதல் இயல்பு. இதற்கு எந்த விதமான பேசுபவர் உட்படு அல்லது பேசுபவர் இடைப்படு காரணங்களையும் சொல்ல முடியாது. இயல் வேறுபாட்டிற்கான காரணங்கள் ஓரளவு அம் மொழியின் வரலாற்று அடிப்படையிலும் அமையலாம். இவை தவிர மொழியியல் வேறுபாடுகள் பேச்சு செயலுக்கான (Speech Act), தலைப்பு (Topic), பேச்சுச் செயலில் பங்குபெறுவோர் (Participants) மற்றும் அத்தலைப்பு சார்ந்துள்ள பொருட் பகுதி (Domain) ஆகியவற்றைப் பொறுத்தும் ஏற்படுகின்றன என்று சொல்லவேண்டும்.

3.3 மொழி ஒழுங்கமைவும் மொழி மாதிரியும்

மொழி ஒழுங்கான அமைப்பினைக் கொண்டது எனப் பலரும் கருதுவர். பொதுவாக ஒத்த குணமுடைய பல பொருட்கள் அடங்கிய ஒரு தனிப்பட்ட எல்லையை ஒழுங்கமைவு (system) எனக் குறிப்பிடுவர். இவ்விளக்கத்தின்படி மொழியும் ஒரு ஒழுங்கமைவாகும். மொழி ஒழுங்கமைவு 1) அடைந்த ஒழுங்கமைவு (Closed system), 2) திறந்த ஒழுங்கமைவு (Open system) என இருவகைப்படும். அடைந்த ஒழுங்கமைவில் மொழியை அதன் சுற்றுப்புறச் சூழலின் தாக்கத்திற்கு அப்பாற்பட்டதாகக் கருதுகிறோம். இதுபோன்ற மொழியியற் கொள்கைகள், மொழியை அருபநிலையில் வைத்து நோக்குமேயன்றி, அதன் உண்மையான நிலையையும், அமைப்பையும் விளக்காது. திறந்த ஒழுங்கமைவில் மொழியை அதன் சுற்றுப்புறச் சூழலோடு இணைத்தே விளக்குகிறார்கள்.

மொழியை ஒரு ஒழுங்கமைவு எனக் கருதினால் அதை விளக்க ஒரு மாதிரி (Model) தேவைப்படுகிறது. இம்மாதிரியின் மூலமே மொழி ஒழுங்கமைவானது விவரிக்கப்படுகிறது.

3.4 திறந்த ஒழுங்கமைவின் மாதிரிகள்

மொழி ஒழுங்கமைவு மாதிரிகளை சமுதாய மொழியியலார் மூவகையாகப் பகுப்பர். அவையாவன: 1) படமாதிரி(Pictoral or Iconic model), 2) ஒப்பு மாதிரி (Analogue model), 3) குறியீட்டு

மாதிரி (Symbolic model). படமாதிரியில் ஒழுங்கமைவின் உறுப்புக்களுக்கும் மாதிரியின் உறுப்புக்களுக்கும் நேரடித் தொடர்பு (Direct relationship) காணப்படுகிறது. ஏனெனில் ஒழுங்கமைவின் பகுதிகளைப் படங்களாகவே இம்மாதிரியில் காட்டுவர். ஒப்பு மாதிரியில் ஒழுங்கமைவின் உறுப்புகளுக்கும் மாதிரியின் உறுப்புகளுக்கும் நேரடித் தொடர்பில்லாதிருந்த போதிலும், அனைத்தும் மறைமுகத் தொடர்பு கொண்டவை என்று கூறிவிட முடியாது. ஆனால் குறியீட்டு மாதிரியில் ஒழுங்கமைவின் உறுப்புகளுக்கும் மாதிரியின் உறுப்புகளுக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இல்லை. அனைத்துமே மறைமுகமாகக் குறியீட்டு முறைப்படி (Method of symbolization) நடைமுறை வழக்கில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற எளிதான குறியீட்டு மாதிரியையே மொழி ஒழுங்கமைவை விளக்க மொழியியலார் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

3.5 குறியீட்டு மாதிரி வகைகள்

குறியீட்டு மாதிரியை மொழியியலார் 1) அமைப்பியல் மாதிரி (Structural model), 2) மாற்றியல் மாதிரி (Transformational model) மற்றும் 3) இயக்க மாதிரி (Dynamic model) என மூவகையாகக் கொள்வர்.

3.5.1 அமைப்பியல் மாதிரி

அமைப்பியல் மாதிரிக்கு 1) மொழியின் ஒற்றுமைத்தன்மை (Linguistic homogeneity), 2) அறிதிறன் (Mutual intelligibility) மற்றும் 3) உள்ளுறைப் பகிர்வு உறுப்புகள் (Underlying shared components) என்று மூன்று அடிப்படைக் கொள்கைகள் உள்ளன. இம்மாதிரியில் மொழியின் அடைந்த ஒழுங்கமைவும், திறந்த ஒழுங்கமைவும் விளக்கப்படுகின்றது. இவற்றில் திறந்த ஒழுங்கமைவு விளக்கும் மாதிரிகள் 1. பொதுமையமும் புறப்பாட்டமும் (Common core and Overall pattern) 2. ஈரொலி (Diaphone) மற்றும் 3. ஈரொலி ஒழுங்கு (Diasystem) என்ற மூன்றாகும்.

3.5.1.1 பொதுமையமும் புறப்பாட்டமும்

இம்மொழியியல் மாதிரி ஹாக்கெட் (Hockett) என்ற மொழியியல் அறிஞரால் முதலில் கையாளப்பட்டது. இவருடைய கொள்

கைப்படி, தனிநபர் பேச்சில் (Idiolect) பொதுவாகக் காணப்படும் மொழியியல் உறுப்புக்களின் மொத்த அமைப்பே பொதுமையம் எனப்படும். புறப்பாட்டம் எனப்படுவது மொழியின் கிளைமொழி கள்பால் காணப்படும் அனைத்து உறுப்புகளின் மொத்த அமைப் பாகும். ஹாக்கெட்டின் இக்கொள்கையைப் பின்பற்றுபவர்கள் முதலில் மொழிக்கு ஒரு புறப்பாட்டத்தை அமைப்பர். பின் மொழிப் புறப்பாட்டத்திலிருந்து பொது மையத்தைத் தனியே பிரித் தெடுத்து, அதன் மொழியியலமைப்பை ஆராய்ந்து விளக்குவர். மொழிப் புறப்பாட்டத்தில், பொது மையத்தினுள் அடங்காத பகுதி கள் மொழியியல் வேறுபாடுகள் ஆகும். இவற்றை அறிதிறன் (Intelligibility) கொள்கையின் வாயிலாக விளக்க முடியும். ஆயினும் ஹாக்கெட்டின் இவ்விளக்க முறையில் இன்றைய மொழியியலார் அநேக குறைகளைக் காண்கின்றனர். இதற்குக் காரணம் பொதுமையம், அறிதிறன் ஆகியவையெல்லாம் நெகிழ் வான மொழியியல் கொள்கைகள் என்பதே (flexible linguistic concepts). அவற்றிற்கென்று ஒரு தனிப்பட்ட வரைமுறை கிடை யாது. இதன்மூலம் ஒரு மொழியின் பொதுமைய எல்லையைத் திட்ட வட்டமாக அறியமுடிவதில்லை. எனவே மொழியின் உறுப்பு களில் எவை பொதுமையத்தின் எல்லைக்குட்பட்டிருக்கின்றன, எவை புறத்தே அமைந்துள்ளன என்று திட்ட வட்டமாக அறிய முடிவதில்லை.

3.5.1.2 ஈரொலி

யூரியல் வைன்ரிச் (Uriel Weinreich) என்னும் மொழியியல் அறிஞர், கிளைமொழிகளை விளக்குமிடத்து, ஒலி, ஒலியன் என்ப வற்றோடு புதிதாக ஈரொலி (Diaphone) என்பதையும் சேர்த்துக் கொள்வார். மொழியமைப்பில் சொல்லின் பொருள் மாறுபடாமல் மாற்றத்தக்க அனைத்து ஒலிகளும் ஈரொலிகள் எனப்படும். எடுத்துக்காட்டாக, தமிழில் உகரமும் ஒகரமும் பலவிடங்களில் பொருள் மாறுபடாமல் மாறி அமைந்து கொள்ளும் தன்மையுடைய வையாகும். அதாவது குளம் என்பதைக் கொளம் என்று குறிப் பிட்டாலும் பொருள் மாறாது. இதுபோன்ற இயல்பினைத் தமிழின் பல ஒலிகள் பெற்றிருக்கின்றன. ஆயினும் இம் முறையிலும் பல குறைகளைக் காண்கின்றனர் இன்றைய மொழியியலார்

ஏனெனில் இவ்வீரொலி முறையின் மூலம் ஈரொலிகள் ஏன், எங்கு, எப்படி வழங்குகின்றன என்பன போன்ற விளக்கங்களை அறிய முடியாது போகிறது. இதைத் தொடர்ந்து இதே மொழியியலாரால் அமைக்கப்பட்ட மற்றொரு மொழியியற் கொள்கையே **ஈரொலி ஒழுங்கமைவு (Diaphonic system)** என்பதாகும். இதில் ஒன்றுக்கு ஒருமுக நேரடித் தொடர்பு (one to one direct relationship), ஒன்றுக்குப் பன்முகக் கலப்புத்தொடர்பு (one to many complex relationship) பன்மைக்குப் பன்முகக் கூட்டுத்தொடர்பு (one to many compound relationship), பல் ஒழுங்கமைவு (Polysystem) போன்றவற்றிற்கு ஏற்ப மொழியியல் வேறுபாடுகள் விளக்கப்படுகின்றன.

1. ஒ–ஒ நே. தொடர்பு

கி. மொ. 1, 2 // இ எ அ ஒ உ //

2. ஒ–ப க. தொடர்பு

$$\text{கி. மொ.}_1,\ \text{கி. மொ.}_2\ //\frac{\text{கி. மொ.}_2\ /\text{இ}/}{\text{கி.மொ.}_1\ /\text{இ}\sim\text{உ}/}\sim \text{எ}\sim \text{அ}\sim \text{ஒ}\sim \text{உ}//$$

எ. காட்டு

தின்னு : துன்னு போன்றவை

3. ப–ப கூ. தொடர்பு

$$\text{கி. மொ.}_1,\ \text{கி. மொ.}_2\ //\frac{\text{கி. மொ.}_2\ /\text{இ}-\text{எ}/}{\text{கி. மொ.}_1\ /\text{இ}-\text{உ}-\text{எ}\sim\text{ஒ}/}//$$

எ.காட்டு

மிளகாய்: மொளகாய் போன்றவை

4. பல் ஒழுங்கமைவு

கி. மொ.$_1$, கி. மொ.$_2$ //கி. மொ.$_2$/ழ~ள~ல/
கி. மொ.$_3$, கி. மொ.$_4$

கி. மொ.$_3$ / ள~ல /

கி. மொ.$_4$ / ல /

கி. மொ.$_1$ / ய~ள~ல / //

3.6 மாற்றிலக்கண மாதிரி

இம்முறை முன்மாதிரி பேசுநர்-கேட்குநரின் (Ideal speaker-hearer) அரூப மொழிநிலையை விளக்குகிறது. இம்மொழியியற் பிரிவினர் மொழியை ஒரு மனச் செயலாகக் கருதி, அதன் தனி நிலையுணர்த்தலின் நீங்கிய தன்மையை (langue) விளக்கு கின்றனர். இருப்பினும் இப்பிரிவினருள் சிலர், மொழியியல் வேறு பாடுகளையும் விளக்கும் எண்ணம் கொண்டுள்ளனர். மாற்றிலக் கணத்தின் காரணகர்த்தா; அறிஞர் சம்ஸ்கி (Chomsky) 1957ம் ஆண்டு தொடரியல் அமைப்பு (Syntactic Structures) என்னும் நூலின் மூலம் அவருடைய மாற்றிலக்கணக் கொள்கைகளை வெளியிட்டார். இதில் மொழியியல் வேறுபாடுகளுக்கும் இவர் இடமளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இம்மொழிக் கொள்கை யைப் பின்பற்றி,

1) பெய்லியின் உருபன் மாறி மாதிரி (Bailey's morphome varient model)

2) லெபாவின் மாறிவிதி மாதிரி (Labov's variable rule model)

என்ற இரு மொழியியல் மாதிரிகள் வெளிவந்துள்ளன.

3.6.1 பெய்லியின் உருபன் மாறி மாதிரி

இது சம்ஸ்கியின் 1957ம் ஆண்டு மாற்றிலக்கணக் கொள்கை யில் காணப்பட்ட கட்டாய விதி (Obligatory rule) கட்டாய மல்லாத விதி (Optional rule) என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். பெய்லியின் மொழியியல் அமைப்பில் 1) தொடர் மொழி அமைப்பு (Phrase structure) 2) மாற்றுமொழி அமைப்பு (Transformational structure) 3) உருபன் மாறிய அமைப்பு (Morpheme variant structure) என்ற மூன்று பிரிவுகள் உள்ளன. தமிழில் படர்க்கை பெண்பால் ஒருமை (Third person feminine singular)

வந்தாள், வந்தா, வந்தாங்க, வந்தது, வந்துச்சு, வந்துத்து என வழங்கப்படுவதை நாம் காண்கிறோம். பெய்லியின் உருபன்

மாறி முறைப்படி இவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைப்படி விளக்கவேண்டும்

படர்க்கை–பெண்பால்–ஒருமை

உருபு	மாறி
- ஆள்	~ ஆ
	~ ஆங்க
	~ அது
	~ உச்சு
	~ உத்து

இவ்வேறுபாடுகளுக்கான காரணங்களைப் பெய்லி 1) கட்டிலா மாற்றம் (Free variation) 2) கிளைமொழி வேறுபாடு (Dialect variation) என இரண்டாகப் பிரித்துச் செல்வார். இம்மாதிரியிலும் மூன்று முக்கிய குறைபாடுகள் இருப்பதாகத் தற்கால சமுதாய மொழியியலார் கருதுகின்றனர். அவையாவன: 1) நடை வேறுபாட்டை (Stylistic variation) இம்மாதிரி விளக்காதது, 2) மொழியியல் வேறுபாடுகளைச் சமுதாய வேறுபாடுகளுடன் (Sociolinguistic correlation) ஒத்துப் பார்க்காதது 3) மொழியின் இயக்கவியம் (Language dynamism) புறக்கணிக்கப்பட்டு, நிலைத் தன்மை (Static character) மட்டுமே விளக்கப்படுகிறது.

3.6.2. லெபாவின் மாறிவிதி மாதிரி:

மாற்றிலக்கண விதிகளுடன் மாறிவிதிகளையும் இணைத்து மொழியியல் வேறுபாடுகளை விளக்க, லெபாவ் மாறிவிதி(Variable rule) என்னும் விளக்க மாதிரியை அமைத்துள்ளார். எடுத்துக்காட்டாக, இரண்டு உயிரொலிகளுக்கு நடுவில் ணகரமும், னகரமும் பிராமணர்களின் இயல்புப் பேச்சு நடையில் மாறிவரும் தன்மையுடையன. லெபாவின் "மாறிவிதி" மாதிரி இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்கும்.

(ண) க. இ. /உயிர் – [+பிராமணர்]
(ன) [–சிறப்புப் பேச்சு நடை]
[+உயிர்]
[# — #]

(க. இ. கட்டாயமில்லை)

இம்மாறிவிதி மாதிரியிலும் மொழியின் இயக்கவியம் விளக்கப் படாதது இதன் குறைபாடாகும்.

3.7 இயக்க அலை மாதிரி

மொழியானது ஒரு இயக்கவியத்தில் சுற்றுப்புறச் சூழலுக் கேற்ப தொடர்ந்து ஏதேனும் ஒரு வகையில் – அளவில் மாறிக் கொண்டேயிருக்கும் தன்மையுடையதாகும். இதை விளக்கும் மாதிரிகளில் முதன்மையான ஒன்றே சார்லஸ் பெய்லியின் அலை மாதிரி (Wave model) யாகும்.

3.7.1 அலை மாதிரி

மொழியில் காணப்படும் மாற்றங்கள் அலைகளைப் போன்று ஒரு இடத்தில் தோன்றி பல இடங்களுக்கும் சீராகப் பரவிவரும் தன்மையுடையது என்ற கொள்கையின் அடிப்படையில் தோன்றி யதே அலை மாதிரியாகும். இக்கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது கட்மான் என்பவரின் குறிப்பளவு கோல் (Guttman's Implicational Scale) என்பதாகும்.

குறிப்பளவு கோள்: (Guttman)

மாறி/ பேசுநர்	1	2	3	4	5	6
1. அ	+	+	+	+	+	+
2. ஆ	—	+	+	+	+	+
3. இ	—	—	+	+	+	+
4. ஈ	—	—	—	+	+	+
5. உ	—	—	—	—	+	+
6. ஊ	—	—	—	—	—	+
7. எ	—	—	—	—	—	—

இவ்வட்டவணையின்படி (அ) என்னும் பேசுநர் ஆறு மொழி யியல் மாறிகளையும் பயன்படுத்துகிறார். இதற்கு நேர்மாறாக (எ) என்னும் பேசுநர் எந்த மொழியியல் மாறியையும் பயன்

படுத்துவதில்லை. ஆயினும் மொழியைப் பயன்படுத்துவோரில் பலர் இவ்விரு கடைநிலை (extreme stage) களிலும் இல்லாமல், அவற்றிற்கு இடைப்பட்ட நிலையில் (intermediate stage) நின்று பலவேறு விகித அளவுகளில் (varying proportions) மொழியியல் மாறிகளைப் பயன்படுத்துகின்றனர். (ஆ) என்னும் பேசுநரிலிருந்து (ஊ) என்னும் பேசுநர் வரை உள்ளவர்கள் இப்பிரிவினரே. இவர்களிடையே காணப்படும் வேறுபட்ட மொழியியல் மாறிகளே சமுதாய-மொழியியல் ஆய்வுகளுக்கு அடிப்படை அளவைகளாக (Basic measures) அமைகின்றன. இதுபோன்ற குறிப்பு அளவுகோலின் அடிப்படையில் அமைக்கப்பட்டதே பெய்லியின் அலை மாதிரியாகும்.

அலைமாதிரி

மாறிகள்/ பேசுநர்		1	2	தன்மைகள்
1.	அ	+	+	இரு மாறிகளையும் பயன் படுத்துதல்
2.	ஆ	—	+	இரண்டாவதை மட்டும் பயன் படுத்துதல்
3.	இ	—	—	ஒன்றையும் பயன்படுத்த வில்லை

அலைமாதிரி மொழியியல் மாறிகளின் விருப்பேற்று (optiona, nature) தன்மையையும் விளக்குகிறது. இதனால் மொழியியல் மாற்றத்தை ஒரு தொடர்நிலையில் (continuum) வைத்து ஆராய முடிகிறது. மொழியின் இந்நிலையை பெய்லியின் மொழியியல்வேறுபாட்டு அளவுகோள் (Linguistic variation scale) விளக்குகிறது.

மொழியியல் வேறுபாட்டு அளவுகோள்

மாறி/பேசுநர்		1	2	3
1.	அ	+	+	+
2.	ஆ	+	+	+
3.	இ	—	+	+
4.	ஈ	—	—	+
5.	உ	—	—	—

இவ்வளவுகோலில் (±) என்னும் குறி மொழியியல் மாறியின் விருப்பேற்று நிலையை விளக்குகிறது. மொழிநடையை விளக்கும் பொழுது பேசுநரை மொழிநடையின் எண்ணிக்கைக்கேற்பப் (எடுத்துக்காட்டாக அ,$_1$ அ,$_2$ அ$_3$ ...) பிரிக்கவேண்டும். இம்மாதிரி யின் மூலம் மொழியியல் மாறிகளை ஏதேனும் ஒரு ஒழுங்கு வரிசை யின் (hierarchy) அடிப்படையில் பிரிக்க முடிகிறது. இதை விளக்கு வதற்குத் தமிழின் துணைவினை (Auxiliary verb)களில் ஒன்றான /–விடு–/ என்பதையடுத்து வரும் படர்க்கை அஃறிணை ஒருமை முடிவான /–அது/ என்னும் ஒட்டுடன் சேர்த்து/–விட்டது/ என்னும் உறுப்பையும், உயர்திணைப் படர்க்கைப் பன்மையின் முடிபான –ஆர்கள் என்னும் உறுப்பையும் எடுத்துக்கொள்வோம். பேச்சு வழக்கில் /–விட்டது/ என்னும் உறுப்பை /–டுத்து/ என்று பயன் படுத்துவது சில சமூகப் பிரிவினரிடையே அதுவும் குறிப்பாக பிராமணர் பேச்சு வழக்கிலே காணப்படுகிறது. இச் சமூகப் பிரிவினர் /வந்துவிட்டது/ என்பதை /வந்துடுத்து/ என்பர். மேலும் உயர்திணைப் பன்மையின் முடிவான /–ஆர்கள்/ என்னும் ஒட்டினை இவர்கள் /–ஆ/ என்றே வழங்குவர். /வந்து விட்டார் கள்/ என்பது /வந்துட்டர்/ எனமாறும். இம்மொழியியல் மாறிகளை சமுதாய அமைப்பை வைத்து நோக்கும்போது வேளாளர் பிரிவினர் இவற்றில் ஒன்றையும் படையாச்சி பிரிவினர் இரண்டை யும் பயன்படுத்தாதது தெரிய வருகிறது. சமுதாய ஒழுங்கு வரிசை (Social hierarchy) அடிப்படையில் பிரிக்கும்பொழுது / பிராமணர்– வேளாளர்–படையாச்சி / என்றே சமூகவியலார் பிரிப்பர். இவர் களின் ஒழுங்கு வரிசையை சார்லஸ் பெய்லியின் அலை மாதிரி கீழ்க்கண்டவாறு விளக்கும்.

ஒழுங்குவரிசை

மாறி / பேசுநர்	–த்து	–ஆ
1. பிராமணர்	+	+
2. வேளாளர்	+	–
3. படையாச்சி	–	–

மேலும் சார்லஸ் பெய்லின் இவ்வலை மாதிரியின் வாயிலாக, மொழி யின் சமகால (synchronic) அமைப்பையும். வரலாற்றுக் கால

(diachronic) அமைப்பையும் அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக, கோயம்புத்தூர் வட்டாரக் கிளை மொழியில் ளகரமும் ழகரமும் இணைந்து லகரமாக ஒலிக்கப்படுகிறது. இருப்பினும் இக்கிளை மொழியின் ஒரு நிலையில் ளகரமும் ழகரமும் பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும். காலப்போக்கில் அவை ஒன்றொடொன்று இணைந்து இன்று லகரமாக வழக்கிலிருக்கிறது. மொழியின் வரலாற்று அமைப்பை பெய்லியின் அலைமாதிரி கீழ்க்கண்டவாறு விளக்கும்.

கால அளவு கோல்

மாறி/காலம்	ழ	ள	ல	↑ வரலாற்றுக் காலம்
1.	+	+	+	
2.	—	+	+	
3.	—	—	+	

——————→
சமகாலம்

4. முடிவுரை

மொழியை அதன் அரூப நிலையில் ஆய்வதை விடுத்து அதன் உண்மையான மொழிப் பயனைவைத்து ஆராயும் பொழுது வெளிப் படுபவையே மொழியியல் வேறுபாடுகளாகும். சமுதாய மொழியிய லார் இம்மொழியியல் வேறுபாடுகளில் அதிகக் கவனம் செலுத்தி சில மொழியியற் கொள்கைகளை வெளிட்டுள்ளனர். இவ்வகையான மொழியியல் மாறிகள், இலக்கண விளக்கங்களில் எவ்வாறு கையாளப்படுதல் வேண்டும், எம்முறையில் விவரிக்கப்படுதல் வேண்டும் என்பதே அவைகளில் முக்கியமானவையாகும்.

துணை நூல்கள்

1 Bailey, B. L. 1966 *Jamaican Creole Syntax*, CUP, London.

2 Bailey, C. J. N. 1969 'The Integration of Linguistic theory: internal reconstruction and comparative method in descriptive linguistics' *Working Papers in Linguistics-2*. Hawaii University, Honolulu.

3 Bell, R. T. 1976 *Socioinguistics: Goals, Approaches and Problems*, Batsford Ltd., London.

4 Chomsky, N. 1957 *Syntactic Structures*, Mouton, The Hague.

5 ———1965 *Aspects of the theory of Syntax*, M. I. T. Press, Camb. Mass.

6 Guttman, L. 1944 'A Basis for scaling qualitative data', *American Sociolgical Review*, Vol. 9.

7 Hockett, C F. 1958 *A Course in Modern Linguistics*, Me Millan, New York.

8 Jones, D. 1962 *The Phoneme: Its nature and use*, Heffer, Cambridge.

9 Labov, W. 1966 *Social Stratification of English in New York City*, CAL, Washington, D.C.

10 Trager, G. L. and Smith, H. L. 1951 'An Outline of English Structure' *Studies in Linguistics: Occasional Papers*–3, Bettenburg Press.

11 Trudgill, P. 1974 *The Social Differentiation of English in Norwich*, CUP, London.

12 Weinreich, U. 1953 *Languages in Contact*, Mouton, The Hague.

தமிழகத்தில் வாழும் பழங்குடி மக்களும் அவர்களது மக்கட் தொகையும்

1.	ஆதியன்	... 116
2.	அரநாடன்	... 4
3.	இருளர்	... 89025
4.	காடர்	... 806
5.	கம்மாரா	... 194
6.	காணிக்காரன்	... 2413
7.	காட்டுநாயக்கன்	... 5042
8.	கொண்ட காபு	... 255
9.	கொண்ட ரெட்டி	... 855
10.	கொரகா	... 173
11.	கோத்தா	... 1188
12.	குறிச்சன்	... 1169
13.	குறும்பர்கள்	... 2754
14.	மகாமலாசர்	... 31
15.	மலபண்டாரம்	... 113
16.	மலவேடன்	... 85
17.	மலக்குறவன்	... 130
18.	மலையாளி	... 159426
19.	மன்னான்	... 49
20.	முதுவர்	... 886
21.	பலியன்	... 3108
22.	பணியர்	... 6093
23.	புலையன்	... 4308
24.	சோளகா	... 8310
25.	தோடா	... 930
26.	ஊராளி	... 46

மொழியியல் 2.3 (1978)

தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிலையாக்கம்

இரா. பாலகிருஷ்ணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1.0 ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளதைப் போல ஒரு மொழியின் வளர்ச்சியும் அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கையின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி அவர்கள் பேசும் மொழியில் பிரதிபலிக்கிறது என்பதை, அம்மொழியில் ஏற்பட்டுவரும் சொல் வளர்ச்சியைக் கொண்டு அறுதியிடலாம். வாழ்க்கையில் வளர்ச்சி –அதாவது முன்னேற்றம் ஏற்பட ஏற்பட மொழியிலும் புதிய புதிய சொல்லாக்கங்கள் ஏற்படுவதை ஒரு மொழியின் வரலாறு விளக்கி நிற்கும். இதனால், சொற்களின் பெருக்கத்திற்கு எல்லையின்றி போய்விடுவதோடு சொற்களஞ்சியங்கள் தொகுக்கும் வேலையும் முடிவின்றி ஆகிவிடுகிறது.

1.1 சொற்களஞ்சியங்களைத் தொகுப்பதில் பல்வேறு விதி முறைகள் உள்ளன. ஒரு மொழியில் உள்ள சொற்கள் அனைத்

தையும் அகர முதலிய எழுத்து வரிசையில் ஒருசேரத் தொகுத்து, அவற்றின் பொருள்களை அம்மொழியாலேனும் பிறமொழியாலேனும் விளக்கி நிற்பதே **சொற்களஞ்சியம்** அல்லது **அகராதி** எனப்படும். சொல்லின் பொருளோடு அதன் தோற்றம், ஆட்சி, அது வந்துள்ள நூல், இடம் முதலியவற்றை உள்ளடக்கித் தருவது நல்லதொரு சொற்களஞ்சியத்தின் இயல்பு. எனினும், விவரிக்க இயலாத சில அமைப்பு முறைகளும் உள்ளன. இவ்வாறு பல்வேறு அமைப்பு முறைகளை உள்ளடக்காது, வெறும் சொற்களின் தொகுதியாக மட்டும் அமைந்துவிட்டால், அது நல்லதொரு சொற்களஞ்சியமாக அமையாது.[1]

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆசிரிய மக்கள் சொற்களஞ்சியங்களைத் தொகுத்துள்ளதாக வரலாற்றால் அறியப் படினும், பொதுவாக எல்லா நாடுகளிலுமே இப்பணி ஓரளவுக்கு மெதுவாக நடந்து வந்துள்ளது. கிரேக்கர்களும் ரோமர்களும் கடினச் சொற்களுக்கும் (Difficult words) அரிய சொற்களுக்கும் (Rare words) முதன் முதலில் அருஞ்சொல் விளக்கங்களையே எழுதி வந்தனர். இதைப்போலவே இந்தியாவில் வடமொழிச் சொற்களுக்குப் பொருள் விளக்க நூல் இயற்றி, அதை நிகண்டு என அழைத்துவந்தனர். நிகண்டு என்றால் தொகுதி என்று பொருள். இதனடிப்படையிலேயே கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திவாகரர் **திவாகரம்** என்னும் சொற்றொகுதியை எழுதினார். அது 1835-ல் தாண்டவராய முதலியாரால் தொகுக்கப்பெற்று, வெளியிடப்பட்டது. இதில் அடங்கிய 12-தொகுதிகளில் அல்லது சொற் கூட்டங்களில் முதல் பத்தும் சொற்களின் தன்மைக்கேற்றவாறு பிரிக்கப்பட்டவை. கடவுள் சம்மந்தப்பட்ட பெயர், மக்கட்பெயர், உடலுறுப்புப் பெயர், பறவைப் பெயர், குணப்பெயர், வினைப் பெயர் எனப் பல தொகுதிகளாக அமைந்துள்ளன. இதையடுத்து 10-ம் நூற்றாண்டில் **பிங்கலந்தை** என்ற நிகண்டும், 16-ம் நூற்றாண்டில் **நிகண்டு சூடாமணி**, **அகராதி நிகண்டு**, **உரிச்சொல்**

1 '... the lexicon is without structure and consists simply of a list of items has been disconfirmed' — Adrienne LEHRER, "Structures of the Lexicon and Transfer of meaning", *Lingua*, 45.2:95.

நிகண்டு என்ற நூல்களும், 17-ம் நூற்றாண்டில் கயாதரம், பல் பொருள் சூடாமணி என்பனவும், 18-ம் நூற்றாண்டில் பொதிகை நிகண்டு, அரும் பொருள் விளக்க நிகண்டு, நாமதீப நிகண்டு ஆகியனவும், 19-ம் நூற்றாண்டில் வேதகிரியார் நிகண்டு, ஞானார்த்த தீபிகை விரிவு நிகண்டு என்பனவும் தோன்றின. இந் நிகண்டுகள் அனைத்தும் மனப்பாடம் செய்வதற்கென்று தோன்றிய தால் செய்யுட்களாலாகி, கடினச் சொற்களுக்கு மட்டுமே பொருள் கூறி நிற்கின்றன.

நிகண்டுகளின் தோற்றம் வடமொழியின் அடிப்படையில் ஏற் பட்டிருந்தாலும், தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே அதன் குறிப்பு காணப்படுகிறது. ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரியது என்றும், பல பொருளுக்கு உரியது என்றும் விளக்குகின்ற நூல்களை உரிச்சொற்பனுவல் எனத் தமிழில் வழங்கி வந்துள்ளனர். அதனால்தான், தொல்காப்பியர் சில சொற் களுக்குப் பொருள் விளக்கம் செய்துள்ள பகுதியை உயிரியல் என்று பெயரிட்டுள்ளார். ஆனால், இப்பெயர் காலப்போக்கில் மறைந்து,நிகண்டு எனும் வடசொல் நிலைத்துவிட்டது. ‘வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா’ (தொல். 783) எனத் தொல் காப்பியம் குறிப்பிடுவதால், அதனடிப்படையில் கடினச் சொற் களுக்கு மட்டும் பொருள் கூறியிருப்பதோடு, ‘வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே’ (தொல். 1592) என்ற தொல்காப்பியக் கருத்துப்படி ஆன்றோர் பயன்படுத்திய செஞ்சொற்களையும் நிகண்டுகள் உள்ளடக்கி நிற்கின்றன. இது தமிழில் உள்ள நிகண்டு களின் பொதுநோக்கமாக அமைந்துள்ளது. இந்நிகண்டுகளின் வழி வழியே வந்ததுதான் அகராதி. இப்பெயர் முதன் முதலில் 1594-ல் தோன்றிய அகராதி நிகண்டு என்ற நூலில் கையாளப்பட்டுள்ளது. அதன்பின்னர் 18-ம் நூற்றாண்டு முதல் இன்றுவரை அகராதிகள் பல தோன்றலாயின. அவற்றுள் முதன் முதலில் தோன்றியது சதுரகராதி என்ற நூலாகும். இதைத் தொகுத்தவர் வீரமாமுனிவர் (Father Beschi) என்ற அயல்நாட்டுப் பாதிரியாராவார். இதுவே சொற்களில் வரும் எழுத்துக்கள் அனைத்தையும் நோக்கி அமைக்கப் பட்ட முதற் சொற்களஞ்சியமாகும். இதற்கு முன் தோன்றிய நிகண்டுகள் சொற்களின் முதலெழுத்தைவைத்து மட்டுமே தொகுக் கப்பட்டுள்ளதால், குறிப்பிட்ட ஒரு சொல்லைக் குறிப்பிட்ட ஓரிடத்

தில் காணுவதற்கு எளிதாக அமைய வில்லை. ஆனால், பிறமொழி களில் செப்பமாக அமைந்துள்ள அகராதி முறையைப் பின்னர் வந்த தமிழ்ச் சொற்களஞ்சியங்களில் கையாளுவதற்குச் சதுரக ராதியே மூலகாரணமாக அமைந்தது.

தமிழ் மொழியிலுள்ள எல்லா சொற்களையும் உள்ளடக்க வேண்டும் என எண்ணி யாழ்ப்பாணத்துப் பண்டிதர் சந்திரசேகர் சுமார் 58,000 சொற்கள் அடங்கிய ஒரு அகராதியைத் தொகுத்தார். இதை லெவி ஸ்பால்டிங் என்னும் பாதிரியார் 1842-ல் அச்சிட்டு வெளியிட்டார். இது மானிப்பாய் அகராதி அல்லது யாழ்ப்பாண அகராதி என அழைக்கப்பட்டது. இவ்வகராதியும் சதுரகராதியின் அமைப்பைக் கொண்டதே. அதன் பின்னர் அகராதிச் சுருக்கம் (Tamil Pocket Dictionary) என்ற நூலை விஜயரங்க முதலியார் தொகுத்து, 1883-ல் வெளியிட்டார். பின்னர் யாழ்ப்பாணத்து நீதிபதி கதிற்வேற்பிள்ளை தொகுத்து வைத்திருந்த சொற்றொகுதியை மதுரைத் தமிழ்ச் சங்கம் 1910ல் தமிழ்சங்க அகராதி எனப் பெய ரிட்டு வெளியிட்டது. இவ்வாறு பல தமிழ்ச் சொற்களஞ்சியங்கள் வெளிவரலாயின. ஆனால், ஆங்கிலேயருக்கு வியாபாரத் துறை யிலும் அரசியல் துறையிலும் தமிழ் மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் தமிழ் – ஆங்கிலம் இரண்டும் தெரிந்தவர்கள் தேவையாயினர். எனவே, இரு மொழிகளையும் கற்பவர்களுக்குப் பயன்படும் வகையில், இருமொழி அகராதி (Bilingual Dictionary) வேண்டியதாயிற்று. இதனால், இரண்டு ஜெர்மன் பாதிரிமார்கள் 1779ல் தமிழும் இங்குலேசுமா இருக்கிற அகராதி (Fabricus's Tamil – English Dictionary) என்ற தமிழ்-ஆங்கில அகராதியைத் தொகுத்தனர். இது ஒரு சிறிய நூல். சுமார் 9000 சொற்களை மட்டுமே கொண்டது; ஆனால், பின்னர் வந்த பல இரு மொழி அகராதிகளுக்கு இது அடிப்படையாக அமைந்தது. தமிழ்–ஆங்கில அகராதிகளில் 1842-ல் வின்ஸ்லோ தொகுத்த அகராதி சுமார் 67,000 சொற்களைக் கொண்டது. இவ்வகராதி கிடைப்பதற்கு அரிதானதாக இருந்ததால் தரங்கம்பாடி அகராதி (Tranquebar Dictionary) என ஒன்று 1897ல் தோன்றியது. இவ்வாறு மேலும் பல இருமொழி அகராதிகள் தோன்றி விருத்தி யடைந்த வண்ணம் இருந்தன. இவைகள் விருத்தியடைவதற்குப்

பல காரணங்கள் அமைந்தன. அதாவது: சங்க இலக்கிய நூற்கள் அனைத்தும் 20ம் நூற்றாண்டில்தான் கிடைக்கப் பெற்றன; சொற் பொருள்களை அமைப்பதில் சில நெறிமுறைகளைக் கையாளுவதும் அவசியமாயிற்று. பொருள்களை வரலாற்று முறையிலும், இயலாத இடங்களில் கருத்து வளர்ந்து சென்ற முறையிலும் அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும், சொல்லுக்குப் பொரு ளாகப் பரியாயச் சொல்லை மட்டும் கொடுத்தால் போதாது—அதற்குரிய பொருளின் இலக்கணத்தை வரையறை செய்ய வேண்டியதும், சொல்லின் பிறப்பைக் குறிக்கவேண்டியதும், அச் சொல் வரும் இடங்களை மேற்கோள் காட்ட வேண்டியதும் தேவைகளாயின. இதனால், ஒரு சொற்களஞ்சியம் மேலும் சிறப்படைய வாய்ப்பு ஏற்பட்டது. இம்முறைகளையெல்லாம் மனதில் கொண்டு, சென்னைப் பல்கலைக்கழகம் 1936ல் தமிழ் லெக்ஸிகான் (Tamil Lexicon) என்ற பெரு நூலை ஆறு தொகுதி களாக வெளியிட்டது. இந்நூல் தமிழ் மொழியிலுள்ள அனைத்துச் சொற்களும் விளக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் மிகவும் முயன்று வெளியிடப்பட்டுள்ளது. இது சுமார் 1,25,000 சொற் களைக் கொண்டுள்ளது.

2.0 சொற்களின் வளர்ச்சியே ஒரு மொழியின் வளர்ச்சியை உணர்த்தும் என முன்னர் குறிப்பிட்டோம். இங்குச் சொற்களின் வளர்ச்சி பொருள் அடிப்படையில் தோன்றும் சொற்களையே குறித்து நிற்கிறது; ஒரு பொருளுக்குப் பல சொற்கள் தோன்றி வளர்வதைக் குறிப்பதாகாது. அதனால்தான் ஒரு காலத்தில் தோன்றிய சொற்கள் எல்லாக்காலத்திலும் வழங்கிவருவதில்லை. காலத்திற்கேற்றவாறு—நாளும் தோன்றிவரும் சமுதாய—அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றவாறு புதுப்புதுச் சொற்கள் தோன்றிய வண் ணம் இருக்கின்றன. அவைகளனைத்தையும் சொற்களஞ்சிய மாகத் தொகுப்பது அவ்வளவு எளிதல்ல. காரணம், முன்னர் தோன்றிய சொற்களஞ்சியங்கள் இலக்கியங்களில் கையாளப்பட் டுள்ள சொற்களின் அடிப்படையிலும், எழுத்துப் பிரதிகளில் உள்ள சொற்களின் அடிப்படையிலுமே அமைக்கப்பட்டுள்ளன; ஆனால், எந்தவொரு எழுத்து ஆதாரத்திலும் இடம் பெறாத ஆயிரம் ஆயிரம் சொற்கள் இன்று வழக்கத்தில் இருந்து வருவதையெல்லாம்

தொகுப்பது எளிதாக இல்லாவிடினும், அவ்வாறு செய்தால் ஒரு மொழியின் சொற்பொருள் வளர்ச்சிக்குச் சான்றாக அமையும். ஆனால், இன இட அடிப்படையில் வழங்கும் பல சொற்களை முடிந்த அளவு சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்ஸிகான் உள்ளடக்கியிருந்த போதிலும், அவையனைத்தையும் இன்றைய தமிழ் உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மொழியில் நிலையாக்கம் பெறாத, சிலரது பேச்சில் மட்டுமே வழங்கி வரும் — சொற்கள் புதுச் சொற்கள் சொற்களஞ்சியமாகத் தொகுக்கப்பெற்றாலும், அது எப்படி நிலையாக்கம் பெற்றதாக மாறும்? இது இன்று நம்முன் எழும் ஒரு கேள்விக் குறியாகும்.

2.1 தமிழில் இன்று நிலைமொழி (Standard Language) எது? அப்படி அழைக்கப்படுவதற்குரிய காரணங்கள் எவை? என்ற கேள்விகளுக்கு விடையளிப்பது எளிதானதல்ல. இன்று தண்டமிழ், தீந்தமிழ், செந்தமிழ் என்றெல்லாம் போற்றப்படுகின்ற தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பல்வேறு கிளை மொழிகளாக இருந்து, இன்றுள்ள நிலையில் வளர்ந்துள்ளது என்றால் அது தவறன்று. அதனால்தான், தமிழின் நிலை மொழியை வரையறுப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இன்று இலக்கிய மொழியை அடிப்படையாகக்கொண்டு, பழைய இலக்கண வரம்பிற்கு உட்பட்டு எழுதப்படுவதை நிலைமொழியாகக் கொள்ள வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர் (Zvelebil, 1963:109; Sethupillai, 1939). ஆனால், டாக்டர் வரதராசனார் (1954:175) நிலைமொழி வேறு இலக்கியமொழி வேறு எனக் கருதுகின்றார். இலக்கியமொழி கற்றுத் தேர்ந்த சிலருக்கும், நிலைமொழி மக்கள் அனைவருக்கும் விளங்கும் தன்மையது என விளக்குகிறார்.

இலக்கிய மொழியாகப் போற்றுவதுகூட ஒருகாலத்தில் கிளை மொழியினடிப்படையில் தோன்றியதாகும். இக்காலத்தில் கற்க எண்ணுவோருக்கு எல்லா இலக்கியங்களும் ஒருசேரக் கிடைப்பதால் அது நிலைமொழித் தன்மையைப் பெற்றுவிடுகிறது. ஆனால், அவை ஒரே காலத்தில், ஒரே இடத்தில் தோற்றுவிக்கப்படவில்லை. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த புலவப் பெருமக்கள் தத்தம் அறிவு நுட்பத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப

கவிதை இயற்றி வந்தனர். அவைகள் அவர்கள் வாழ்ந்த இடத்தின் மொழியையும், காலத்தின் மொழியையும் பிரதிபலிப்பனவாகவே அமைந்திருக்க வேண்டும்; அதனால்தான், ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் சொற்களஞ்சியத்தில் இன்று இடம்பெற்றுள்ளன. மேலும், தொல்காப்பியனாரே செந்தமிழ் நிலத்தில் வழங்கும் சொற்களையே இயற்சொல் (தொல். 398) என்றும், அதைச் சார்ந்த பன்னிரண்டு நிலத்திலும் வழங்குவதைத் திசைச்சொல் (தொல். 400) (Dialectal form) என்றும் கூறுவதிலிருந்து, இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழியில் கிளைமொழிப் பாகுபாடு இருந்ததும், அவையனைத்தும் கிளைமொழிச் சொற்களாகக் கருதப்பட்டதும் விளங்கும். ஆனால், அச்சொற்கள் இன்று இலக்கியத் தமிழாக மாறி நிலைமொழி எனக் கருதப்படுவதையும் உணரலாம். இந்நிலையில் இன்றைய தமிழ் மொழியின் நிலைமொழி பற்றி முடிவு செய்வது அரியதொரு, இன்றியமையாததொரு செயலாகும்.

இலக்கியத் தமிழை (Literary Tamil) நிலைமொழியாகக் கொண்டு இன்றைய தமிழை இட அடிப்படையில் பல்வகைக் கிளைமொழிகளாகப் பகுத்துள்ளனர் (Zvelebil, 1963: 109–118). எனினும், இலக்கியத் தமிழை மட்டும் நிலைமொழியாகக் கொள்ள முடியாதென டாக்டர் வரதராசனார் தெள்ளிதின் விளக்கியுள்ளார் (1954 : 175). அவ்வாறெனின் தமிழுக்கு நிலைமொழி எது? காணப்படுகின்ற கிளைமொழிகளுள் எந்தவொரு கிளைமொழி, சொற்செறிவு உடையதாகி, மொழிப்பயனில் தன்னிறைவும் (Adequacy in Language use), பேசுவார் தாம் எண்ணுகின்ற எக்கருத்தையும் வெளிப்படுத்தும் ஆற்றலும் (Efficiency), கேட்போர் அனைவரும் புரிந்துகொள்ளும் அறிதிறனும் பொதுமையும் (Intelligibility and commonalty), அனைவரும் தத்தம் மொழிப்பயனில் கையாளும் எளிமையும் (Easy adaptation) உடையதாக அமைகிறதோ, அதுவே நிலைமொழியாகும் தகுதியைப் பெறும்.[1] இத்தகைய மொழியை நிலையாக்கம்

1 Standardization as spoken of in relation to linguistic phenomena, is to be understood in terms of three necessary and basic factors namely (i) efficiency, (ii) rationality, (iii) commonalty. Also any problem

செய்தால் அது அனைவருக்கும் நிலைமொழியாக, மொழிப்பயனுக்கேற்ற பொது மொழியாக எளிதில் மாறும் வாய்ப்பு ஏற்படும். இதனால், ஒரு மொழி ஒழுங்குபடுவதோடு, பயன்படுத்துவோர் தங்கள் கருத்துக்களைப் பரிமாற்றம் (பேச்சு – எழுத்து மூலம்) செய்யும்போது அனைவராலும் ஏற்றுக்கொள்ளவும் படுகிறது.[1]

2.2 தமிழ் மொழிக்கு ஒரு நிலை மொழியை ஏற்படுத்த வேண்டும். என்பதில் எவருக்குமே மறுப்பு இல்லை. ஏனெனில், நிலைமொழி என ஒன்று ஏற்படுத்தி, அதைச் சமூகக் கலாச்சாரத்தோடு தொடர்புபடுத்தாவிடில் கிளைமொழிகளுக்கிடையேயுள்ள தொடர்பு (Language contact) குன்றி அவை காலப்போக்கில் வெவ்வேறு மொழிகளாகக் கருதப்பட்டுவிடும். ஒரு காலத்தில் தமிழ் மொழி மட்டுமே பேசப்பட்ட சேரநாட்டில் மலையாளம் எனும் மொழி வளர, தொடர்பில்லாத நிலையே அடிப்படைக் காரணமாகும். எனவே, நிலைமொழியாக்கம் ஒரு மொழியைச் சிதறவிடாமல் காப்பதோடு, அம்மொழியின் வளர்ச்சிக்கும் — அதாவது கருத்துப் பரிமாற்றம் செய்யும் திறனில் (Communicative efficiency) தன்னிறைவும், ஒரேவிதமாக மொழி பயன்படுத்தப்படுவதால் கிளைமொழிகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டுக் குறைவும், மொழிப்பயனில் பொதுமையும் (Commonalty) சீர்மையும் (Uniformity) ஏற்படுத்துகிறது.

விஞ்ஞான வளர்ச்சி, பலநோக்குக் கல்வி வளர்ச்சி, பன்னாட்டுத் தொடர்பு, மொழித் தொடர்பு (கருத்துப் பரிமாற்றம், சமுதாய உறவு போன்றவற்றால் ஏற்படுவது) போன்றவைகளால் மொழியின் பயன்படுதேவை வளர்ந்த வண்ணம் உள்ளது.

of choice with regard to standardization has to be stated in terms of language maintenance and language acquisition' — Ray, P. S. *Language Standardization*, Mouton, The Hague, 1966.

1 'A standard language is a codified form of language accepted by and serving as a model to, a larger speech community' – Garvin, P. L. "Some Comments on Language Planning' in *Language Planning: Current Issues and Research*, (ed.) J. Rubin & R. Shuy, 1973.

அதனால், அரசினரும்[1] ஆய்வாளர்களும் புதிய சொல்லாக்கம் (Coining of new words, கடனாளுதல் (Borrowing), மொழி பெயர்த்தல் (Translation), தழுவுமுறை (Adaptation) போன்ற வற்றால் புதுப்புதுச் சொற்களை உண்டுபண்ணி, தமிழ்மொழியின் சொற்களஞ்சியத்தை நிரப்பி வருகின்றனர் (Sakthivel, 1972, Aruna Bharathi, 1976). இவைகளுக்கெல்லாம் கலைச் சொல் லகராதி (Glossary) எனத் தனிப் பெயரிட்டுள்ளனர். ஆனால், இவ்வாறு ஆக்கப்படும் சொற்களனைத்தும் நிலையாக்கம் பெற்றவைகளா? என்பதில் அக்கறை எடுத்துக் கொண்ட தாகத் தெரியவில்லை. பழைய அகராதிகளையும் இலக்கியங் களையும் வைத்துக்கொண்டு, புதுச் சொற்களை உருவாக்கு வதால் ஒரு மொழியில் சொற்களின் எண்ணிக்கை அதிகரிக்குமே தவிர கருத்துப் பரிமாற்றத்தின் ஆற்றல் பெருகாது—அதனால், மொழி வளர்ச்சியடைவதாகாது[2]. எனவே, இது சொற்களஞ்சி யத்தின் சீரான வளர்ச்சி என்று சொல்ல முடியாது. அதனால்தான், பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்றெல்லாம் விளம்பரம் எழுதப்பட்டி ருந்தும், பஸ் ஸ்டாண்டு, கலெக்டர் ஆபீஸ் என்பனவே பெருவழக்காக இருந்து வருகின்றன. எனவே, நிலை மொழியை உருவாக்க நிலையாக்கம் பெற்ற சொற்களஞ்சியம் எவ்வளவு இன்றியமையாதது என்பது புலப்படும். அதனால்தான் ஆற்றல்-அதாவது கருத்தை விளக்கும் ஆற்றல், எளிமை-பயன் படுத்து வோருக்கு எளிமை, புதுமை—மொழியமைப்புக்குப் புதுமை இவை களின் அடிப்படையில் சொற்களைத் தரம் பிரித்துப் பயன்படுத்த வேண்டும். இதற்காகத் தமிழ்ச் சமுதாயத்தைப் பல்வேறு துறை களாகப் பிரித்து நோக்கி, மொழிப் பயனின் தன்மையை வெளிக் கொணர வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தை அரசியல்துறை,

1 தமிழ் வளர்ச்சி இயக்கம் இதுவரை 35-க்கும் மேற்பட்ட ஆட்சித்துறை சம்பந்தப்பட்ட கலைச் சொல்லகராதிகளை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

2 'One of the striking features of internal creations in Tamil is the use of classical elements. But the motive does not seem to be that of classicalising the modern language' -Shanmugam, S. V. "Modernisation in Tamil", *Annals of Oriental Research-Silver Jubilce Volume*, p. 360, (1975).

கல்வித்துறை, சமயத்துறை, வணிகத்துறை, தொழில்துறை, விவசாயத்துறை, சமூகத் தொழில்துறை, எனப் பல துறைகளாகப் பகுக்கலாம். இவற்றுள் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு பிரிவினர் செல்வாக்குப் பெற்றிருந்ததை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. இன்றும் அதன் பிரதிபலிப்பு இருக்கத்தான் செய்கிறது. எனவே, எத்துறையில் எவரெவர் செல்வாக்கு இருக்கிறதோ அங்கு அவரவர் மொழியின் செல்வாக்கும் இருக்கத்தான் செய்யும். இந்நிலையில் நாகரிகம் வளர்ந்து, மக்கள் நெருங்கிப் பழகும் நிலை (Intra-relationship) ஏற்பட்டு, அதற்கேற்ற வகையில் போக்குவரத்து வசதிகளும், பத்திரிகை, வானொலி சினிமா, கட்டாயக் கல்விமுறை ஆகியவைகளும் மிகுந்துள்ள இக்காலத்தில் எத்துறையினர் மொழியாதிக்கம் செலுத்தினாலும், அனைவருக்கும் சமவாய்ப்பு ஏற்பட்டு வருவதை யாவரும் உணரலாம். எனவே, மேலே சொன்ன ஆற்றல், எளிமை, புதுமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சொற்கள் எத்துறையினரால் பயன்படுத்தப் பட்டாலும் அவை நிலையாக்கம்பெறும்.[1] இவைகளே சொற்களஞ்சியம் நிலையாக்கம் பெற ஊன்றுகோலாய் அமைந்து, மொழியின் சொல்வளர்ச்சியையும் பொருள் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும்.[2]

2.3 தமிழ் லெக்ஸிகான் வெளிவந்த பின்னர் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி என லிப்கோவும், கழகத் தமிழ் அகராதி எனச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரும் இரு அகராதிகளைப் பதிப்பித்தனர். அவைகள் தமிழ் லெக்ஸிகானில் இல்லாத சொற்களைத் தொகுக்கவில்லை; இருப்பவைகளை மட்டுமே சுருக்கமாகத்

1 'Standardization is the process of Language Planning by which one variety of a language becoming widely accepted and adopted throughout the speech community concerned as the 'Norm' of language which is rated above all regional and social dialects although these may be felt appropriate in some domains and contexts of language use' Karunakaran, K. "Language Standardization in Dravidian" *Dravidian Linguistics-V* p. 171, 1976.

2 "Rubin suggests vocabulary enlargement, creation of registers and styles also part of vocabulary standardization' Rubin, J. "Language Standardization" (mimeo), Stanford University, 1973.

தொகுப்பனவாக அமைந்தன. இதற்கிடையில் கலை, விஞ்ஞானம், அரசியல் போன்ற துறைகளில் மொழித் தேவையைப் பூர்த்தி செய்ய பல கலைச் சொல் அகராதிகள் (Glossary) வெளியிடப் பட்டன. இவை ஆக்கியோரின் கல்வி அறிவிற்கு ஏற்ப மொழி பெயர்க்கப்பட்ட தூய தமிழ்ச் சொற்களால் அமைந்திருந்தாலும் சில சொற்கள் மொழிபெயர்க்கப்படாமலும் உள்ளன.

உதாரணம் :

உஃல்பின் குழல்	Wolffian duct
பாக்டிரியா	Bacteria
பெஸிடியம்	Basidium
கோடன்	Codon

பொதுவாகக் கலைச்சொல் அகராதிச் சொற்களைத் தமிழாக்கம் (Tamilization) செய்யப்பட்ட சொற்கள் எனலாம். இவை தமிழ் லெக்ஸிகானில் இடம்பெறவில்லை.

2.3.1 தமிழ் லெக்ஸிகானில் இடம்பெறாத தமிழாக்கம் செய்யப்பட்ட சொற்களை இருவகையாகப் பிரிக்கலாம். 1) நிலை யாக்கம் பெற்றவை 2) நிலையாக்கம் பெறாதவை.

2.3.1.1

வேட்பாளர்	முதல்வர்
தேர்தல்	கதாசிரியர்
சட்டமன்றம்	கதாநாயகி
நாடாளுமன்றம்	சுயேட்சை

போன்ற பல சொற்கள் இன்று நிலையாக்கம் பெற்றுள்ளன. இச் சொற்கள் மக்களிடையே பரவல் செய்தித் தொடர்பு, ஆட்சித்துறை போன்றவற்றில் பயின்று வழங்கிவராமையாலும், சில கால கட்டங் களில் மட்டுமே தேவைப்படுவதாலும், எளிமையும் புதுமையும் உடையதாக இருப்பதாலும், இவைகளுக்குரிய மாற்றுச்சொல் பேச்சு வழக்கில் இல்லாமையாலும் இவைகளையே அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க (Social Acceptance) சூழ்நிலை ஏற்பட்டு

விடுகிறது. எனவே, எத்தகைய முயற்சியுமின்றி இவைகள் நிலையாக்கம் பெற்றுவிடுகின்றன. ஆனால்,

பேருந்து	Bus	வரைவோலை	Draft
காசோலை	Cheque	பணவிடை	Money Order
ஓட்டுநர்	Driver	நடத்துநர்	Conductor
மீனியல்	Ichthyology	கூட்டினம்	Cenospecies
ஒடுங்கி	Convergent	வரையம்	Chart

போன்ற சொற்கள் நிலையாக்கம் பெறாமல் – அதாவது பொது மொழியாக ஏற்றுக்கொள்ளப்படாமல் சில துறையினரின் எழுத்து மொழியாக மட்டுமே பயன்பட்டு வருகிறது. ஏனெனில், இச்சொற்களுக்குப் பதிலாக பயின்று வழங்கும் பிற சொற்கள்—பெரும்பாலும் பிறமொழிச் சொற்கள் அவற்றின் இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், இப்படித் தமிழாக்கம் செய்யப்பட்ட சொற்கள் நிலையாக்கம் பெற அவற்றை மொழிப்பயனில் கொண்டுவர வேண்டும். அதற்காக அவற்றை எளிதாக எடுத்தாளும் விதத்திலும், பரவலாக அனைவரும் ஒத்துக்கொள்ளும் விதத்திலும் அமைய சில விளம்பர வழிமுறைகளைக் கையாள வேண்டும்[1]. அப்பொழுதுதான் பெரும்பாலான கலைச் சொற்கள் மொழிப்பயனில் நிலைத்து நின்று, நிலையாக்கம் பெறும். அல்லது இச்சொற்களுக்குப் பதிலாக வழங்கும் பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்படும் திசைச் சொற்களை (Dialectal forms) நிலையாக்கம் செய்யலாம்.

2.3.2 இனி, எல்லோராலும் பயன்படுத்தும் பல சொற்கள் தமிழாக்கம் செய்யப்படாமலும் சொற்களஞ்சியத்தில் இடம் பெறாமலும் உள்ளன. அவற்றுள்,

---

1 'The procedure of 'elaboration' deals with making a language variety capable of meeting the needs of a nation and society in a time of vast technological scientific and other modern advancements etc. This is what is known as 'elaboration and propogation of function' –Haugen, E. *The Ecology of Language*, SUP, Stanford 1966.

கதிகலக்கம்	கலவரம்
கற்பனை	சீக்கிரம்
கல்சுண்ணாம்பு	கதர்
கறக்கு	பரபரப்பு
காரசாரம்	குடிமக்கள்

போன்ற சொற்களை உதாரணமாகக் கூறலாம்.

2.3 3 இன்னும் பல சொற்கள் சொற்களஞ்சியத்திலும் சேர்க்கப்படாமல், நிலையாக்கமும் ஆகாமல், தமிழ் மொழியைத் தன்னிறைவாக்கும் விதத்தில் திசைச் சொற்களாகவே உள்ளன. அவற்றையெல்லாம் இன்று கிளைமொழிக் கூறுகள் என எண்ணி வருகிறோம். கிளைமொழியாகவே இருந்தாலும் அவை பொதுவான பல தமிழ்ச் சொற்களால் விளக்கப்படும் ஒரு பொருளுக்கு அல்லது ஒரு சாதனத்திற்குக் குறிப்பிட்ட ஒரு சொல்லாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, வீட்டின் ஒவ்வொரு பாகத்தையும் பொதுவான பல தமிழ்ச் சொற்களால் விளக்கலாம்; விவசாயக் கருவிகளை விளக்கவும் அவ்வாறே செய்யலாம்; இவ்வாறு பொதுவாக விளக்குவதற்குப் பதிலாக ஒரே குறிப்பிட்ட சொல்லால் விளக்கமுடியும். இப்படிப்பட்ட சொற்கள் பேச்சு வழக்கில் ஏராளமாக உள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்து நிலையாக்கம் செய்தால், தமிழ் மொழியின் பொருள்வளம் மிகச் சிறப்பதோடு மொழிப்பயனில் அதன் ஆற்றல்கூடும் என்பதில் அய்யமில்லை; எடுத்துக்காட்டாகச் சில சொற்களைக்கீழே தருவதன் மூலம் அது விளங்கும்.

2.3.3.1 வீடு சம்மந்தப்பட்ட சொற்கள்

ஆரவளை	roof-beam
இருப்பு	seat for slanting beam
நேர்கை	straight beam in the roof
மூலக்கை	corner beam in the roof
மோட்டுவளை	top beam in the roof

2.3.3.2 தொழில் சம்பந்தப்பட்ட சொற்கள்

குறிமொந்தை	a marker
கொட்டாபுளி	a wooden hammer

சீவுளி	a chisle for polishing the wood
வெட்டுவான்	wood cutter (like an axe)

இவைகளெல்லாம் ஒரு பேச்சு வழக்கில் வழங்குவதாகக் கொண்டால், மற்ற பேச்சு வழக்கில் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதையெல்லாம் தொகுத்து, பெரும்பான்மையினர் வழக்கை நிலையாக்கம் செய்தல் மொழிநூல் வல்லாரின் கடமையாகும்.

2.3.4 இன்னும் ஒரு வினோதத்தை நோக்குவோமானால் தமிழ் அறிஞர்களுக்கு அது வியப்பையே கொடுக்கும். சொற்களஞ்சியத்தில் காணப்படும் ஆயிரக்கணக்கான சொற்கள் நிலையாக்கம் பெறாமல் மொழிப்பயனின்றி அதாவது அனைவர் அறிவுக்கும் எட்டாமல் ஒதுக்கப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக,

கங்காணி	supervisor
கச்சான்	west wind
கசேரி	easy chair
கப்பு	branch of a tree
கமிசு	shirt
குளப்புரவு	the whole extent of land irrigated under tank
குறுணி	a (grain) measure
கூட்டு	roof beam
கூடம்	drawing hall
பங்களா	hall

போன்ற சொற்களைக் கூறலாம்.

REFERENCES

1. தொல்காப்பியம், 1966 இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை,

2. வரதராசன், மு. 1954. மொழிவரலாறு, சென்னை.

3. Arunabharathi, N. 1976. *Glossary of Linguistics*, Tamil Noolagam, Madras.

4. Garvin, P.L. 1973. "Some Comments on Language Planning" in *Language Planning*.

5. Haugen,E. 1966. *The Ecology of Language*, SUP,Stanford

6. Karunakaran, K. 1976. "Language Standardization in Dravidian", *Dravidian Linguistics*-V, Annamalai University

7. Leherer, A. 1978. "Structures of lexicon and Transfer of Meaning", *Lingua*, 45-2

8. Ray, P.S. 1966. *Language Standardization*, Mouton, The Hague.

9. Rubin, J. 1973. "*Language Standardization*" (mimeo), Stanford University.

10. Sakthivel, S. 1972. *Glossary of Technical terms of Anthropology*, Madras.

11. Sethupillai,R.P. 1939. "Tamil Literary and Colloquial", *Annals of Oriental Research*, Vol. 3, Madras.

12. Shanmugam, S.V. 1975. "Modernization in Tamil" *Annals of Oriental Research*, (Silver Jubilee volume), Madras.

13. *Tamil Lexicon*, 1936. Published under the authority of the University of Madras.

14. Zvelebil, Kamil, 1936. "On Finite verb terminations in Colloquial Tamil", *Archiv Orientalin*, 31.

பிரமலைக்கள்ளரின் பேச்சு வழக்கில் நேரப்பாகுபாடுகள்

வழங்கும்சொல்	இணையான நேரம்
தலைக்கோழி	இரவு மணி 12
சாமக்கோழி	இரவு 12 மணிக்குப் பிறகு
ரெட்டி வெள்ளி அல்லது நெட்டி வெள்ளி	இரவு 1 மணி
தார்க்கம்பு வெள்ளி	இரவு 2 மணி
நடுக்கோழி	இரவு 3 மணிமுதல் 4 மணிவரை
நட்சத்திர வெள்ளி	அதிகாலை 4 மணி
கடைசிக்கோழி	அதிகாலை 4 மணிமுதல் 5 மணிவரை
விடிவெள்ளி	அதிகாலை 5 மணிக்குப் பின்பு
செங்கமங்கல	விடிவதற்கு முன்பு
பொழுதுபரிய	சூரியன் உதிக்கும் நேரம்
கஞ்சிப்பொழுது	காலை 7 மணிமுதல் 8 மணிவரை
ஒருபாப்பொழுது	காலை 8 மணிமுதல் 9 மணிவரை
எள மதியானம்	காலை 11 மணி
உச்சிபொழுது	நண்பகல் 12 மணி
அடிதிரும்ப அல்லது அடிசாய	மாலை 1 மணிக்குப் பின்பு
பெரிய வீட்டுக்கு ஒலே வக்ரநேரம்	மாலை 3 மணி
மல வாயெ கட்டே	பொழுது சாய்வதற்குமுன்
பொழுது விழுந்திருச்சு	சூரியன் மறைந்த பின்பு
அந்திமாலெ	இருட்டு நேரம்
ஊரடங்கிற நேரம்	இரவு 8 மணிமுதல் 9 மணி வரை
அரவ ஒடுங்கிற நேரம்	இரவு 11 மணி
எலெ துலங்காத நேரம்	இரவு 11 மணிமுதல் 12 மணிவரை

ஆதாரம்: பீ மு. அஜ்மல்கான் எழுதிய பிரமலைக் கள்ளர் சமுதாய மொழியியல்.

மொழியியல் 2.3 (1978)

கிளைமொழிகள் வேறுபடும் முறைகள்

கோ. சீனிவாசவர்மா
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. பேசுகின்ற ஒவ்வொருவரின் தனித்தன்மைக்கேற்பவும், இடத்திற்கு ஏற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் மாறுபடக்கூடியது. தமிழ்மொழி கன்னித் தமிழ். இளமை குன்றாத தமிழ், திராவிட மொழிகட்குத் தாய்மொழி, நிலையான மொழி, இலக்கண இலக்கியங்களால் கட்டுண்டு, மாறாத மொழி என்ற கருத்து நம்மில் பலரிடையே பரவலாக இருக்கக் காண்கிறோம். ஆனால் மொழியைப்பற்றி அது வழங்கும் முறையைப்பற்றி ஓரளவு சிந்திக்கத் துவங்கினால் இந்த கருத்துக் கள் எவ்வளவு தூரம் பொய்மையில் சிக்கியுள்ளன என்பது தெரியும். சங்க காலத்தில் வழங்கிய தமிழ் இன்று வழங்கவில்லை. சென்ற நூற்றாண்டில் வழங்கிய தமிழ் இன்று இல்லை. ஏன்? கோவையில் வழங்கும் தமிழ் குமரியில் இல்லையல்லவா? ஒன்றுக் கொன்று வேறுபடவும் செய்கிறது. அதே நேரத்தில் அவைகட்குள் ஒரு பொதுமையும் உள்ளது. சங்க காலத்திலிருந்து வழங்கிவரும் தமிழின் பலகூறுகள் தொடர்ந்து இன்றும் வழங்கி வருகின்றன.

ஒரு தொடர் நிகழ்ச்சியால் ஒலி, சொல், இலக்கணம் ஆகியவற்றில் பெரும்பாலான தொடர்பைப் பெற்று சிறுபான்மை வேற்றுமை களுடன் இருந்துவருவதே தமிழ் மொழின் சிறப்பாகும். பிறமொழி களில் இத்தன்மைகள் மாறாக பொதுமை சிறுபான்மையாகவும் வேறுபாடு பெரும்பான்மையாகவும் அமைந்துள்ளது. அதனால் தான் ஆங்கில மொழியில் பழைய ஆங்கிலம், இடைக்கால ஆங்கிலம், தற்பொழுது வழங்கும் புதிய ஆங்கிலம் என தனித் தனி நிலைகளைப் பெற்று ஒன்றுக்கொன்று புரிந்துகொள்ளும் தன்மை யும், அளவும் குறைந்து காணப்படுகின்றன.

மொழி வழங்கும் சூழ்நிலைக்கேற்ப அதன் வடிவம் மாறுகிறது. பாடசாலைகளில், அரசு அலுவலகங்களில், கேளிக்கைக் குழுக் களில், பொழுதுபோக்கு இடங்களில், வியாபார இடங்களில், வீட்டில் என பல இடங்களில் தனித்தனி வகையான மொழி வடிவங்கள் பயன்படுவதை அறிவோம். இருவர் ஒரு மொழியை ஒரே முறையில் பேச இயலாது பேசுவதும் இல்லை ஒருவர் தன் குடும்பத்தினருடன் ஒரு முறையிலும், வெளியில் அலுவலகத்தில் வேறொரு முறையிலும் பேசுவது இயல்பு. அவர் பயன்படுத்தும் சொற்கள், இலக்கண அமைப்பு, உச்சரிப்பு முறை ஆகியவற்றில் ஒன்றோ, பலவோ அல்லது அனைத்துமோ மாறுபடலாம். மொழி மாறிக்கொண்டே இருக்கிறது

ஒரு மொழி பலரால், பரந்த ஒரு நாட்டில் நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தால், அம்மொழி பலவட்டாரக் கிளைமொழிகளைப் பெற்றிருப்பது இயல்பு. பொர்துவாக சிலர் தாம் மட்டுமே தூய மொழியைப் பேசுகின்றோம், பிறர் கொச்சையான ஒரு கிளை மொழியைப் பேசுகின்றார்கள் என்று எண்ணுவர். ஒவ்வொருவரும் இவ்வாறு தாம் மட்டுமே, மொழியை ஒழுங்காகப் பேசுவதாக எண்ணுவது இயல்பு, ஆயினும் உண்மை அதுவல்ல, ஒவ்வொரு வரும் ஏதேனும் ஒரு கிளைமொழியை மட்டுமே பேசுகின்றோம் என்பதே மொழியியல் உண்மை ஒருவர் வேறொருவரின் பேச்சைக் கற்று, அதனை திரும்ப தன் பேச்சில் பயன்படுத்த முயன்றால், தம் கிளைமொழியை மறக்க அல்லது மறைக்க முற்படுகிறார் எனலாம். ஒன்றை இழக்காமல் அடுத்த கிளைமொழியை ஒருவர்

முற்றும் கற்று பேச முடியாது. ஆதலால் கிளைமொழிகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை மொழியியற் கண்ணோட்டத்தில் இங்கு விரிவாகக் காண்போம். வேறுபாடுகள் மொழியின் சொல், இலக்கணம், உச்சரிப்பு என மூன்று நிலைகளிலும் வேறுபடும்.

சொல்: சொற்கள் மொழியில் வேறுபடும். தமிழ் நாட்டிலும், தமிழ் மொழி வழங்கும் ஸ்ரீலங்கா, பர்மா, மலேஷியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் ஒரு பொருளைக் குறிக்க வெவ்வேறு சொற்கள் வழங்குவதை அறிவோம். கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் இடைவெளியிட்டு இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மொழிக் கூறுகளில் வேறுபடும். அடுத்தடுத்துள்ள கிளைமொழிகட்குள் வேற்றுமை குறைந்து காணப்படுவது இயல்பு. சொற்கள் வட்டாரங்களைப் பிரித்தறியவும் உதவுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் இனிப்பு கலந்த எலுமிச்சைச் சாறைப் 'போஞ்சி' என்பர். தென்னார்க்காடு மாவட்டத்தில் 'போஞ்சி' என்ற சொல் யாருக்கும் புரியாத சொல் எனலாம். நிலக்கடலைப் பருப்பில் கசக்கும் பருப்பினை 'சூத்தை' என கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பிடுவர். அது இங்கு 'சொத்தை' ஆகிறது. ஊ, ஒ மாற்றம் வட்டாரங்களைப் பிரிக்கிறது. யாழ்ப்பாணத்தில் "கட்டாடி" என்பவர் தமிழகத்தில் வண்ணான், ஏகாலி, சலவையாளர் என அழைக்கப்படுகிறார். ஆங்கிலச் சொல்லான 'லாண்டரி'யும் சென்னையில் லாண்டரி வைத்திருப்பவரையும் குறிக்கின்றது. கடாய், வாணல், சீனிச்சட்டி, இருப்புச் சட்டி, பொரிக்குஞ்சட்டி என்பன ஒரு பொருளையே குறிக்கின்றன. குந்து, உட்கார் (ஒக்காரு), இரி என்பனவும் அவ்வாறே ஒத்த பொருளைத் தருவன.

இலக்கணம்

மொழியில் சொற்களின் வேறுபாட்டை மிக எளிதில் கண்டு கொள்ள இயலும். மேலும் அவைகளைக் கற்று தம் பேச்சில் ஒருவர் பயன்படுத்துவது எளிதே. ஆனால் சொற்றொடர் அமைப்பு, முற்றுத்தொடர் ஆகியவனவற்றில் மிகநுண்ணியதாக அமைந்துள்ள மாற்றங்களைக் கண்டுபிடிப்பது சற்று கடினமான செயலாகும். அதனை ஒருவர் கற்று பயன்படுத்துவது என்பது அதனினும்

கடினமாகும். ஏனெனில் எத்தனையெத்தனை வேற்றுமைகள் இவ் வகையில் உள்ளன என்பது ஆராய்ந்தறிய வேண்டியதும், எளிதில் புலப்படாததும் ஆகும்.

யாழ்ப்பாணத் தமிழர், "அவர் உங்களை வரட்டாம்" என்றால் தமிழ்நாட்டுத் தமிழர் அதனை முற்றும் விளங்கிக் கொண்டார் என்று கூற முடியாது. அதனையே 'அவர் உங்களை வரும்படி கூறினார், வரச்சொன்னார்' என்றால் பொருள் எளிதில் விளங்கிக்கொள்வார். தமிழகத்திலேயே சோறு குடிப்பதும், பசிகுடிப்பதும், சோறு தின்பதும், சோறு சாப்பிடுவதும், பசிக்குக் கூழோ, கஞ்சியோ குடிப்பதும் இயல்பான சொற்றொடர்களாக உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வட்டாரக் கிளைமொழியில் காணப்படும் இலக்கண அமைப்புகளாகும்.

'சோறுகுடி – சேலம் மாவட்டத்தில் சோளச் சோறு, கம்மஞ் சோறு முதலியவற்றைக் கரைத்து குடிக்கும் பழக்கம் உள்ளதால் இச்சொற்றொடர் இலக்கணத் தொடராயிற்று. பச்சைமலைவாழ் பழங்குடிகள் காலையில் பசிக்குக் கூழோ, களியோ கரைத்துக் குடிப்பர். பசிக்குக் குடித்தலையே 'பசிகுடித்தல்' என வழங்கு கின்றனர்.

இவ்வாறு பல்வேறு அமைப்புகள் வழக்கில் உள்ளபொழுது எது இலக்கண அமைதியுடையது என்று கண்டறிவது கடினமாக உள்ளது. பெரும்பான்மை வழக்கு, சிறுபான்மை வழக்கு என வகை செய்யலாமேயன்றி தவறு, தவறல்ல என்று வரையறை செய்ய இயலாமற் போகும். ஆயினும் பார்த்தமாத்திரத்திலேயே சில சொற்றொடர் அமைப்புகள் தவறானவை என பலரும் எளிதில் கூறலாம்.

நீ வரச்சே வாங்கிண்டு வா
நீ வரக்குள்ள வாங்கிகிட்டுவா
நீ வரய்லெ வாங்கிகிட்டு வா / வாங்கியா
நீ வரப்போ வாங்கி(ன்)வா

என்ற தொடர்கள் வெவ்வேறு சமூக அமைப்பில் வழங்குவன. இவைகளில் எது ஏற்புடையது?

'நீ வரும்பொழுது வாங்கிக் கொண்டுவா'

என்பதனையே அனைவரும் ஏற்றுக்கொள்வர். ஏனெனில் அதுவே எழுத்து மொழியுடன் இயைபுடையது.

உச்சரிப்பு: கிளைமொழிகளைப் பற்றி கூறும்பொழுது சொற்களும் இலக்கண அமைப்பும் வட்டார வேறுபாட்டினைக் காட்டினாலும், உச்சரிப்பே முதன்மையாக நிற்கிறது. நாம் சந்திக்கும் ஒருவரின் உச்சரிப்பே, அவர் எந்த பகுதிக்காரர் என்று சிந்திக்கத் தூண்டுகிறது. அவர் பேச்சில் உள்ள குரலோசையின் ஏற்ற இறக்கம் ஆகியன அவருடைய சொந்த ஊர் எது என்பதைக் காட்டும் அளவிற்கு மாறுபடுகிறது.

உச்சரிப்பு மூன்று அடிப்படை நிலைகளில் மாறுபடும். சொல் மாற்றம், ஒலிமாற்றம், வேற்றமைப்பு மாற்றம். இவைகளில் வேற்றுமைப்பு மாற்றமே கடினமானதும் இன்றியமையாததும் ஆகும் ஆதலின் கிளைமொழியை ஒப்பிடுவோர் இம்மூன்று நிலைகளையும் நன்கு அறிந்து ஒன்றுக்கொன்றுள்ள வேறுபாடுகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என ரர்பின்ஸ் பர்லிங் (Robins Burling 1973) என்பவர் கூறியுள்ளார்.[1]

சொல் வடிவ வேறுபாடு

சொல்லை உச்சரிக்கும் முறையில் வேறுபாடுகளைக் காணலாம். ஒரு சொல்லை அம்மொழியைப் பேசுகின்ற அனைவரும் ஒரே மர்திரியாக உச்சரிப்பதில்லை. சோறு என்ற சொல்லில் உள்ள சகரத்தை ஸகரமாகவும், றகரத்தை ரகரமர்கவும் 'ஸோரு' எனவும் பலர் உச்சரிப்பதை இம்மாவட்டத்தில் காணலாம். ஆனால் சகரத்தை வல்லொலியாகவே 'பச்சை' என்ற சொல்லில் உள்ள ஒலியைப்போல சோறு எனவும் உச்சரிப்பர். அவ்வாறரீயின் ஒலிப்பு முறையினால் அச்சொல் மூன்று வகையில் வேறுபடுகிறது.

"சோறு, சோரு, ஸோரு"

இதுபோன்றே தாளாரம்/தாராளம் எனவும், பழம்/பளம்/பயம் எனவும், கிழவி, கெய்வி, கௌவி, கெழ்வி எனவும் பலபட உச்ச

1 Robbins Burling 1973 English in Black & white p. 6. Newyork.

ரிப்பதைக் காணலாம். இங்கு இவைகள் சொல்வடிவ வேறுபாடு என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு பொருளைத்தரும் வெவ்வேறு சொற்களை இது குறிக்காது.

சொல்வடிவ வேறுபாடு (word variability)

இவ்வாறு உச்சரிப்பில் வரும் வேறுபாட்டை ஒரு வரையறைக் குள் கொண்டுவர இயலாது. ஏனெனில் ஒவ்வொருவரும் வெவ் வேறு வகையில் பேசிப்பழகி இருப்பதே அதற்குக் காரணமாகும். போதும் என்ற சொல்லை 'போரும்' எனவும், 'மிதி' என்ற சொல்லை மிறி எனவும் எப்பொர்ழுது எங்கு உச்சரிப்பார்கள் என்று கூறமுடியாதல்லவா? மேலும் ஒவ்வொருவரும் தாம் உச்சரிக்கும் முறையே சரியானது, சிறந்தது என்ற எண்ணம் உடையவராக இருக்கக்கூடும். எல்லோருடைய உச்சரிப்பையும் திருத்துவதற்கு பொதுவான ஒரு உச்சரிப்பு முறை (வரிவடிவத்தை படிக்கும் பொழுது கிடைக்கும் ஒலிகள்) இருக்கவேண்டும் என்ற கொள்கை உருவாகி உள்ளது. ஆனால் பேச்சுத் தமிழில் "வாங்க" என்ற சொல்லுக்கு இலக்கிய வடிவம் என்ன? 'வாருங்கள்' என்பதா? "வா+ங்கள் என்பதா? இதிலிருந்து பொதுவடிவம் இருக்க வேண் டும் என்ற கொள்கை தவறானது என்று எண்ண இடமுண்டு. ஒவ்வொரு சொல்லுக்கும், அச்சொல் வழங்குமிடத்தில். பெரும் பான்மை மக்களால் எவ்வாறு உச்சரிக்கப் படுகிறதோ அவ்வாறே இருக்கும் வேறுபாடுகளைக் காட்டிலும், இது வரையறைக்குட் படாத மாற்றமாகும்.

ஒலி வேறுபாடு (Sound Variability)

ஒரு சிலரின் பேச்சில் ஒரு குறிப்பிட்ட ஒலி எல்லாச் சொற்க ளிலுமே, பிறரிடமிருந்து வேறுபட்டு ஒலிக்கலாம், திருச்சி மாவட் டம், ஜெயங் கொண்டாம் பகுதியில் ஜ ஒலிக்கு ஸ ஒலியை ஒரு சமூகத்தினர் உச்சரிக்கின்றனர்.[1] இதன் பயனாக ரோஜா, ராஜா, ஜோடி, ஜன்னல், மேஜை போன்று ஜ ஒலியுள்ள சொற்கள் அனைத்தும் ரோஸா, ராஸா, ஸோடி, ஸன்னல், மேஸை என உச்சரிக்கப்படுகிறது. இந்த ஒலிமாற்றம் முறையாகவும், வரம்புக்

1 Ramaswamy, K. 1978 *Padayachi Dialect of Tamil*, Annamalai Nagar.

குட்பட்டும் வழங்குவதால் எங்கெங்கு ஒலி பிறழ்ந்து வரும் என்பதை ஒரு விதிக்குள் கட்டுப்படுத்த இயலும். இதுபோன்றே ழகரத்தை லகரமாக உச்சரிப்போரும், றகரத்தை ரகரமாக உச்சரிப்போரும் தம்பேச்சுக்களில் ஒலி மாற்றத்தையே ஏற்படுத்துகின்றனர். அவர்களுடைய பேச்சில் பிறழ்ந்து ஒலிக்கும் ஒலிமட்டுமே வழங்கும். முறையான ஒலி வழங்கமாட்டாது என உறுதியாகக் கூறலாம். இம்மாதிரி முறையாகத் திரிந்து வழங்கும் ஒலிகளின் அடிப்படையில் வேறொரு கிளைமொழியினைப் பேசுகின்றவர்கூட தன் திறமையினால் அடுத்த கிளைமொழியைப் பேசமுயன்று வெற்றியடைவர். ஒலி வேறுபாடே கிளைமொழி வேறுபாட்டை மிக எளிதாக அறிய உதவுகிறது. இரு கிளைமொழிகள் மிகுந்த வேறுபாடுடையனவாக இருந்தால் ஒரு கிளைமொழியாளர் அடுத்த கிளைமொழியில் ஒரு முழுச் சொற்றொடரைக்கூட பேச இயலாது. ஏனெனில் ஒரு ஒலியாவது பேசுவோரின் பழைய கிளைமொழிக் கூற்றினை வெளிப்படுத்தி விடும். எடுத்துக்காட்டாக '-ங்க' விகுதியைக் கூறலாம். கோவைத் தமிழில் -ங்க மிகுந்துவரும் என அறிந்த கடலூர்க்காரர் "ஏனுங்க என்னங்க சொன்னீங்க" என்று தனக்கும் கேவைத்தமிழ் தெரியும் என்பதைக் காட்ட விரும்பினார். ஆனால் அத்தொடர் ஒரு கோவைவாசி கூறினால் "ஏனுங்க என்ன சொல்லிபோட்டிங்க" என்றே அமைகிறது. இதிலிருந்து ஒரு கிளைமொழியாளர் மிகுந்த வேறுபாடுடைய அடுத்த கிளைமொழியினைப் புரிந்துகொள்ளும் அளவைவிட பேசும் அளவு குறைவாகவே இருக்கும் என்பதை உணரவேண்டும்.

வேற்றமைப்பு மாற்றம் (Contrast variability)

மேற்கூறிய இரண்டுவகை மாற்றங்களைவிட இம் மூன்ருவது வகையான மாற்றமே மிகவும் இன்றியமையாததும், கடினமானதும் ஆகும். ஒருவர் பேச்சில் சொற்களை மாறுபடுத்தி அறியும் வகையில் வேற்றமைப்பு மாற்றம் உண்டு. அது மற்றொருவரின் பேச்சினின்றும் மாறுபடலாம். மாறுபாடு இல்லாவிட்டால் அவ்விருவரும் ஒரே கிளைமொழியைப் பேசுகின்றவராவார். வேற்றமைப்பு மாற்றங்களை பின்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கலாம். பேச்சுத் தமிழில் லகர ளகர ஒலியன்களை வேறுபடுத்தி

மாற்றிணைகளாக வழங்குவதன்மூலம் வேற்றமைப்புத் தன்மையை உள்ளடக்கியவராக பேச இயலும்.

ல்		ள்
கல்(லு)	:	கள்(ளு)
வெல்லம்	:	வெள்ளம்
நாலு	:	நாளு
வேலை	:	வேளை

என நான்கு மாற்றிணைச் சொற்களில் லகர ளகர வேறுபாடு ஒன்றே பொருளை வேறுபடுத்த உதவுகின்றது. கிளைமொழிகளை ஒப்பிடும் பொழுதுதான் ஒரு கிளைமொழியில் சில மாற்றிணைகள் இருப்பவையும், மற்றதில் அவை இல்லாதிருப்பதையும் அறிய முடிகிறது.

கீழ்வரும் மாற்றிணைகளைக் கொண்டு ரகர றகர ஒலியன் களை கிளைமொழிகள் எவ்வாறு வேற்றமைப்பு மாற்றத்தில் பயன் படுத்தியுள்ளன என்பது தெளிவாகும். கிளைமொழிகள் இரண்டில் ஒரு கிளைமொழி இவ்வேறுபாட்டைப் பெறாமல் ஒரே ஒலியாக உச்சரித்து மாறுபாட்டினைக் காட்டுவதில்லை.

கிளைமொழி 1	கிளைமொழி 2
கரி	கரி/கறி
அரை	அரை/அறை
துரை	துரை/துறை
பேரு	பேரு/பேறு
ஏரு	ஏரு/ஏறு

கிளைமொழி ஒன்று தென்னார்க்காடு, தஞ்சை திருச்சி மாவட்டங் களில் வழங்கும் பேச்சுமொழியையும் கிளைமொழி இரண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் பேச்சு மொழியினையும் குறிக்கின்றன. சொற்களின் பொருளை சரியாக அறிந்துகொள்ள மாற்றிணைகள் உதவுகின்றன. இம்மாற்றத்தினைப் பெறாத கிளை

மொழி ஒன்று, வரி வடிவத்தில் அச்சொற்கள் தவறாக எழுதப் பட்டும், உச்சரித்தும் வருகின்றதைக் காணலாம். ரகர றகர வேற்றுமையை உணராமல், 'பெரிய றானா, சின்ன ரானா' என்று ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்கட்கு கற்பிப்பதையும் காண்கிறோம். மொழியை எழுத, படிக்க, பேச மேற்கூறிய மூன்று வேறுபாடுகளும் தத்தம் அளவில் இன்றியமையாதனவையே.

சொல் வடிவ வேறுபாடு, ஒலி வேறுபாடு, வேற்றமைப்பு வேறுபாடு ஆகிய மூன்றில் சொல் வடிவ வேறுபாடு மிகவும் சிக்கலானதும், வரைமுறைக்கு கட்டுப்படாததும் ஆகும். ஏனைய இரண்டும் விதிமுறைக்கு உட்பட்டு, ஒழுங்காக விளக்கும் வகையில் அமைவனவாகும். தமிழ்க் கிளைமொழிகளில் உயிரொலியன்கள் வேறுபாட்டினைக் காட்டிலும் மெய்யொலியன்களின் வேறுபாடே மிகுந்து காணப்படுகின்றன.

வேற்றமைப்பு வேறுபாட்டில் மாற்றிணைகள்

வேற்றமைப்பு: **ன்/ண்** **மாற்றிணைகள்**

பொன்னு gold	/	பொண்ணு girl
என்னெ what	/	எண்ணெ oil
ல்/ள்		
கலம் a quantity	/	களம் thrashing floor
தாலி marriage string	/	தாளி season with mustard etc.
ழ்/ல்		
மழெ rain	/	மலெ mountain
ஆழொம் depth	/	ஆலொம் a kind of coloured turmaric water etc.
ழ்/ள்		
கொழம்பு sauce	/	கொளம்பு hoof
தழெ leaves	/	தளெ bondage
எழெ string	/	எளெ become lean

உச்சரிப்பு வேறுபடும் வகைகள்

	எடுத்துக்காட்டு	கட்டுக்கோப்பு	எழுத்து முறை	அறியும் அளவு
சொல் வேறுபாடு	உச்சரிக்கும் முறையில் இடத்திற்கு இடம் (வட்டாரக் கிளைமொழியில்) வேறுபடும். எண்பது: எம்பது, எம்பளது கோழி: கோளி, கோழி, கோயி. பலா: பெலா, ப்லா	வரைமுறையற்றுவெவ்வேறு விதத்தில் மாற்றமுடையன ண் > ம்; ண் > ம்/φ > ள் ழ் > ள்; ழ் > ழ்; ழ் > ய் அ > எ, அ > φ	பேச்சு மொழியை எழுத்து முறையில் கொண்டு வராததால் மாற்றம் இல்லை; கொணர்ந்தால் சொல் வடிவம் வேறுபடும்.	எளிதாக வேறுபாட்டினை முழுவதும் அறியலாம்
ஒலி வேறுபாடு	கரி ÷ கறி பழம் ÷ பளம்	ஒழுங்கான மாற்றமுடையது ர் = ற் ழ் = ள்	ஒரு கிளைமொழியில் எழுத்து முறையில் தவறு ஏற்படும். ஏனெனில் அக்கிளை மொழியில் குறிப்பிட்ட ஒலிகளை வேறுபடுத்தி அறியாததால் எங்கு எந்த எழுத்தினை எழுத வேண்டும் என்ற குழப்பம் ஏற்படும்.	அறியும் அளவு ஒரு பாதியாக குறையும்.
வேற்றமைப்பு வேறுபாடு	குழம்பு ÷ குளம்பு	ழ் = ள்	எழுத்து முறையில் குழப்பம் ஏற்படும்.	அறியும் அளவு ஒரு பாதியாக குறையும்.

மொழியில் மாற்றுக் கூறுகள்

	சொற்கள்	இலக்கணம்	உச்சரிப்பு: சொல் வடிவ வேறுபாடு	உச்சரிப்பு: ஒலி வேறுபாடு	உச்சரிப்பு: வேற்றமைப்பு வேறுபாடு
வட்டாரக் கிளை மொழிகள்	பரவாயில்லை: (தெ.ஆ.) கொள்ளாம் (குமரி) வாணல்:கடாய்	அவர் உங்களை வரட்டாம்(யாழ்ப் பாணம்) அவர் உங்களை வரச் சொன்ஞர்	வாங்கு:வேங்கு (தெ.ஆ.)(குமரி) அம்மா:அம்மெ	சாமான்:ஜாமான் (தெ.ஆ)(மதுரை)	வால்:வாள்: வாழ்
நடை	பொண்ணு, பிள்ளெ வெடெ, பசங்க	இந்தக் கூடையை கொஞ்சம் கீழே இறக்குங்கள்; இந்தக் கூடையை செத்த ஈழ்ச்சென்	வேகமாக பேசும்பபாழுது ஒலியன்கள், அசைகள் சரிவர உச்ரிக்கப்படாமல் மூன்று நிலைகளிலும் மாற்றங்கள் நிகழும்		
உயர்வு, தாழ்வு ஏளனம் ஆகிய வற்றைக் குறிப்பன.	உட்காருங்க(ள்) குந்துங்க, குந்தென்	ஏன் நிக்றீங்க உச்காருங்க; ஏன் நெலெகாலு மேலெ நிக்றெ ஒக்காரென்	மணிலாக் கொட்டை/ மள்ளாட்டெ	ஸ்வாமி/சாமி ப்ரசாதம்/ பெர்சாதம்	புஷ்பம்: புஸ்பம் வேஷம் வேசம்

உச்சரிப்பின் அடிப்படையில் ஏற்படும் கிளைமொழி மாற்றங்களை இதுவரை கண்டோம். சமூகத்தில் பேசுவோரின் நிலைக்கு ஏற்பவும், அப்பேச்சு பெறும் உயர்வு தாழ்வுக்கு ஏற்பவும் கிளை மொழி வழக்கு வேறுபடலாம். அவைகள் இங்கு இடம்பெறவில்லை. அடுத்துவரும் கட்டுரையில் அத்தகைய மாற்றங்களை விரிவாகக் காண்போம்.

Ramasamy, K. 1978 *Padayachi Dialect* Annamalainagar.

Robbins Burling, 1973. English in Black & White, Newyork.

சீனிவாசவர்மா, கோ. 1977 கிளை மொழியியல், அண்ணாம
நகர்.

மொழியியல் 2.3 (1978)

மொழிநடை - பாகுபாடுகளும், வெளிக்கொணரும் முறைகளும்

மு. ஞானம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

0. முன்னுரை

''பேசுநர் தம் மொழியில் குறிப்பிடத்தக்க நெகிழ்ச்சியை காண்பிக்கக் கூடும் என்பதை உணர சமுதாய மொழியியல் நுண்ணறிவு ஏதும் தேவையில்லை'' என பேச்சில் மொழிநடை வேறுபாடுகளின் (stylistic variations)வெள்ளிடைமலைப்பாங்கை இன்றைய சமுதாய மொழியியலார் விளம்புவர் (வால்ட் உல்ஃப்ரம், ரால்ஃப் டபிள்யூ, ஃபசோல்ட், 1974;83). சிலர் மிகவிரிவான வேறுபாடுகளைக் காட்டலாம். சிலர் குறைவான வேறுபாடுகளைக் காட்டலாம். ஆனால் சமுதாயச் சூழலும் (soial context), பேச்சுத் தலைப்பும்(topic of speech)மாறும்போது ஒவ்வொருபேசுநரிடத்தும் மொழியியல் மாற்றங்களைக் காணலாம். எப்படியும் ஒரு மொழி நடைப் பேசுநர் இல்லையென்பது திண்ணம். வெவ்வேறு மொழி நடைகளில் காணப்படும் ஒலியியல், இலக்கணவியல், சொல்

லியல் கூறுகளை ஆராய்வது சமுதாய மொழியியல் ஆய்வின் ஒரு முக்கியமான கூறாகும். இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் மொழி நடையின் விளக்கம், சமுதாயக் கிளைமொழியியலினின்றும் (social dialect) அதன் வேறுபாடு, அதன் காரணங்கள், அதன் பாகுபாடு, வெவ்வேறு நடைப் பேச்சுக்களை வெளிக்கொணரும் முறை ஆகியவற்றை ஆராயப் புகுவதாகும்.

1. மொழிநடை என்பது என்ன?

மொழி ஒரு சமுதாயக்கூறு—மிகத் தலையாய கூறு என்றே சொல்லலாம். ஆதலால் ஒவ்வொரு பேசுநரும் சமுதாய உணர்வும் (social consciousness), கலாசார உணர்வும் (cultural consciousness) பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். சமுதாய உணர்வின் காரணமாக மாறுபடும் பேச்சுவழக்கின் தன்மையே மொழிநடையாகும். ஒரு வழக்கை ஏற்படுத்தி பயன்படுத்துவதற்கான அடிப்படை, சமுதாய உறவுக் கூறுகளென்றும் (social relationships), அதற்கேற்ப இயைபு (adjust) கொள்ளும் உணர்வினராகப் பேசுநரைச் செய்யும் ஒருவித உள்ளுணர்வும், மனப்போக்குமே அவ்வழக்கின் மூல காரணம் எனக் கொள்ளலாமென்றும் ஆர். ஆசன் (1973:267) அவர்கள் கூறுவார்.

2. மொழிநடையும் சமுதாயக் கிளைமொழியும்

மொழிநடையென்பது பேச்சு வழக்கின் ஒருவகை எனின் சமுதாயக் கிளைமொழிக்கும் (social dialect) ஒரு நடைக்குரிய பேச்சுக்கும் என்ன வேறுபாடு என்ற வினா இங்கே எழலாம். உண்மையில் இவ்விரண்டும் இருவேறு பரிமாணங்களில் (dimensions) அளக்கப்படுபவையாகும். சமுதாயக் கூறுகளுக்கும், மொழிக் கூறுகளுக்கும் இடையே உள்ள கூட்டுவேறுபாடு (covariation) இரண்டு பரிமாணங்களில் ஏற்படுவதாகக் கூறலாம் என்று கூறி ஒரு தனிமனிதனின் வகுப்பு, வயது, பால் ஆகியவற்றின் சமுதாயப் பாகுபாடு ஒரு பரிமாணம் என்றும், சமுதாய உறவுகளில் (social relations) ஈடுபடும் சமுதாயச் சூழல் (social context) மற்றும் சுற்றுச் சூழல் (social setting) மற்றொரு பரிமாணம் என்றும் பகுப்பர் இன்றைய சமுதாய மொழியியலார் (பீடர் ட்ரட்கில்,

1974 : 45). இவற்றில் முந்தையதை கிடைநிலைப் பரிமாணம் (horizontal dimeneion) எனின் பிந்தையதை குத்துநிலைப் பரிமாணம் (vertical dimension) எனலாம். ஏனெனில் முந்தையது ஒரு சமுதாயத்தின் அனைத்து மக்களையும் வகுப்பு, வயது, பால் முதலிய சமுதாயக் கூறுகளின் அடிப்படையில் ஆய்கிறது; பிந்தையதோ, ஒரு தனிமனிதன் அல்லது ஒரு தனிப்பட்ட சமுதாயக் கூற்றை அதனுடைய வெவ்வேறு சூழல்களில் ஆய்கிறது.

3. மொழிநடை வேறுபாட்டின் காரணங்கள்

முன்னுரையிலேயே, பேச்சுவழக்கு,சூழலும் பேச்சுத் தலைப்பும் மாறுவதற்கேற்ப மாறுகின்றது எனக் கண்டோம். எனவே மொழிநடை மாற்றத்திற்கு இரண்டு காரணங்கள் எனலாம்-ஒன்று சுற்றுச் சூழல் (social situation) மற்றது பேச்சுத் தலைப்பு(topic of speech). முந்தையதில், வகுப்பறை, சொற்பொழிவு மேடை,வீடு, அலுவலகம் எனப் பல்வேறு சுற்றுச் சூழல்கள் அடங்கும். பிந்தையதில் ஒரே சூழலிலும் இலக்கியத் திறனாய்வு, கொள்கை விளக்கம், பொழுதுபோக்குப் பேச்சு முதலிய வெவ்வேறு பேச்சுத் தலைப்புகள் அடங்கும். இங்கே மீண்டும் ஒருவகை இடைநிலைப் பரிமாணமும், குத்துநிலைப் பரிமாணமும் எதிர்ப்படுகின்றன. முந்தையது சுற்றுச்சூழலை மாற்றிக்கொண்டே போவதால் மாற்றம்பெறுவதாகும். பிந்தையது ஒரே சூழலில் தலைப்புக்களை மாற்றிக் கொண்டே போவதால் மாற்றம் பெறுவதாகும். இனி இவ்விரு பரிமாணங்களையும் தனித் தனியே ஆராய்வோம்.

3.1 மொழி நடையும் சுற்றுச் சூழலும்

நாம், எல்லோரிடத்தும் ஒரே முறையில் பேசுவதில்லை எல்லா சுற்றுச் சூழலிலும் ஒரே முறையில் பேசுவது எள்ளற்கும் கடிதற்கும் உரியது. குழந்தைகளிடம் பேசும் முறையில் உயர் அதிகாரிகளிடம் பேசமுடியாது; மேடைப் பேச்சு மனைக்கு ஒவ்வாது. இங்ஙனம் வேறுபடுத்தும் பாங்கு சமுதாய உணர்வின் பலனாக விளைவதாகும். எனவே, வெவ்வேறு நிலைகளைச் சார்ந்த மிகப்பல பிரிவுகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் மிகப் பல நடைகளை நாம் காணலாம்.

3.1.1 அங்ககத்திண்மை, பொறியகத்திண்மை — (Organic and mechanic solidarity) சுற்றுச் சூழலின் இரு தன்மைகள்

வெவ்வேறு நிலைகளைச் சேர்ந்த சமுதாய உட்பிரிவுகளின் பரஸ்பர தொடர்பு அங்ககத்திண்மை (organic solidarity) உடைய தாகக் கருதப்படுகிறது. அங்ககத்திண்மை உள்ள இடங்களில் ஏராளமான சுற்றுச் சூழல் நடைகளை நாம் எதிர்பார்க்கின்றோம். குறிப்பாக, சாதி, பால், வயது ஆகியவற்றின் கட்டுப்பாடுகள் மிக்க பாரதம் போன்ற நாடுகளில் நாம் மிகப்பல சுற்றுச் சூழல் நடைகளை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

நிறுவனப் பிணைப்பு அல்லது ஒரு சமுதாய உட்பிரிவுப் பிணைப்பு உள்ள இடங்களில் பொறியகத் திண்மையும், எண்ணிக்கைக் குறைவான நடைகளும் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட தனித்தனி சமுதாயப் பழக்கங்களை உடையவர்களாகவும், சிக்கலான பரஸ்பரச் சார்புகளினால் பிணிக்கப்பட்டவர்களாகவும் உள்ள மக்களிடையே அங்ககத்திண்மை வற்புறுத்தப் படுகிறது. எனவே "அங்ககத் திண்மைக்கு தனிப்பட்டவர்களின் வேறுபாடுகளுக்கிடையில் விளையும் ஒருங்கிணைவு, முற்காரணமாகிறது. ஒழுங்கமைவுடன் பழகும் பழக்கத்தை உருவாக்குகின்ற ஒரே மாதிரியான உணர்வுகளையும், நம்பிக்கைகளையும் தம்மிடை கொண்டுள்ள மக்களுக்கிடையே பொறியகத்திண்மை வற்புறுத்தப் படுகிறது. அங்ககத்திண்மையில் சமுதாய இயக்கப்பங்கு (social role) ஒருவரால் முயன்று பெறப்படுகிறது. பொறியகத் திண்மையிலோ அது தரப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட ஒன்றாக அமைந்து விடுகிறது" [பெர்ன்ஸ்டீன் 1978; 67]. எனவேதான் அங்ககத்திண்மை உள்ள சமுதாய அமைப்பில் மிகப்பல மொழி நடைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

3.2. பேச்சுத் தலைப்பு

தலைப்பைச் சார்ந்த நடைகள், அத்தலைப்பின்பால் பேசுநரின் மனப்பாங்கைச் சார்ந்துள்ளன. எல்லா விஷயங்களையும் ஒரே மாதிரியாக ஒருவரும் பேசுவதில்லை. நுண்ணறிவுக்குரிய தலைப் புக்களை, வீட்டு விஷயங்களைப் போல பேசுவதில்லை. இவ்

வகை வேறுபாடுகள் பல்வேறு சமுதாய மொழியியல் ஆய்வாளர்களால் கடந்த காலத்தில் ஆயப்பட்டிருக்கின்றன. [லபாவ். டபிள்யூ. 1966; ட்ரட்கில், பி. 1974, ஞானம், எம். 1975]

4. காரணங்களின் விளைவு

மொழிநடைகளுக்கு நாம் மொழியியலுக்கு அப்பாற்பட்ட (Para-Linguistic) காரணங்கள் இரண்டைக் காட்டினாலும் அவற்றின் விளைவுகள் தன்மையினால் ஒன்றுபட்டனவேயாகும். மிக விழிப்பான (most careful) கவனத்திலிருந்து மிக அசட்டையான (most casual) கவனத்திற்குள் ஏதோ ஒரு கவனத்தை அது பேச்சின்பால் பேசுநரின் உள்ளத்தில் விளைவிக்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு கவனம் (care) செலுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நடை சிறப்பாகிறது. தலைப்பு, சுற்றுச்சூழல், இரண்டில் எந்த ஒன்றுமே பேசுநரை விழிப்பு தொடங்கி அசட்டை முடிவான கவனத் தொடர்ச்சியிலேயே (attention continum) நிறுத்துகிறது.

5. மொழிநடைகளின் பாகுபாடுகள்

மொழிநடைகள் என்பது மனப்பாங்கின் கண் ஏற்படும் மேற்கூறிய விளைவுகளின் பிரதிபலிப்பே. விளைவு ஒரு தொடர்ச்சியாதலின், நடைவேறுபாடுகளும் சிறப்பு தொடங்கி சாதாரணம் வரையான ஒரு தொடராகவே ஆகின்றன. நடையை ஒரு தொடர்ச்சியில் அளப்பதால், ஒரு கோட்டில் எண்ணற்ற புள்ளிகளைக் குறிப்பதுபோல, கொள்கையளவில் நடைகள் எண்ணற்றவையாகும். ஆனால் நடைமுறை வசதிக்காக நாம் குறிப்பிடத்தக்க சில புள்ளிகளை மட்டும் தீர்மானித்துக் கொள்ளலாம். இவற்றைப் பலவாறாக மொழியியலார் பகுக்கின்றனர்.

மார்ட்டின் ஜூஸ் (1962) என்பார் ஆய்ந்து நடைகளை வரையறுத்துள்ளார். இவை மிகச்சிறப்பு நடையிலிருந்து இறங்கு வரிசையாக மிகச் சாதாரண நடைவரை வரையறுக்கப்பட்டுள்ளன:-

i) உறைந்த நடை (Frozen style) – இது எழுதப்பட்ட இலக்கிய நடையாகும். குரல்மாற்றம் முதலியன இதில் நிகழ்வதில்லை.

ii) சிறப்புநடை (Formal style) இந்நடையில் பேசுநர் தலைப் போடு ஒட்டாத (detached) நிலையில் இருக்கிறார். இந்நடை யில் கருத்தின் ஒட்டு மொத்தக்கோவை (overall cohesion) இருப் பதில்லை iii) உரையாடல் நடை (conversation style) இந் நடையில் பேசுநரும் கேட்பவரும் மாறிமாறிப் பங்கேற்கின்றனர். ஒருவரது பேச்சின் தாக்கம் (influence) மற்றவர் பேச்சின்மீது ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது. iv) சாதாரணநடை (casual style) இந்நடையில் முடிவடையாத் தொடர்களும் (ellipses) கொச்சைச் சொற்களும் விரவிவருகின்றன. v) நெருக்கநடை (Intimate style) இந்நடையில் பேச்சின் சுருக்கங்கள் பலவற்றைக் காண்கிறோம். பேசுநரோடு நெருங்கிய தொடர்புடையவரே இதனைப் புரிந்துகொள்ள இயலும்.

இன்றைய சமுதாய மொழியியலின் தந்தை என்று சொல்லப் படும் வில்லியம் லபாவ் இதனையே சாதாரண நடையிலிருந்து சிறப்பு நடைவரை நான்காகப் பிரிப்பார் (1972) அவரது பாகு பாடாவது — i) தற்பெருக்கு உரையாடல் (spontaneous conversation style) நடை. ii) பத்திபடிக்கும் நடை (passage reading style) iii) சொற்பட்டியல் படிக்கும் நடை (word-list reading style) iv) இணைமுரண் படிக்கும் நடை (minimal pair reading style) தற்பெருக்கு மொழிநடையில் சாதாரண நடை யையும், சிறப்பு நடையையும் அவர் பிரிப்பார்.

கடந்த மூன்றாண்டுகளில் இக்கட்டுரையாசிரியர் நடத்திய வெவ்வேறு தகவல் சேகரிப்புகளின் அடிப்படையில் இவ்விரண்டை யும் ஒருங்கிணைத்து கீழ்க்கண்டவாறு மொழிநடைகளைப் பாகு பாடு செய்தல் தமிழ்நாட்டுச் சூழ்நிலைக்கு பொருத்தம் உடைய தாகத் தோன்றுகிறது:-

i) சாதாரணத் தற்பெருக்குப் பேச்சுநடை
(casual spontaneous style)

ii) உரையாடல் நடை (consultation style)

iii) சிறப்புப் பேச்சு வழக்கு நடை (carful style)

iv) பத்தி படிக்கும் நடை (passage reading style)

v) சொற்பட்டியல் படிக்கும் நடை (word-list reading style)

vi) இணை முரண் படிக்கும் நடை (minimal pair reading style)

6. மொழிநடைகளை இனம் காணல்

முடிவடையாத்தொடர், கொச்சைச் சொற்கள், சிரிப்பு, குரலில் மாற்றம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு மொழி நடைகளை வரையறுத்தல் சிறப்பானதாக இருப்பதில்லை. ஏனெனில் இவ்வகைக் கணிப்புகள் ஆய்வுக்கு ஆய்வு மாறுபடுகின்றன. இன்றைய சமுதாய மொழியியலார் வெவ்வேறு மொழிநடைக்கான தலைப்புக்களை ஒரு கேள்விப் பட்டியலில் இடம்பெறச் செய்வதையே பெரிதும் கைக்கொள்கின்றனர். எடுத்துக் காட்டாக லபாவ் தன்னுடைய மொழிநடை யாராய்ச்சியில் தகவலாளியிடம் அவர்தம் பேச்சின் தன்மை பற்றிய வினாக்கள் சிறப்பு நடையில் விடையைக் கொணர்கின்றன எனக்கண்டு அப்பகுதியை சிறப்பு நடைக்காக மேற்கொண்டார் என்று அறிகின்றோம், எனவே முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட தலைப்புகளில் வினாக்களை அமைத்துக்கொண்டு அதற்கான விடைகளை வெவ்வேறு நடைகளாகப் பிரித்துக்கொள்வது, எளிதாகவும், அதே சமயத்தில் நம்பத் தக்கதாகவும் இருக்கும் என அறுதியிட்டுக் கூறலாம்.

7. வெளிக் கொணரும் முறைகள்:

7.1. பேட்டி

வெவ்வேறு நடை வழக்குகளை வெளிக் கொணர மிக வசதியான முறை பேச்சுத் தலைப்புகளை மாற்றுவதாகும். எந்த ஒரு ஆய்வாளருக்கும் ஒவ்வொரு நடைக்கும் வெவ்வேறு சுற்றுச் சூழல்களை உருவாக்குவது நடைமுறையில் மிகக் கடினமானதாகும். இதுபற்றியே இன்றைய சமுதாய மொழியியல் ஆய்வாளர்கள் "உண்மையான சுற்றுச்சூழல்கள் (Authentic Context) நிச்சயமாக விரும்பத்தக்கதாயினும் வெவ்வேறு நடைகளை வெளிக்கொணர ஒரேஒரு பேட்டியை அமைத்துக் கொள்வதும் இயலும்" (வால்ட் உல்ஃபரம், ரால்ஃப் டபிள்யூஃபசோல்டு 1974-84) என்று கருதி அம்

முறையையே கடைப்பிடிக்கின்றனர். இதனை ஒட்டி இக்கட்டுரை ஆசிரியரின் தகவல் சேகரிப்பு அனுபவத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்ற வெவ்வேறு நடை வழக்குகளை வெளிக்கொணரும் முறைகளை கீழே காணலாம்.

பேட்டியானது இரண்டு பகுதிகளாக இருக்கவேண்டும். இவற்றை இரண்டு வெவ்வேறு சமயங்களில் நடத்தவேண்டும். முதல் பேட்டியில் ஆய்வாளர் சாதாரண, சிறப்பு மற்றும் உரையாடல் நடையிலிருந்து மொழியியல் மாறிகளை சேகரிக்க வேண்டும். அதன் பின்னர் அம்மாறிகளின் அடிப்படையில் படிக்கப்பட வேண்டிய பத்திகளும் சொற் பட்டியலும் முரண் இழைப் பட்டியலும் தயாரிக்கப்படவேண்டும். இதனை இரண்டாவது பேட்டியில் பயன்படுத்தவேண்டும்.

7.2. சாதாரண பேச்சு வழக்கு:

''சமுதாயத்தில் மொழியியல் ஆய்வின் குறிக்கோள் மக்கள் தாங்கள் கண்காணிக்கப்படுகிறோம் (Systematically Observed) என்ற உணர்வில்லாதபோது எப்படிப் பேசுகிறார்கள் என்பதை காண்பதே ஆகும். ஆனால் மொழித்தகவல்களை நாம் முறையான கண்காணிப்பினால் மட்டுமே சேகரிக்க முடியும்'' (லபாவ்,1970;30) எந்த ஒரு மொழி விளக்கத்திற்கும் தகவல் சேகரிக்க ஒலிப்பதிவு கருவி அவசியமாகும். ஒலிப்பதிவு கருவிகளை பயன்படுத்தும் போது மேற்கூறிய சங்கடம் இன்னும் அதிகமாகிறது. இந்த சங்கடங்களைக் குறைப்பதற்கு ஆய்வாளர் தகவலாளிகளோடு நட்புறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். நார்விச் ஆங்கிலத்தின் சமுதாயபாகுபாடு (The Social diffrentiation of English in Norwich) பற்றிய ஆய்வு நடத்திய பீட்டர் ட்ரட்கில் தகவலாளிகளோடு கடிதத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பேட்டியைக் கூட தகவலாளியை குடும்பச் சூழலிலோ நண்பர்கள் நடுவிலோ வைத்துக்காண்பது நலம். கூடியவரை ஒலிப்பதிவு கருவியின்பால் தகவலாளியின் கவனம் திரும்பும்படி செய்யாதிருப்பது நலம். அவ்வப்போது பேட்டியின் நடுவே நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களினுடைய குறுக்கீடு அனுமதிக்கப்படவேண்டும், ஊக்குவிக்கப்படவேண்டும் என்றே சொல்லலாம்.

தகவலாளி தன்னுடைய பேச்சின் எல்லா ஏற்ற இறக்கங்கள் கடன்வாங்கல்கள், முறுவல்கள், சிரிப்புகள் முதலியவற்றோடு மிக இயல்பாக பேசவேண்டும். தகவல் சேகரிப்பவர் மிக ஆவலுடனும் மிக கவனத்துடனும் அவரது பேச்சை கவனித்தல் இன்றியமை யாதது. பேட்டியின் இடையே தகவலாளிக்கு விருப்பமான தலைப்பை ஆய்வாளர் காணும்பொழுது அது தொடர்பான துணைக் கேள்விகளை பெருக்கிக்கொள்ளவேண்டும். சாதாரண பேச்சு நடையை வெளிக்கொணரும் தலைப்புகள் விபத்துக்கள், விளையாட்டுகள், விழாக்கள் முதலியனவாகும்.

7.3. உரையாடல் நடை:

இந்நடைக்கான தகவல்கள் சிறுசிறு வினா விடைகளில் சேகரிக்கப்படுகின்றன. இந்நடையில் தகவலாளிகளிடமிருந்து சொற் பெருக்கு ஏதும் இருப்பதில்லை. ஆய்வாளரின் கேள்விக்கு ஓரிரு வாக்கியங்களில் தகவலாளி பதில் கூறுகின்றார். எனவே இயல்பான சொற் பெருக்கில் இருப்பதைவிட இந்நடையில் அதிக கவன்மாக இருக்கிறார். இந்நடையை வெளிக் கொணர்வதில் ஆய்வாளர் சற்று விழிப்பாக இருக்கவேண்டும். தகவலாளி 'ஆமாம்', 'இல்லை' அல்லது வெறும் தலையசைத்தல் மூலமாக பதில் இறுத்துவிடக்கூடிய வினாக்களைக் கேட்கக்கூடாது. எடுத்துக்காட்டாக,

உங்கள் ஊர் இதானா? அல்லது, இந்த வீடு உங்க சொந்த வீடா? போன்ற வினாக்களைக் கேட்கக்கூடாது. அதேபோல ஆய்வாளர் தகவலாளிக்கு தகவல்கூறுகளை தனது கேள்வி யினால் கொடுத்துவிடக்கூடாது. எடுத்துக்காட்டாக உங்கள் வில்லேஜ் (Ville:j) எது? அல்லது உங்க க்ராமம் (Gra:mam) எது? என்று கேட்டால் பதிலும் முறையே வில்லேஜ் அல்லது க்ராமம் என்று வருவதற்கான சாத்தியப்பாடு உண்டு.

ஆய்வாளர் தான் தன் கேள்வியில் கொடுக்காத தகவல்கூறு களையே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

7.4. சிறப்பு நடை:

முன்னமேயே கூறிய வண்ணம் மார்ட்டின் ஜூஸ் தனிப்பட்ட ஈடுபாடின்மையும் (Personal detachment) ஒட்டு மொத்தக் கோவையும் [Overall Cohesion) சிறப்பு நடையின் இலக்கணமாக வகுப்பார். ஆனால் —

'விதியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?' அல்லது

'வாழ்க்கையில் வெற்றி என்பது என்ன?' போன்ற கேள்விகள் அதிகமாக சிறப்புநடையை வருவிக்கின்றன. தம் கொள்கைகள்பாலும் மனப்பான்மைகள்பாலும் ஒருவருக்கு ஈடுபாடு இல்லாமல் இருக்க இயலாது. அவைகளே, உலகம், வாழ்வு, மனிதன், மொழி முதலியனபால் ஒரு பற்றாகும். அதேபோல ஒட்டுமொத்தக் கோவை, மிகக்குறைவான கவனம் செலுத்தப்படும் நகைச்சுவை நிகழ்ச்சியொன்றை விவரித்தல் ஆகியவற்றிலும் காணமுடியும். எனவே கட்டுரை ஆசிரியரின் கருத்தில், வெறும் செய்திப்பரிமாற்றமாக மட்டுமின்றி கேட்பவரை ஏற்கச்செய்ய வேண்டும் என்ற உணர்வும், தன்னைப் பற்றிய நல்லபடிவத்தை (image) கேட்போர் மனத்தில் ஏற்படுத்த வேண்டும் என்ற நினைவும் சிறப்பு நடையில் காணப்படுகின்றன எனலாம். இதனால்தான் லபாவ் மொழியைப் பற்றிய கேள்விகள் சிறப்பு நடையைக் கொணர்கின்றன எனக் கண்டார். ஆனால் "தூய தமிழ்" பேசவேண்டும் என்ற ஆர்வம் மிக அதிகமாக தமிழ் நாட்டில் இல்லாததனாலோ, என்னவோ, "உங்க பேச்சு வழக்கைப் பத்தி என்ன நினைக்கிறீங்க? அல்லது, "உங்க பேச்சு வழக்கைப் பாத்து வேறே ஜாதிக்கர்ரங்க அல்லது வேறே ஊர்க்காரங்க எப்பவாவது சிரிச்சிருக்காங்களா?" என்ற கேள்விகள் இக் கட்டுரையாசிரியரின் தகவல் சேகரிப்புகளில் எவ்விதமான சிறப்பு நடையையும் கொணரவில்லை. மாறாக, கொள்கைகள், இலட்சியங்கள், வாழ்க்கை மதிப்பீடுகள் முதலியன சிறப்பு நடையைக் கொணர்ந்தன.

இந்நடைக்கான கேள்விகள் கேள்விப்பட்டியலில் முதலில் இடம்பெறுதல் நலம். பேட்டியின் தொடக்கத்தில் முன்பின்

தெரியாத ஆய்வாளர் தமது பேச்சை பதிவு செய்கிறார் என்ற நினைவும், அதனால் விளைந்த விழிப்புணர்வும் தகவலாளியின் மனத்தில் படர்கிறது. இது சிறப்புநடையைக் கொணர்வதில் துணை செய்யும். சில நிமிடங்களில் உரையாடலின் போக்கில் இவற்றைமறந்து இயல்பாகப் பேசும்போது சாதாரண நடைக்கான கேள்விகளைத் துவக்கலாம். சாதாரண நடைக்கான கேள்வி களை தொடக்கத்திலேயே கேட்டால், தலைப்புகள் சாதாரண நடைக்கு எவ்வளவுதான் ஏற்றதாக இருந்தாலும் தொடக்கநேர விழிப்புணர்வு காரணமாக எதிர்பார்க்கும் நடை கிடைக்காமற் போகலாம்.

7.5. பத்தி சொற்பட்டியல், இணை முரண் படித்தல்

எழுதப்பட்ட ஒரு பத்தியைப் படிப்பதற்கு, பேசுவதைவிட அதிக கவனம் தேவை. எனவே முன்கூறிய முதற் பகுதியின் மூவகைப் பேச்சுக்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட நடை வேறுபாடு களை அமைத்து எழுதப்பட்ட பத்திகளை படிக்கச் சொல்வதன் முலம் நடைத் தொடர்ச்சி (style continum)யில் இதையும் ஒரு புள்ளியாகக் கொண்டு அளக்கலாம்.

இதனை அடுத்து சொற்பட்டியல் படித்தலில் ஒரு பத்தியைப் படித்தலையொத்த ஓட்டம் (flowing) இன்மையால் மேலும் அதிக மான கவனம் செலுத்த வாய்ப்பிருக்கிறது. இப்பட்டியலில் நடை வேறுபாடுகள் பொதிந்த சொற்கள் இடம்பெறவேண்டும்.

இதனைவிட இணை முரண்களில் பேசுநர் கவனம் அதிகம் செலுத்துவார். ஒத்த சொற்களில் மொழியியல் மாறிகளை அமைத் துப் படிக்கச் சொல்லும்போது தகவலாளி, அம்மாறிகளை மிகக் கவனமாக வேறுபடுத்துகிறார். இல்லையெனில் அவை ஒரே சொல்போல் மாறிவிடும் சாத்தியத்தைக் கண்கூடாக அவர் காண் கிறார்.

8. /ல~ள/ நடைவேறுபாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு

நடைத் தொடர்ச்சியின் ஆறு புள்ளிகளையும் ஒரு எடுத்துக் காட்டில் காணலாம். இலக்கிய வழக்கு ளகரத்தை லகரமாக

பேச்சு வழக்கில் உச்சரிப்பது தமிழ் நாடெங்கும் பரவலாக காணப்படும் ஒரு தன்மையாகும். ஆனால் இது இயல்பான சொற்பெருக்கான சாதாரண நடையில் பயின்று வருவதைவிட ஆய்வாளருடனான சுருக்கமான கேள்வி பதில்களில் குறைவாகும். அதனைவிட தன்னைப் பற்றிய நல்ல படிவத்தை (image) ஏற்படுத்த நினைத்து பயன்படுத்தும் சிறப்பு நடையில் தவறு என்று கருதப்படும் இம்மயக்கம் குறைவாகிறது. அதனைக்காட்டிலும் எழுதப்பட்ட பத்தியில் ளகர, லகரத்தின் வரிவடிவங்கள் அவற்றை அதிகமாக வேறுபடுத்தி உச்சரிக்கும்படி தகவலாளியைச் செய்கின்றன. எழுதப்பட்ட பத்தியின் ஓட்டத்தில் தகவலாளி தன்னை மறப்பதுபோல, சொற்பட்டியலில் ஓட்டம் ஏதும் இன்மையால் தன்னை மறப்பதில்லை. எனவே இங்கே, ளகரத்தை, ஓட்டத்தின் காரணமாக லகரமாகப் படித்துவிடும் சாத்தியக்கூறு குறைவாகிறது. இறுதிப் புள்ளியான இணைமுரணில் இது இன்னும் குறைந்து விழிப்புணர்வின் உச்சநிலையைக் காட்டுகிறது.

/கள்/	/கல்/
/மூளை/	/மூலை/
/பள்ளி/	/பல்லி/

போன்ற முரண்கள், சரியாக வேறுப்படுத்தவேண்டும் என்பதை தகவலாளிக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன.

ளகரத்திற்கு பதிலாக லகரத்தை உச்சரிக்கும் எண்ணிக்கையின் விழுக்காட்டை (Percentage of frequency)வெவ்வேறு நடைகளின் ஒரு தன்மை (Feature) யாகக் கொண்டால் அதற்கான அட்டவணை கல்வியும், நடையும் பற்றிய ஓர் ஆய்வில் கீழ்க் கண்டவாறு அமைவதைக் காண்க —

	தொடக்க நிலைக் கல்வி பெற்றவர்	நடு நிலைக் கல்வி பெற்றவர்	உயர் நிலைக் கல்வி பெற்றவர்
சா.ந.	95%	83%	40%
உ.ந.	87%	80%	40%
சி.ந.	80%	71%	20%

ப.ப.ந.	65%	50%	10%
சொ.ப.ந.	50%	30%	5%
இ.மு.ப.ந.	30%	10%	0%

9. **நடையாராய்ச்சியின் பயன்:**

நடையாராய்ச்சி ஒரு மொழியியலாய்வாளனுக்கு பேச்சில் காணப்படும் எல்லா வேறுபாடுகளையும் விளக்கப்பயன்படுவதோடன்றி சமுதாயவியல் முக்கியத்துவம் கொண்டதாகும். ஒரு தனிமனிதன் அல்லது சமுதாய உட்பிரிவின் மொத்த சமுதாயத்தில் பங்கு. ஒரு சமுதாய உட்பிரிவு தனக்குள் உறவுகொள்ளும் விதம், (Intera group relation). பிறபிரிவுகளுடன் உறவுகொள்ளும் விதம் (Inter group relation) ஆகியவை நடைகளில் நன்கு பிரதிபலிக்கின்றன. எனவே நடையாராய்ச்சி சமுதாய நோக்கிலும், மொழியியல் நோக்கிலும் பயன் மிக்கதாகின்றது.

பின் குறிப்புகள்:

1. இவ்வாய்வுக்கட்டுரை "Style" Its Classification and elicitation Methods என்ற தலைப்பில் சமுதாய மொழியியல் மற்றும் இணைமொழி பற்றி மொழியியல் உயர் ஆய்வு மையம் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) 1977-இல் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் திருந்திய தமிழ் வடிவமாகும். இக்கட்டுரை உருவாகத் தூண்டுகோலாகவும், துணையாகவும் அமைந்த, மையத்திற்கும், டாக்டர். க. கருணாகரன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும். ஆயினும் இக்கட்டுரையில் காணப்பெறும் குறைபாடுகள் முழுதும் என்னைச் சார்ந்தனவேயாகும்.

2. சுருக்கக் குறியீடு:

சா.ந.	—	சாதாரண நடை
உ.ந.	—	உரையாடல் நடை
சி.ந.	—	சிறப்பு நடை
ப.ப.ந.	—	பத்தி படிக்கும் நடை
சொ.ப.ந.	—	சொற்பட்டியல் படிக்கும் நடை
இ.மு.ந.	—	இணை முரண் படிக்கும் நடை

3. துணை நின்ற நூல்கள்:

i) Basil Bernstein 1975 *Class, Codes and Control* Vol.3. Routledge & Kegan Paul, London and Bosten.

ii) Gnanam, M. 1975 The Sociolinguistic Description of Chidambaram Saiva Vellala Speech, unpublished M. A. Dissertation, Annamalai University, Annamalai Nagar.

iii) Hasan, R. 1975 Code, Register, and Social Dialect *Class. Codes and Control* Vol-2. (ed) Basil Bernstein, Routledge & Kegan Paul, London and Boston.

Joos Martin 1962 'The Five Clocks', IJAL, memoir, No. 22, Bloomington, Indiana: Indiana University.

Labov, W. 1966 *Social Stratification of English in New York City, CAL, Washington D.C.*

——— 1972 'The Study of Language in its Social Context, '*Sociolinguistics*, ed. J.B. Pride & J. Holmes, London: Penguin.

Trudgill, P. 1974 *The Social Differentiation of English in Norwich*, London : Cup.

Walt Wolfram & Ralfh W. Fasold 1974 *The Study of Socia Dialects in American English*, New Jersy : Prentice Hall. Inc.

கருணாகரன், கி. 1975 சமுதாய மொழியியல், சென்னை: பாரி நிலையம்.

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M.A., Ph.D, (Kerala), Ph.D., (Ind. U. S. A.)

டாக்டர் கு. புஷ்பவல்லி, M.A., Ph.D.,

(மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும், விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்)

பக்கம் 358) (விலை ரூ. 16/-

2. கிளை மொழியியல் (Dialectology)

டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph.D.,

(ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி, தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழிகளைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல்நூல் இந்நூல்)

பக்கம் 226) (விலை ரூ. 10/-

3. மொழித் திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. கருணாகரன், M.A., Ph.D.,

(மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எடுத்தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துரு

வாக்கம், நிலபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரூ. 7/-

4. உலக மொழிகள் — திராவிட மொழிகள் I
(Dravidian Languages)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A)

(திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம் இலக்கணம், கல்வெட்டுபோன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலக மொழிகள்' என்ற வரிசையில் அய்ந்தாவது நூல் இது).

பக்கம் 250) (விலை ரூ. /12

5. உலக மொழிகள் — திராவிட மொழிகள் II
(Dravidian Languages)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

(இருபந்திரண்டுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல்திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு, பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்று காட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலக மொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது).

பக்கம் 265) (விலை ரூ. 13/-

6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா, M. A. Ph.D.**

(இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்து கூறுகிறது)

பக்கம் 96) (விலை ரூ. 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் [Script Reform]

டாக்டர் **செ. வை. சண்முகம், M.A., M. Litt., Ph.D.**

(எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடிவத்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்யவேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. மேலும் பிறமொழிகளில் நடந்த எழுத்துச் சீர்திருத் தம் பற்றி ஒரு இயலும் எழுத்துச் சீர்திருத்தம் மொழித்திருத்தம் ஆனாலும் சமூக உணர்வுகளோடு தொடர்புடையதால் அதுபற்றி எழுத்தும் சமூகமும் என்ற இயலும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழக அரசு செய்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளது.

பக்கம் 252) (விலை ரூ. 12-50

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்பவேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல்வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவவேண்டுகிறோம்.

'மொழியியல்' இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1. வெளியீட்டாளர் & ஆசிரியர் — டாக்டர் ச. அகத்தியலிங்கம், செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், மொழியியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் 608101.

2. அச்சிட்டோர்: சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர் 608101

மொழியியல்

தொகுதி 2 எண் 3

டிசம்பர் – பிப்ரவரி 1979

உள்ளுறை

	பக்கம்
சங்க இலக்கியத்தில் வேற்றுமை உருபுகள் – ஓர் ஆய்வு	
V. S. அருள்ராஜ்	1–24
தமிழில் வினாச் சொற்கள்	
உ. ஜான்ஸி பியூலா	25–56
பேச்சும் எழுத்தும்	
செ. வை. சண்முகம்	57–85
தன்மை, முன்னிலைப் 'பன்மை'கள்	
ந. குமாரசாமி ராஜா	87–93
தமிழில் மொழித் திரிபு	
கி. கருணாகரன் கி. மு. இருளப்பன்	95–111
தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிலையாக்கம்	
இரா. பாலகிருஷ்ணன்	113–127
கிளைமொழிகள் வேறுபடும் முறைகள்	
கோ. சீனிவாசவர்மா	129–140
மொழிநடை – பாகுபாடுகளும், வெளிக்கொணரும் முறைகளும்	
மு. ஞானம்	141–154